ISSN 2235-9829

# அர்த்தம் - 1

## தை 2012 - காலாண்டு இதழ்


| | | |
|---|---|---|
| 1 | எனது நினைவுகளில் பேராசிரியர் சிவத்தம்பி<br>- யமுனா ராஜேந்திரன் | 2 |
| 2. | சேர் பொன்னம்பலம் அருணாசலம்: ஒரு பன்முக பார்வை<br>- சி.அ. யோதிலிங்கம் | 7 |
| 3. | கட்டிளம் பருவத்தினரின் உளவியல் சிக்கல்கள்<br>- அரசி விக்கினேஸ்வரன் | 20 |
| 4. | ஈழத்து தமிழிலக்கிய வரலாற்றில் விபுலானந்த அடிகளாரின் பணிகள்<br>- தமிழினி ஜெகநாதன் | 25 |
| 5. | கல்வியே தனிமனிதனின் உயர்விற்கும் சமுதாய மேம்பாட்டிற்கும் ஆதாரம்<br>- சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் | 28 |
| 6. | பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் வெளிநாட்டுக் கொள்கை<br>- சங்கீத்தா அருள்ஞானசீலன் | 33 |
| 7. | இலங்கையில் பொதுத்துறை நிர்வாகம்<br>- பா. யூட் | 37 |
| 8. | இலங்கையின் உள்ளூராட்சி அமைப்புக்கள்<br>- க. பிறேம்குமார் | 40 |
| 9. | சமகால சூழலில் இளம் தலைமுறையினரின் தீர்மானம் எடுத்தலும் அரசியலை விளங்கிக் கொள்வதும் எதிர்காலத்திற்கான நோக்கு<br>- கே.ரீ. கணேசலிங்கம் | 44 |
| 10. | கோபாலபிள்ளை அமிர்தலிங்கத்துடன் (கொழும்புப் பல்கலைக்கழக பொருளியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர்) ஒரு நேர்காணல்<br>- அ. மேடோனா | 51 |
| 11. | பாசம் (சிறுகதை)<br>- ப. கபிலன் | 59 |
| 12. | இதயச் சுமை (கவிதை)<br>- வட்டூர் மருதுவேல் சிவா | 62 |
| 13. | ஒரு அடிமையின் கனவு (கவிதை)<br>- எச்.டபிள்யூ. லோங்ஃபெலோ (தமிழில்: தமிழினி யோதிலிங்கம்) | 63 |
| 13. | எந்தன் பெயராலே (கவிதை)<br>- கிரேஸ் நிக்கலஸ் (தமிழில்: தமிழினி யோதிலிங்கம்) | 65 |


கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

**சமூக விஞ்ஞான ஆய்வுமன்றம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரிய தலையங்கம்

சமூக விஞ்ஞான ஆய்வு மன்றத்தின் சார்பில் இச்சஞ்சிகையை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகின்றோம். கடந்த இரண்டு வருட காலமாக சமூக விஞ்ஞான மன்றம் செயற்படுகின்றபோதும் தற்போது தான் சஞ்சிகையை வெளியிடக் கூடிய சூழல் கிடைத் திருக்கின்றது.

இச்சஞ்சிகையை வெளிக் கொணர்வதில் ACA கல்வி நிலைய ஆசிரியர்களும், முகாமைத்துவத்தைச் சேர்ந்தவர்களும் அதிகளவில் ஒத்துழைப்பினை வழங்கியுள்ளனர். குறிப்பாக முகாமைத்துவ இயக்குனர்களான ஆசிரியர் அஜித்குமார், ஆசிரியர் பகீரதன், சட்டத்தரணி சதூர்டீன் ஆகியோரின் பங்களிப்பு அளப்பரியது. அவர்கள் அனைவருக்கும் நன்றிகள்.

சஞ்சிகைக்கு ஆக்கங்களை நாம் கேட்டபோது பல புலமையாளர்கள் மனமுவந்து நேரகாலத்துடன் தந்திருக்கின்றனர். அவர்களுக்கும் நன்றிகள்.

சஞ்சிகையை வெளியிடுவது என நாம் தீர்மானித்த போது மூன்று நோக்கங்களை நாம் வரித்துக்கொண்டோம். மாணவர்களின் பாடப்பரப்பில் உள்ள விடயங்களை பரந்த பரப்பில், கற்கக் கூடிய ஆக்கங்களைக் கொண்டு வருதல், உலகின் இடம் பெறும் அன்றாட சமூக, பொருளாதார அரசியல் மாற்றங்களை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்துதல், அவை தொடர்பான ஆய்வுகளையும் விவாதங்களையும் ஆரம்பித்து வைத்தல் என்பனவே அவையாகும். இதனால் தான் சஞ்சிகையின் உள்ளடக்கத்தினை அரசியல் , பொருளாதாரம், சமூகம், உளவியல், பண்பாடு, கலாச்சாரம், கல்வி என பரந்த தளத்திற்கு விரிவுபடுத்தி யுள்ளோம்.

இவ் முதலாவது சஞ்சிகையில் எமது நோக்கம் ஓரளவு வெற்றி கண்டிருக்கின்றது. பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரியின் முன்னாள் விரிவுரையாளர் சிவமகாலிங்கம், ஊடகவியலாளர் பிருந்திரன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகவியல் பீடத் தலைவர் கே. ரீ. கடே ணசலிங்கம், ஆசிரியர் இந்திரகுமார் அரசியல் ஆய்வாளர் சி. அ. யோதிலிங்கம், கவிஞர் அரசி விக்னேஸ்வரன் ஆகியோர் சிறந்த படைப்புக்களைத் தந்திருக்கின்றனர். கொழும்பு பல்கலைக்கழக பொருளியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கோ.அமிர்தலிங்கத்தின் நேர்காணல் சமகால பொருளாதார நெருக்கடியினை நன்கு விளக்குகின்றது. எதிர்காலத்தில் மேலும் சிறந்த படைப்புக்களைத் தருவதற்கு முயற்சிக்கின்றோம்.

நாம் ஆய்வு நிலைப்பட்ட சஞ்சிகைகளினை வெளியிடப் போகின்றோம் எனக் கூறியவுடன் பேராசிரியர் சிவத்தம்பி மிகவும் சந்தோஷப்பட்டார். தன்னால் முடிந்த அனைத்து ஒத்துழைப்புகளையும் தருவதாக உறுதி கூறினார். இன்று அவர் இல்லை. அவருடைய இழப்பு சாதாரண ஒன்றல்ல. தமிழ் சந்தித்த பேரிழப்பு. அந்தத் துயரத்தில் நாமும் பங்கு பெறுகின்றோம். எமது முதலாவது இதழை அவருக்கு காணிக்கையாக்குவதில் மனநிறைவடைகின்றோம்.

நன்றி

ஆசிரியர் குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்த்தம் - 1

**தை 2012 - காலாண்டு இதழ்**

**ஆசிரியர் குழு**

ப. கபிலேஸ்வரன்

க. பிரேம்குமார்

அ. மெடோனா

அ. மொடஸ்ரா

நிஷாந்தினி

**ஆலோசனை**

சி. அ. யோதிலிங்கம்

வெளியீடு

சமூக விஞ்ஞான ஆய்வுமன்றம்

A.C.A. கல்வி நிலையம், 55, புனித லூசியா வீதி, கொட்டாஞ்சேனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது நினைவுகளில் பேராசிரியர் சிவத்தம்பி


யமுனா ராஜேந்திரன்

பேராசிரியர் கா. சிவத்தம்பியை நான் மூன்று முறை நேரில் சந்தித்திருக்கிறேன். எண்ணற்ற முறைகள் தொலைபேசியில் பேசியிருக்கிறேன். முதல் சந்திப்பு மிகவும் நெகிழ்ச்சியானது. அது அவரே என்னைத் தேடி வந்ததாக அமைந்தது. எனக்கு மிகுந்த சந்தோஷத்தையும் நெகிழ்ச்சியையும் தந்த அனுபவம் அது. சமகால மார்கசியம் தொடர்பாக மேற்கில் வந்த நூல்கள் தொடர்பாக என்னிடம் பேசுவதற்காகவே அன்று அவர் வருகை தந்தார். சோவியத் யூனியன் வீழ்ந்து உலக மார்க்சியர்களிடம் ஒரு மனச்சோர்வு ஏற்பட்டிருந்த நேரம் அது. நாற்காலி மேசை கூட இல்லாத, புத்தகங்களும் உலகத் திரைப்பட ஒளி நாடாக்களும் இறைந்து கிடந்த ஒரு சிறிய தொலைக்காட்சிப் பெட்டியோடு தனியாளாக சிறிய வாடகை அறையில் நான் வாழ்ந்து வந்த நாட்கள் அது. எனது படுக்கையில் அமர்ந்தபடி அவர் என்னுடன் பேசிக் கொண்டிருந்தார். எனது அறைக்கு வருகிற குறுகலான மாடிப்படிகளை அவர் மூச்சுவாங்கிய நிலையில் கைத்தடியூன்றி ஏறி வந்தபோது கைத்தாங்கலாக அவருடன் வந்த இளைஞரும் நானும் அவரை எனது அறைக்குக் கூட்டிச் சென்றது இப்போதும் எனது ஞாபகத்தில் நிழலாடுகிறது.

பிற இருமுறையும் நேர்காணலுக்காக அவரைச் சந்தித்தேன். பின் சோவியத் மார்க்சியம் தொடர்பாக ஒரு முறையும் ஈழப் போராட்ட இலக்கியம் தொடர்பாகப் பிறிதொரு முறையும் அவரை நான் சந்தித்தேன். அவரோடு உரையாடலில் ஈடுபட்ட அளவிலும் அவர் பற்றி நினைக்கும்போது எனக்கு உடனடியாக ஞாபகம் வருபவை அவரது பல்துறை சார்ந்த ஈடுபாடு தான். நெறிசார்ந்த கல்வியியலாளர் எனும் அளவில் நாடகமும் இலக்கியமும் பயின்ற அவர் பல்கலைக்கழகத்திலும் அதனையே தனது மாணவர்களுக்குக் கற்பித்த போதிலும், இயல்பில் அவர் ஈழ அரசியல், கலாச்சார வெளியில் ஒரு நடவடிக்கையாளராகவே இருந்திருக்கிறார். எனில் அதில் மிகையில்லை. மார்க்சிய இலக்கிய விமர்சனத்தில் அவர் ஈடுபாடு காட்டியது போலவே காலமாற்றத்தில் தேசிய இலக்கிய விமர்சனத்திலும் அவர் ஈடுபாடு காட்டினார். அவரளவில் அவர் தேசியத்திற்கும் மார்க்சியத்திற்கும் இடையில், இணக்கம் காண முடியும் என நினைத்தார். இலக்கியம், அரசியல் போன்றவற்றில் இருந்த அதே ஈடுபாடு அவருக்கு நிகழ்கலைகளான நாடகத்தின் மீதும் காட்சி ரூபக் கலையான சினிமாவின் மீதும் இருந்திருக்கிறது. எம்.ஜி ராமச்சந்திரன் குறித்து அவர் எழுதிய குறுநூல் சினிமாவின் மாபெரும் சக்தி பற்றி இடதுசாரிகள் அக்கறை காட்டாத ஒரு சூழலில், அந்த ஊடகத்தின் முக்கியத்துவத்தை அவர்களுக்கு அறிவுறுத்திக் காட்டிய மிக முக்கியமான நூலாக இருந்தது.

சிவத்தம்பியுடனான எனது இரு நேர்காணல்களும் முறையே பிரான்ஸ் உயிர்நிழல், இங்கிலாந்து குளோபல் தமிழ் நியூஸ் போன்றவற்றில் வெளியான நிலையில், சிவத்தம்பியின் கோட்பாட்டு எழுத்துக்கள் குறித்து விரிவாக எழுத நினைப்பதால் அதனை நான் இங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நூலகம்

தவிர்க்கிறேன். அவர் மீது இருதரப்பு அரசியல் நம்பிக்கையாளர்கள் கொண்டிருக்கும் விமர்சனங்கள் குறித்து மட்டும் சில விவரங்களைப் பகிர்ந்து கொள்ளலாம் என நினைக்கிறேன். சிவத்தம்பி விடுதலைப்புலிகள் ஆதிக்கம் செலுத்திய காலத்தில் விடுதலைப்புலிகளது சார்பாளராகவே இருந்தார். விடுதலைப்புலிகள் வீழ்ச்சியின் பின், பெரும்பாலும் அரச சார்பாளர்கள் கலந்து கொண்ட கொழும்பு சர்வதேசத் தமிழ் எழுத்தாளர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு அவர் ஆசி வழங்கினார். மேலாக, முதலில் நான் ஒரு இலங்கையன் என்றும், பிற்பாடு தான் ஒரு தமிழன் என்றும் பிரகடனப்படுத்தினார்.

ஈழத்தமிழர் பிரச்சினையின் அன்றைய தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி, நடைபெற்ற படுகொலையை அவமானகரமான சாட்சியமாக நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது தெரிந்தும், கலைஞர் கருணாநிதியை அவர் உலகத் தமிழர்களின் தலைவர் என உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டு மேடையில் விளித்துக் கலைஞரைக் குளிர்வித்தார். ஈழத் தமிழர் பிரச்சினையைப் பொறுத்து சிவத்தம்பி அவர்களிடம் நேர்ந்த இந்த அரசியல் மாற்றம் என்பது தலைகீழான மாற்றமாக இருந்தது. அதுவும் விடுதலைப் புலிகள் இருந்த வரையிலும் தமிழ் தேசியத்தை ஆதரித்தவராக இருந்து வி[illegible]டு, விடுதலைப் புலிகளின் அழிவின் பின் அவர் முதன்மையாக இலங்கை தேசியராகத் தம்மை முன்னிறுத்தியது அவரது ஆளுமையின் வீழ்ச்சியாகவே கருத[illegible] வேண்டும்.

விடுதலைப் புலிகளின் காலத்தில் அவர் யாழ் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தார். இன்னும் விடுதலைப் புலிகளிடம் மரியாதை பெற்றவராகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களிடம் உரையாடக் கூடியவராகவும் அவர் இருந்தார். விடுதலைப்புலிகளால் கடத்திக் கொல்லப்பட்டவராக இருந்த, தமது மாணவியாகவும் இருந்து தன்னிடம் நாடகம் பயின்ற செல்வியின் சார்பாக இவர் தலையிட வேண்டுவது என்பது மாணவர் சமூகத்தினால் எதிர்பார்க்கப்பட்டது. யாழ் பல்கலைக்கழக மாணவர் தலைவர் விஜிதரன், யாழ் பல்கலைக்கழக உடற்கூற்றுப் பேராசிரியர் ரஜினி திரணகாமா போன்றவர்கள் கொல்லப்பட்ட போதும் ஒரு கல்வியாளராக அவர் வெளிப்படையாக மாணவர்களுக்கும், கல்வியாளர்களுக்கும் குரல் தந்திருக்க வேண்டும் என்பதனை மார்க்சியர்களும், மாணவர் சமூகமும், எதிர்பார்ப்பது என்பது இயல்பானது. இந்தப் படுகொலைகள் தொடர்பாக அவர் மௌனம் காத்தார் என்பது அவர் மீதான சிந்திப்பவர்களது குற்றச்சாட்டாக இருந்தது.

நம் மீதான இந்த விமர்சனத்தைப் பற்றி அவர் அறிந்தேயிருந்தார். பின் சோவியத் மார்க்சியம் தொடர்பான உரையாடல் வேளையில், செல்வி பிரச்சினையில், தனது மாணவியான செல்வியைக் காப்பாற்ற அவர் ஏன் விடுதலைப் புலிகளிடம் உரையாடவில்லை என்பதை நான் கேட்டபோது, அவர் தான் விடுதலைப் புலிகளிடம் இது பற்றி உரையாடிக் கொண்டிருந்த வேளையிலேயே, வெளிப்படையாக இது அரசியல் பிரச்சினையாக விடுதலைப்புலிகள் இறுக்கமான நிலைபாட்டை மேற்கொண்ட போது, தன்னால் ஏதும் செய்ய முடியாமல் போனது என்பதாகச் சொன்னார். விடுதலைப் புலிகள் தம் மீதான அனைத்து விதமான விமர்சனங்களுக்கும் படுகொலை ஒன்று தான் பதில் எனும் நிலைமையில் இயங்கிக் கொண்டிருந்த வேளையில், சிவத்தம்பி என்ன செய்திருக்க முடியும் என்பதனோடு சேர்த்துத் தான் இப்பிரச்சினை பார்க்கப்பட வேண்டும் என்றே நான் இன்று நினைக்கிறேன்.

இந்த இடத்தில் ஒரு தரவைப் பகிர்ந்து கொள்ள விழைகிறேன். கவிஞர் செல்வியின் பிரச்சினை என்பது, எழுத்தாளர் சுதந்திரத்திற்கான நோர்வே பென் அமைப்பின் விருது செல்விக்கு வழங்கப்பட்டதனையடுத்து, அது சர்வதேசப் பிரச்சினையாகவும் ஆகியது. என்னளவில் எனது தோழனும் நண்பனுமாகிய அசோக் யோகனது எதிர்கால வாழ்வின் பிரச்சினை சார்ந்து, இது ஒரு கொடும் இருத்தலியல் அவலமாகவும் இருந்தது. செல்வி அசோக்கை நேசித்தவர். அசோக் மட்டுமல்ல, செல்வியின் குடும்பத்தவரும் கூட கவிஞர் செல்வியின் மரணத்தை உறுதிப்படுத்திக் கொள்ள முடியாத நிலையில் செல்வியின் வருகைக்காக இவர்கள் முடிவற்ற காத்திருத்தலோடு இருந்தார்கள் என்றே சொல்லல் வேண்டும். செல்வி மரணமுற்றார் என உறுதிப்படுத்திக் கொள்வது கூட அவர்களுக்கு இருந்திருக்க முடியும்.

இச்சூழலில், இலண்டன் வந்திருந்த தமிழகத்தின் மிக முக்கியமான மார்க்சியக் கோட்பாட்டாளரும் மனித உரிமையாளரும் (அவரது ஒப்புதலில்லாமல் அவரது பெயரை நான் உபயோகிக்க விரும்பவில்லை) நானும் அம்னஷ்டி இன்டர்நேசனல் அமைப்புக்கு அவரது நண்பரொருவரைப் பார்க்கச் செல்ல வேண்டியிருந்தது.

அத்தருணத்தில் இலங்கை விவகாரங்களுக்குப் பொறுப்பானவரிடம் செல்வியைப் பற்றிக் கேட்ட போது, வாய்மொழியில் அவர் கொலை செய்யப்பட்டதனை உறுதிப்படுத்திய விடுதலைப் புலிகள் தரப்பினர் அதனை ஆவணமாகப் பதிவு செய்ய விரும்பவில்லை என தெரிவித்தார். இந்த விவரத்தை நான் அசோக்குக்கு அறிவித்தேன். இது போலவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றளவிலும் எவ்வாறு நிகழ்ந்தது எனத் தடம் காணப்படமுடியாத மரணங்களாக கோவிந்தனதும் ரஜினி திரணகாமாவினதும் மரணங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. இந்த வலி சுமந்தவர்கள் சிவத்தம்பியின் மீதான தமது விமர்சனங்களையும் கோபத்தையும் கொண்டிருப்பது தவிர்க்கவியலாதது. இத்தகைய வலிகளை விடுதலையின் பெயரில் ஆயத்தப் போராட்டம் நடத்திய அனைத்து இயக்கங்களும் அனாதரவான மனிதர்கள் மீது சுமத்தியே வந்திருக்கின்றன.

புகாரிகள் மீதான விசாரணைகளை, டிராட்ஸ்க்கியின் படுகொலைகளை அறிந்தவர்கள் கூட இன்று ஸ்டாலினை ஆதரிப்பது உண்டு. கலாச்சாரப் புரட்சி அறிவாளிகளின் மீதும் கலைஞர்கள் மீதும் சுமத்திய வன்கொடுமைகளை விமர்சித்துக் கொண்டே மாவோவை ஆதரிப்பவர்கள் உண்டு. சீனாவுக்கும் அவரது மக்களுக்கும் அவர் சோசலிசத்தைக் கொணர முயன்றார் என்ற காரணத்துக்காக சிலே நாட்டின் கம்யூனிச விரோதியின் கொலைகளை மாவோ ஆதரித்ததை மறப்போரும் உண்டு. இடதுசாரி மரபென்பதும் புரட்சிகர மரபென்பதும் இப்படித்தான் இருந்து வந்திருக்கிறது. சிவத்தம்பியும் இந்த மரபில் வந்தவர் தான்.

சிவத்தம்பியை அவரது அரசியல் தவறுகளுக்காக, அவரது தலைகீழ் மாற்றத்துக்காக நாம் புறக்கணிக்க முடியுமானால், என்னளவில் ஒரு காலத்தில் தலித் விடுதலையும் மனித உரிமையும் பேசிய, இன்று இலங்கையில் இணக்க அரசியல் தான் தேவை என்று பேசுகிற, கொல்லப்பட்ட 40,000 தமிழ் வெகுமக்கள் தொடர்பாக மனித உரிமை அரசியலை முன்னெடுக்காத, அ.மார்க்ஸைப் புறக்கணிக்க வேண்டியிருக்கும். ஈழம் குறித்த தனது ஆரம்ப எழுத்துக்களில் தனிநாட்டுக்காகப் பேசுகிற தொனியையும், விடுதலைப்புலிகள் ஆதரவு நிலைபாட்டையும் கொண்டிருந்தது. இன்று இலங்கை அரச ஆதரவாளர்களின் மேடையைப் பகிர்ந்து கொள்கிற, 40,000 வெகுமக்கள் கொல்லப்பட்டதற்கு எதிரான தமிழகத்தின் மிகப்பெரும் எழுச்சியின் போது மனித உரிமை அரசியல் பேசாது மௌனம் காக்கிற எஸ்.வி.ராஜதுரை போன்றோரின் எழுத்துக்களையும் முற்றிலும் புறக்கணிக்க வேண்டியிருக்கும். இப்படி நாம் புறக்கணித்துக் கொண்டு போனால் நாம் தேர்ந்து கொள்ளக் கூடிய கோட்பாட்டாளர்கள் மிகச் சொற்பமாகவே எஞ்சி நிற்பார்கள். எனில், பொதுவாகக் கோட்பாட்டாளர்களை, குறிப்பாகக் கோட்பாட்டாளர் எனும் அளவில் சிவத்தம்பியை எவ்வாறு மதிப்பிடுதல் சாத்தியம்?

கோட்பாட்டாளர்களிடம் இரு விதமான பண்புகள் செயல்படுகின்றன. முதலாவதாக அவர்கள் படிப்பாளிகள். தேடித்தேடி சுயமான மதிப்பீடுகளை உருவாக்கிக் கொள்ளப் படித்தவர்கள். மனித குலத்திற்கும், அவர்கள் வாழ நேர்ந்த சமூகத்துக்கும் உரிய பிரச்சினைகள் தொடர்பான நுட்பமான சிடுக்குகளை அடையாளம் கண்டவர்கள், அதிலிருந்து மீள்வது குறித்தும் சிந்தித்தவர்கள். பிறிதொற்று அவர்கள் தேர்வு செய்யும் அரசியல் நிலைப்பாடுகள். கோட்பாட்டாளர்களின் அரசியல் நிலைப்பாடுகளை நாம் ஏற்க முடியாவிட்டாலும், அவர்களது கோட்பாட்டுப் பங்களிப்புகளை நாம் நிராகரிப்பது என்பது சாத்தியமில்லை. நாசிக் கட்சி உறுப்பினராகவும் ஒருபோது இருந்தார் என விமர்சிக்கப்படும் ஹைடேக்கரின் இருத்தலியல் கேள்விகளை எவரும் மறுதலித்து விட முடியாது நீட்சேயிடம் அது, கிறிஸ்தவ மத நிறுவனத்தின் அழுத்தும் அடிமைத்தனத்திலிருந்து மீட்டுக் கொள்ளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனது எத்தனமாக வெளிப்படுகிறது. தமிழ்ச் சூழலில் மிகப்பெரிய அறிவுத்துறை விவாதங்களைத் தூண்டியவர்களாக, அன்றைய சமூகத்தின் நெருக்கடிகளைப் புரிந்து கொள்ள ஒளிபாய்ச்சியவர்களாக இருந்தவர்கள் என நாம் எஸ்.என்.நாகராஜன், கோவை ஞானி, எஸ்.வி.ராஜதுரை, தமிழவன், அ.மார்க்ஸ் எனச் சொல்லிக் கொண்டு போக முடியும். அதே வகையில் ஈழ நிலைமையில் கைலாசபதி, சிவத்தம்பி, தளையசிங்கம் போன்றவர்களைக் குறிப்பிட முடியும். கல்வித்துறைசார் சமூகத்தினுள் மார்க்சிய ஆய்வுகளின் முன்னோடிகளாக இறுகிப்போன யாழ்ப்பாண சாதிய சமூகத்தில் உடைப்பினை ஏற்படுத்திய ஆய்வுகளை மேற்கொண்டவர்களாக, மரபான தமிழ் இலக்கியத்தை கலாச்சாரப் பொருள் முதல் வாதப் பார்வையில் பார்த்தவர்களாக அன்றன்றைய அறிவுப்புல வளர்ச்சி குறித்து எமக்கு அறிவித்தவர்களாக என மிகப்பெரும் பாத்திரத்தினை இவர்கள் வகித்திருக்கிறார்கள். இதுவே எந்தச் சமூகமும் தொடர்ந்து முன்னோக்கிச் செல்வதற்கான அடிப்படைகள். அந்தப் பங்களிப்பை அவர்கள் செய்திருக்கிறார்கள் என்பதை வரலாறு முழுக்கவும் நாம் ஏற்றுக் கொண்டு தான் வந்திருக்கிறோம்.

சமூகத்தில் இவர்கள் வகிக்கும் இந்த வகிபாகத்தை ஏற்றுக் கொண்டு, அரசியல் தவறுகள் என்பது எமது எல்லோருக்கும் நேர்வது தான் எனும் புரிதலோடு, அது குறித்த விமர்சனங்களோடு, இவர்களது தவறுகளைக் கடந்து போவதற்கு இவர்களிடமிருந்தே கற்றுக் கொள்வோம். எதிர்மறை அனுபவங்களிலிருந்து கற்றுக் கொள்வதற்கான வாய்ப்பை அவர்கள் நமக்கு அளித்திருக்கிறார்கள் என்ற வகையில் நாம் அதனைக் கடந்து செல்ல முயலுவோம். இதுவே பேராசிரியர் சிவத்தம்பி போன்றவர்களை மதிப்பிடுவதற்கான மிகச் சிறந்த வழிமுறையாக இருக்கும் என நினைக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேர். பொன்னம்பலம் அருணாசலம்

## ஒரு பன்முகப் பார்வை*

**- ஆய்வுரை சி.அ. யோதிலிங்கம் -**

சேர். பொன்னம்பலம் அருணாசலத்தின் நினைவு தினத்தையொட்டி ஆய்வுரை ஒன்றை நிகழ்த்துவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். நான் மிகவும் மதிப்பு வைத்திருக்கும் ஒரு அரசியல் தலைவரைப் பற்றி உரையாற்றக் கிடைத்தமையிட்டு எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. தமிழ் சமூகத்தைப் பொறுத்தவரை தற்போதைய காலம் என்பது எல்லாவற்றையும் மீள்விக்கும் காலம். தமிழர் வரலாற்றை மீள்வித்து எமது ஆளுமைகளை மக்கள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டிய பொறுப்பு இன்றைய தலைமுறைக்கு உள்ளது. தமிழ்ச் சங்கம் அந்த முயற்சிகளில் இறங்கியமையிட்டு அரசியல் ஆய்வுத் துறையைச் சேர்ந்தவன் என்ற வகையில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சேர். பொன்னம்பலம் அருணாசலம் ஒரு பன்முகத் தன்மை வாய்ந்த அரசியல் தலைவர். இலங்கைத் தீவில் பல்வேறு அரசியற் போக்கின் ஆரம்பங்களுக்கு அவரே காரணகர்த்தாவாக இருந்திருக்கின்றார். இலங்கையில் தேசிய அரசியல். சமூக மாற்றத் திற்கான அரசியல். தமிழ் அடையாள அரசியல் என்பவற்றை ஆரம்பித்து வைத்தவர் இவரேயாவார். இவற்றுக்கப்பால் கல்வித்துறையில் தாய் மொழிக் கல்வி, இலங்கைக்கான பல்கலைக்கழகம் உருவாக்குதல் என்பவற்றில் இவரது பணிகள் மிகவும் மகத்தானவை. இவற்றைவிட ஒரு சிறந்த அரசாங்க நிர்வாகியாகவும் அவர் இருந்திருக்கின்றார். பதிவாளர் நாயகம் பதவி அவர் வகித்த அரசாங்கப் பதவிகளில் உச்சப்பதவி. இப்பதவி காரணமாக சட்டசபையில் உத்தியோகப் பற்றுள்ள உறுப்பினராகவும் இவர் கடமையாற்றியிருக் கின்றார்.

இவருடைய பன்முகப் பக்கங்கள் ஒவ்வொன்றையும் அந்தந்த கால வரலாற்றுப் பின்புலத்துடன் இணைத்து நாம் விரிவாக ஆராய்தல் வேண்டும். அப்போதுதான் அவரது ஆளுமையின் வீச்சத்தை எம்மால் முழுமையாக தரிசிக்க முடியும்.

வரலாறு என்பதே ஒருவகை அஞ்சலோட்டம்தான். அஞ்சலோட்டத்தில் பிரதான பாத்திரம் எடுத்து ஓடும் ஆளுமைகள் ஒவ்வொன்றும் எமக்கு முக்கியமானவை. அந்த ஆளுமைகளின் செயற்பாட்டு வீச்சத்தை தரிசிக்காமல் வரலாற்றினை முழுமையாக எம்மால் புரிந்துகொள்ள முடியாது. இந்தவகையில் காலனித்துவத்திற்கெதிரான தேசிய அரசியல், சமூக மாற்றத்திற்கான அரசியல், தமிழ் அடையாள அரசியல் என்பவற்றின் வரலாற்றுப் போக்கினை அருணாசலத்தை விட்டு விட்டு, எம்மால் பார்க்க முடியாது. ஏனெனில் இவற்றில் தொடக்கப் புள்ளியாக இவரே இருந்திருக்கின்றார்.

---

* கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் நடைபெற்ற அருணாசலம் நினைவு தினத்தின் போது ஆற்றிய உரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருணாசலத்தின் பன்முக ஆளுமையை பொன்னம்பலம் பரம்பரையின் ஆளுமை களோடும் இணைத்துப் பார்க்க வேண்டும். குறிப்பாக சேர். முத்துக்குமாரசுவாமி, கலாயோகி ஆனந்த குமாரசுவாமி, சேர் பொன்னம்பலம் இராமநாதன் ஆகியோருடன் இணைத்துப் பார்க்க வேண்டும். இவர்களில் இராமநாதனின் சிந்தனைகள் சற்று வேறானதாக இருந்தாலும் சேர். முத்துக்குமாரசுவாமி, கலாயோகி ஆனந்த குமாரசுவாமி என்பவர்களின் சிந்தனைகளுக்கும் அருணாசலத்தின் சிந்தனைகளுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு உண்டு. இவ் இருவர்களினது சிந்தனைகளின் தொடர்ச்சியாகவே அருணாசலம் இருந்திருக்கின்றார்.

மேற்கூறிய இருவரும் ஆசியத் தேசிய வாதத்தில் அக்கறை செலுத்தினர். ஐரோப்பிய சிந்தனைகளுக்கு எதிராக ஆசியச் சிந்தனைகளை முன்னிறுத்தினர். கலாயோகி ஆனந்தக் குமாரசுவாமி ஆசியச் சிந்தனைகளை மீள்விக்கும் ஒருவராகவே தன்னை நிலைநிறுத்தியிருந்தார். அருணாசலத்தின் பங்கு ஐரோப்பிய சிந்தனைகளில் சாதகமானவற்றை தேர்ந்தெடுத்து ஆசியச் சிந்தனையுடன் இணைத்து அவற்றை வளர்த்தெடுத்தமையாகும். ஐரோப்பிய சிந்தனையின் தாக்கம் இல்லாமல் காலனித்துவத்திற்கெதிரான தேசிய அரசியலையோ, சமூக மாற்றத்திற்கான அரசியலையோ, தமிழ் அடையாள அரசியலையோ, தாய்மொழிக் கல்வி இயக்கத்தையோ அவரினால் முன்னெடுத்திருக்க முடியாது. சேர். பொன்னம்பலம் அருணாசலத்தின் பன்முக ஆளுமைகளை ஆராய்வதற்கு முன்னர் அவரின் வரலாற்றினைப் பார்ப்போம்.

சேர். பொன்னம்பலம் அருணாசலம் மானிப்பாயைச் சேர்ந்த பொன்னம்பல முதலி யாருக்கும் செல்லாச்சி அம்மையாருக்கும் மகனாக 1853ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 14ஆம் திகதி பிறந்தார். இவரது தாய் மாமனாரான சேர். முத்துக்குமாரசுவாமியின் கண்காணிப்பில் கொழும்பிலேயே வளர்ந்தார். கொழும்பு றோயல் கல்லூரியில் தனது கல்வியைத் தொடர்ந்தார். இங்கு கல்வி கற்றபோது இராணி புலமைப் பரிசிலையும் பெற்றிருந்தார்.

கல்லூரியின் அதிபர் டாக்டர் பாக்குரப்போக் '*அருணாசலத்தைப் போல சாமர்த் தியமும் விவேகமும் வாய்ந்த இளைஞனைக் காணவேயில்லை*' எனக் கூறுகின்ற அளவிற்கு பாடசாலைக் காலத்திலேயே பன்முக ஆளுமையுள்ளவராக விளங்கினார். 1870இல் புலமைப் பரிசில் பெற்று இங்கிலாந்து சென்று கேம்பிரிஜ்ட் கிறைஸ்ட் கல்லூரியில் உயர் கல்வியைக் கற்றார். பவுண்டேக்ஷன் புலமைப் பரிசிலைப் பெற்று கணிதத்திலும் புராதன இலக்கியத்திலும் சிறந்த சித்திகளைப் பெற்றார்.

அருணாசலத்திற்கு சட்டத்தரணியாவதே நோக்கமாக இருந்தது. ஆனால் அவரது தாய் மாமனாரான சேர். முத்துக்குமாரசுவாமியின் வற்புறுத்தலின் பேரில் 1875இல் சிவில் சேவை பரீட்சைக்கு தோற்றினார். இப்பரீட்சையில் முதன்முதலாக சித்தியடைந்த இலங்கையர் இவரேயாவார்.

1875 ஏப்பிரலில் தனது உயர் கல்வியை முடித்து இலங்கை திரும்பிய அருணாசலம் அரச சேவையில் அலுவலராக இணைந்தார். முதலில் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் பணியாற்றிய இவர் கண்டி பொலிஸ் நீதி மன்றத்திலும் தொடர்ந்து இலங்கையின் பல பகுதிகளிலுள்ள நீதிமன்றங்களிலும் அலுவலராக பணிபுரிந்தார். இவ்வனுபவம் காரணமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பில் மாவட்ட நீதிபதியாக கடமையாற்றும் சந்தர்ப்பமும் இவருக்கு கிடைத்தது. இவ் அனுபவத்தைப் பயன்படுத்தி "*சிவில் சட்டச் சுருக்கம்*" என்ற நூலை எழுதினார். மாவட்ட நீதிபதி பதவி வகித்த காலத்தில் தான் அப்போது தேசாதிபதியாக இருந்த சேர். ஆதர் கோடன் இவரை பதிவாளர்நாயகமாக நியமித்தார். பல்வேறு நுணுக்கங்களூடான குடிசன மதிப்பீட்டு முறையினை அறிமுகப்படுத்தினார். இப்பதவியை வகித்த காலத்திலேயே சட்டசபையில் உத்தியோகப்பற்றற்ற உறுப்பினராகவும் விளங்கினார்.

1913ஆம் ஆண்டு தனது 60ஆவது வயதில் அருணாசலம் அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்றார். இவரது அரசாங்க சேவையைப் பாராட்டி ஐந்தாம் ஜோர்ஜ் மன்னர் பக்கிங்காம் அரண்மனையில் வைத்து இவருக்கு சேர் பட்டம் வழங்கினார்.

ஓய்வுபெற்றதைத் தொடர்ந்து அருணாசலம் அரசியலில் காலடி வைத்தார். இவர் முதலில் பணியாற்றியது ஏழைத் தொழிலாளர் மத்தியிலேயே. அவர்களின் மேம்பாட்டிற்காக ***1915ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29ஆம் திகதி சமூக சேவைச் சங்கத்தினை உருவாக்கினார்.*** அதன் தலைவராகவும் பொறுப்பேற்றார். 1915ஆம் ஆண்டு சிங்கள - முஸ்லிம் கலவரத்தைத் தொடர்ந்து தேசிய இயக்க அரசியலிலும் தன்னை ஈடுபடுத்தினார். சமூக மாற்றத்திற்கான அரசியல், தேசிய இயக்க அரசியல் என இரண்டு துறைகளில் இவரது அரசியல் பயணம் தொடர்ந்தது.

தேசிய இயக்க அரசியலுக்காக 1917 டிசம்பரிலும் 1918 டிசம்பரிலும் இரு மாநாடுகளை ஒழுங்கு செய்தார். ***1919ம் ஆண்டு யூன் மாதம் 25ஆம் திகதி இலங்கைத் தொழிலாளர் சேமாவிருத்திச் சங்கத்தை உருவாக்கினார். இதன் தலைவராக அருணாசலமும் செயலாளராக பெரிசுந்தரமும் பதவியேற்றனர்.*** இச்சங்கம் 1920இல் இலங்கைத் தொழிலாளர் சம்மேளனமாக பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

***1919ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11ஆம் திகதி*** அருணாசலத்தின் முயற்சியினால் இலங்கையின் முதலாவது தேசிய இயக்கமான இலங்கைத் தேசிய காங்கிரஸ் உருவாக்கப்பட்டது. அதன் முதலாவது தலைவராகவும் அருணாசலமே ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

தமிழர்களை தேசிய காங்கிரசுடன் இணைப்பதற்கான பேச்சுவார்த்தையில் இவரே நடுவராகத் தொழிற்பட்டார். எழுத்து வடிவில் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது. 1921ஆம் ஆண்டு மானிங் அரசியல் சீர்திருத்தத்தின் அடிப்படையிலான தேர்தலில் கொழும்புத் தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை சிங்களத் தலைவர்கள் ஒப்பந்தப்படி தரமறுத்ததால் இலங்கை தேசிய காங்கிரசிலிருந்து வெளியேறினார். 1921 ஆகஸ்டில் தமிழர் அடையாள அரசியலை நிலைநிறுத்தும் வகையில் *தமிழ் மகாஜன சபையி*னை உருவாக்கினார். அதன் தலைமைப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டார்.

தமிழர் அடையாள அரசியலில் அருணாசலத்தின் ஆளுமையை முழுமையாகத் தரிசிக்க முடியவில்லை. அதற்கு முன்னரே அவர் ***1924ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 9ஆம் திகதி தனது 71வது வயதில்*** மதுரை மீனாட்சியம்மன் ஆலயப் பிரதேசத்தில் மரணமானார்.

அருணாசலத்தின் குடும்பம் பற்றியும் இங்கு நான் கூறவேண்டும். அருணாசலத்தின் துணைவியார் பெயர் சொர்ணம். அவரும் மானிப்பாயைச் சேர்ந்தவர். பிள்ளைகள் 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேர். 3 ஆண்கள் 5 பெண்கள். பத்மநாபன், மகாதேவா, இராமநாதன் என்போரே ஆண் பிள்ளைகளாவார். மகேஸ்வரி செகராசசிங்கம், மனோன்மணி பத்மநாதன், பத்மாவதி பரராஜ சிங்கம், சிவானந்தம் தம்பையா, சுந்தரி நடராஜா என்போரே பெண் பிள்ளைகளாவர். இவர்களில் பத்மநாபன் என்ற ஆண்பிள்ளையும் மகேஸ்வரி, மனோண்மணி, பத்மாவதி ஆகிய மூன்று பெண்பிள்ளைகளும் அருணாசலம் மறைவதற்கு முன்பே மரணமாகி யிருந்தனர்.

அருணாசலம் மகாதேவா பிற்காலத்தில் சிறந்த அரசியல்வாதியாக விளங்கினார். அருணாசலம் கேட்ட கொழும்புத் தமிழ்ப் பிரதிநிதித்துவம் மகாதேவாவிற்கே கிடைத்திருந்தது. டொனமூர் அரசாங்க காலத்தில் சிறிது காலம் அமைச்சராகவும் பதவி வகித்திருந்தார். 1947ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதியில் ஜீ.ஜீ. பொன்னம்பலத்திற்கு எதிராக போட்டியிட்டு அவரிடம் தோல்வியடைந்தார். அதற்குப் பின்னர் மகாதேவாவின் அரசியல் வாழ்க்கை சோபிக்கவில்லை. எனினும் 1924 தொடக்கம் 1947 வரை தமிழர் அரசியலில் மகாதேவாவிற்கும் முக்கிய பாத்திரம் இருந்தது.

1930ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 3ஆம் திகதி அரசாங்க சபை மைதானத்தில் (தற்போதைய ஜனாதிபதி செயலகம்) தேசாதிபதியால் அருணாசலத்தின் வெண்கலச்சிலை திறந்து வைக்கப்பட்டது. இவரது உருவப்படங்கள் றோயல் கல்லூரி, சமூகசேவைச் சங்கம், இலங்கைத் தேசிய காங்கிரசின் தலைமை அலுவலகம் என்பவற்றில் திறந்து வைக்கப்பட்டன. பேராதனைப் பல்கலைக்கழக மண்டபம் ஒன்றிற்கு அருணாசலத்தின் பெயரும் சூட்டப்பட்டது.

**இனி அருணாசலத்தின் பன்முக ஆளுமைகளைப் பார்ப்போம்**

அதில் முதலாவது சமூக மாற்றத்திற்கான அரசியலில் அவரது ஆளுமையாகும். அவர் ஓய்வு பெற்றவுடன் இவ் அரசியலையே தேர்ந்தெடுத்திருந்தார். இக்காலத்தில் சமூக மாற்றத்திற்கான அரசியல் பெரியளவிற்கு வளர்ந்திருக்கவில்லை. சர்வதேச ரீதியாக சமூக மாற்றத்திற்கு அடிப்படையான மாக்சீஸ சிந்தனை வளராதது இதற்கு காரணமாக இருந்திருக் கலாம். 1917ஆம் ஆண்டு சோவியத் யூனியனின் அக்ரோபர் புரட்சிக்கு பின்னரே அது வளர்ந்திருந்தது.

எனினும் சர்வதேச மட்டத்தில் ஆதிக்க நிலையில் இருந்த தாராண்மை ஜனநாயக சிந்தனை பல்வேறு மட்டத்தில் கேள்விக்குள்ளாக்கப்பட்டது. ஆரம்பகால தாராண்மை சிந்தனையின் தலையிடா அரசுக் கோட்பாட்டிற்கு எதிராகவே இக் கேள்விகள் எழுப்பப்பட்டன. அரச தலையீடில்லாத முயற்சிகள் வலுவானவர்களுக்கே சாதகமாக இருக்கும். வலுவற்றவர்களை பின்தள்ளும் என்ற வாதங்கள் முன்வைக்கப்பட்டன. ஜெரமி பென்தம் போன்றவர்கள் இதற்கு மாற்றாக பயனுடமைக் கொள்கையினை முன் நிறுத்தினர். அதிகமானோரின் அதிகமான நலன்களை பேணுவதாக அரசு இருக்க வேண்டும் என்ற கருத்தினை பயனுடமைக் கொள்கை வலியறுத்தியது.

பயனுடமைக் கொள்கையின் வளர்ச்சி அடிநிலை மக்களின் நலன்களைப் பேண வேண்டும் என்ற சிந்தனையைத் தூண்டியது. தொழிற்சங்கங்கள், சமூக சீர்திருத்த இயக்கங்கள் உலகம் முழுவதும் உருவாகத் தொடங்கின. இச் செயற்பாட்டின் உச்சநிலையில் இதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் வடிவம் கொடுக்க வேண்டும் என்பதற்காக பல்வேறு தொழிற்சங்கங்களின் இணைப்பாக இங்கிலாந்தில் தொழிற்கட்சி 1906ஆம் ஆண்டு உருவானது.

அருணாசலம் சாராம்சத்தில் ஒரு லிபரல்வாதி. அவர் லிபரல் சிந்தனையாளர்களில் முற்போக்குப் பிரிவினரை பிரதிநிதித்துவப்படுத்தினார். இதனால் சமூக சீர்திருத்த இயக்கத்தையும், தொழிற்சங்க இயக்கத்தையும் அடிநிலை மக்களின் நலன்களைப் பேணும் கருவிகளாக கையில் எடுத்துக்கொண்டார்.

சமூக சீர்திருத்த இயக்கத்தை முன்கொண்டு செல்ல வேண்டும் என்பதற்காகத்தான் சமூகசேவைச் சங்கத்தை உருவாக்கினார். அதன் தலைமை அலுவலகத்தில் 8 தொடக்கம் 10 மணி நேரம் வரை வேலை செய்தார். சமூக சேவைக்காக அவர் தேர்ந்தெடுத்த பிர தேசங்கள் கொழும்பில் உள்ள சேரிப்புறப் பிரதேசங்கள்தான். சேரிப்புற மக்களின் சுகாதாரம், கல்வி, தொழில் வாய்ப்புகளில் அதிக அக்கறை செலுத்தினார். தொழிலாளர்கள் கல்வியைப் பெறுவதற்காக இரவுப் பாடசாலைகளை நடத்தினார். சுகாதாரம், சுத்தம் சம்பந்தமாக ஒளிப்பட விரிவுரைகளை நிகழ்த்த ஏற்பாடுகள் செய்தார். சேரிச் சிறுவர்களின் விளை யாட்டுக்காக விளையாட்டுச் சங்கங்களை உருவாக்கினார். சிறுவர் சிறுமிகளுக்கு கைத் தொழில் கல்வியும் புகட்டப்பட்டது. குடிசைக் கைத்தொழிலுக்கும் புத்துயிர் அளித்தார். சிறுகைத்தொழில் முயற்சிகளை அபிவிருத்தி செய்வதற்கு கூட்டுறவுக் கடன் உதவிச் சங்கங்களை நிறுவுவதற்கும் சிபார்சு செய்தார்.

1913இல் இவர் இலண்டனுக்கு விஜயம் செய்தார். குறிப்பாக லண்டனில் உள்ளூராட்சி அமைப்பு செயற்படும் முறையினை ஆய்வு செய்து அறிந்தார். ஆரம்பக்கல்வி, வறிய வர்களுக்கு வீடமைப்புத்திட்டம், வைத்தியசாலை செயற்பாடுகள், வேலைத்தலங்களில் தொழிலாளர்களின் நிலைமைகள் போன்றவற்றை ஆய்வு செய்து அறிந்து கொண்டார். நாடு திரும்பிய பின் அரசாங்கத்திற்கு அவற்றை சிபார்சு செய்தார்.

தனது லண்டன் பயணம் பற்றி அவர் பின்வருமாறு குறிப்பிட்டார். 'இலண்டனில் வறியவர்களுக்கு உன்னத சேவை மேற்கொள்ளப்படுகின்றது. நாமும் மக்கள் சேவைக்காக ஒரு இயக்கத்தை ஆரம்பிக்க வேண்டும். கொழும்பில் வறியவர்களுக்கு வீடமைக்கவும் மக்களின் ஆரம்பக் கல்வியை வளர்க்கவும் தொழிலாளர்களை தற்போதைய அடிமைத்தனத்தில் இருந்து விடுவிக்கவும் செயற்பட வேண்டியிருக்கின்றது.'

1914ஆம் ஆண்டு நவம்பர் 19இல் ஆர்வம் உள்ள இளைஞர்களை தனது ' பொன்கிழார்' இல்லத்திற்கு அழைத்து சமூகசேவையின் முக்கியத்துவத்தினை வெளிப்படுத்தினார். இச் செயற்பாடுகள் தான் சமூக சேவைச் சங்கத்தின் உருவாக்கத்திற்கு வழிவகுத்தது.

அருணாசலத்தின் முக்கியமான இயல்பு ஆய்வு செய்தபின் பணியில் இறங்குவதாகும். அதன் அடிப்படையில் முறையான வேலைத்திட்டத்துடன் செயற்படுவதாகும். அரசாங் கத்திற்கு அதனை சிபார்சு செய்தார்.

சமூகசேவைச் சங்கத்தின் அனுபவம் தான் தொழிற்சங்கத்தை உருவாக்க அவரை தூண்டியது அடி நிலை மக்களின் நலன்களை அரசாங்க மட்டத்திற்கு கொண்டு செல்ல வேண்டுமாயின் தொழிற்சங்கம் அவசியம் என்பதை அவர் உணர்ந்துகொண்டார். இங்கி லாந்தின் தொழிற்சங்க இயக்கமும் அவரைக் கவர்ந்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1919 யூன் 25இல் நான் முன்னர் கூறியது போல இலங்கைத் தொழிலாளர் சேமா விருத்திச் சங்கம் உருவாக்கப்பட்டது. 1920 பெப்ரவரியில் அது இலங்கை தொழிலாளர் சம்மேளனமாக பெயர் மாற்றப்பட்டது. அதன் யாப்பு விதிகளில் நோக்கம் பற்றி பின்வருமாறு கூறப்பட்டிருந்தது.

*இலங்கையில் உள்ள தொழிலாளர் வர்க்கத்தின் நலன்களை பாதுகாத்தலும், அவர்களது சேமாவிருத்தியை அதிகரித்தலும், அவர்களது சமூக, தொழில் நிலைமைகளை சீர்திருத்தலும், அன்னாரது லௌகீக, ஆத்மீக அபிவிருத்திக்கு உதவுதலும், மக்களின் சமூக, பொருளாதார நிலைமைகள் பற்றிய பிரச்சினைகளைப் பற்றி கற்றறிதலை ஊக்கு வித்தலும் ஆகும்.*

இச்சங்கம் 1921ஆம் ஆண்டு ரயில்வே, துறைமுக வேலை நிறுத்தத்தின்போது சமரச பேச்சுவார்த்தைகளில் முக்கிய இடம் வகித்ததோடு தோட்ட தொழிலாளர்களின் துண்டு முறை ஒழிப்பிற்கு எதிராக போராடி வெற்றியும் கண்டது. இதைவிட தலைவரிக்கு எதிராகவும் போராடினார்.

அருணாசலம் தொழிற்சங்கத்தை உருவாக்கியபோது இலங்கையில் தொழிற்சங்க இயக்கம் பெரிய அளவிற்கு வளர்ந்திருக்கவில்லை. சில சில துறைகளுக்கு மட்டும் சிறிய தொழிற்சங்கங்கள் இருந்தன. அனைத்து துறைகளையும் தழுவிய தொழிற்சங்கம் முதன் முதலாக அருணாசலத்தினால் தான் உருவாக்கப்பட்டது. ஆனால் அடுத்தடுத்து தேசிய இயக்கத்திற்குள்ளும் தமிழ் அடையாள இயக்கத்திற்குள்ளும் அவர் பிரவேசிக்க வேண்டி ஏற்பட்டதால் தொழிற்சங்க இயக்கத்தை முறையாக வளர்க்க முடியவில்லை. அதனை முறையாக வளர்த்தெடுத்தவர் அருணாசலத்தின் சீடரான ஏ.ஈ. குணசிங்கதான். தீவிர தேசிய இயக்கத்தின் பால் தன்னை ஈடுபடுத்திக்கொண்ட ஏ.ஈ. குணசிங்கவை தொழிற் சங்க, அரசியல் பக்கமும் இழுத்துச் சென்றவர் அருணாசலமே ஆவார்.

எனினும் ஏ.ஈ. குணசிங்கா பிற்காலத்தில் இனவாத அரசியலுக்குள் சென்றமை துர திஷ்டமானது. இதனால் தான் தொழிற்சங்க இயக்கத்தின் அடுத்த கட்ட வளர்ச்சியான இடதுசாரி இயக்கம் ஒன்றை உருவாக்கும் பணியினை இடதுசாரி கட்சிகள் மேற்கொண்டன. சிறீலங்கா சுதந்திர கட்சியின் வருகையின் பின்னர் அதனாலும் சோபிக்க முடியவில்லை.

இலங்கை இனரீதியாக பிளவுண்ட நாடாக இருந்ததனால் மூன்று நிகழ்வுகள் பிரதானமாக இடம்பெற்றன.

1. சிங்கள மக்களில் முற்போக்கு சக்திகள் இனவாத அரசியலுக்குள் சென்றனர். செல்லாதவர்கள் அரசியலில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டனர். ஏ.ஈ. குணசிங்கா தொடக்கம் பண்டாரநாயக்கா ஊடாக வாசுதேவ நாணயக்கார வரை இதுவே நிகழ்ந் துள்ளது.
2. முற்போக்கு அமைப்புக்கள் இனவாத அரசியலை முன்னெடுக்கும் போது தான் சிங்கள மக்கள் மத்தியில் அந்தஸ்தினைப் பெறுகின்றன. (உதாரணம்:- ஜே.வி.பி.) இடதுசாரி இயக்கம் தேசிய இயக்க செயற்பாடுகளை முன்னெடுக்கும் போது இனவாத நிலைப்பாட்டுக்குள் செல்லவில்லை. ஆனால் சுதந்திரத்தின் பின்னர் அவர்களால் அந்த நிலைப்பாட்டில் தொடர்ந்து இருக்க முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. 1920க்கு பின்னர் ஏனைய இனத்தைச் சேர்ந்த தலைவர்களினால் தேசிய மட்டத்தில் சோபிக்க முடியவில்லை (உதாரணம்: சண்முகதாசனின் வீழ்ச்சி) இந்த விடயங்கள் மிகவும் நுணுக்கமாக ஆராயப்படல் வேண்டும்.

அருணாசலத்தின் சமூக மாற்றத்திற்கான அரசியல் பங்களிப்பு துரதிஷ்டவசமாக முழுமையாக ஆய்வுக்குள்ளாக்கப்படவில்லை. இவை விரிவாக ஆய்வுக்குட்படுத்தப் பட வேண்டும். குறிப்பாக சமூக சேவைச் சங்கம், இலங்கை தொழிலாளர் சம்மேளனம் என்பவை தொடர்பாக அதன் நோக்கங்கள், கொள்கைகள், செயற்பாடுகள் அவற்றில் அருணாசலத்தின் ஆளுமைப்பங்கு பற்றி விரிவாக ஆராயப்பட வேண்டும்.

இரண்டாவது காலனித்துவத்திற்கெதிரான தேசிய இயக்கத்தில் அருணாசலம் என்கின்ற ஆளுமையின் பங்களிப்பாகும். அருணாசலத்தின் ஆளுமையை அதிகளவு வெளிப்படுத்திய பங்களிப்பு இதுவேயாகும். அருணாசலத்திற்கு அதிக காலம் பங்கேற்பு செய்ய முயலவில்லை. 1913 தொடக்கம் 1924 வரை வெறும் 11 ஆண்டுகள் தான் அவரால் பங்களிப்பு செய்ய முடிந்தது. அதில் கூடுதலான காலத்தை தேசிய இயக்கமே பிடித்துக் கொண்டது. 1915ஆம் ஆண்டு தொடக்கம் 1921 ஒக்டோபர் வரை சுமார் 6 வருடங்கள் இப்பணியில் தீவிரமாக ஈடுபட்டார். 1919 வரை 4 வருடங்கள் ஒரு தேசிய இயக்கத்தை உருவாக்கும் பணியிலும், மீதி வருடங்களை அதனை வளர்த்தெடுக்கும் பணியிலும் ஈடுபட்டார்.

இலங்கை தேசிய காங்கிரசின் தலைமை பதவியிலிருந்து விலகிய பின் ***1921*ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் 'தற்போதைய அரசியல் நிலைமை'** என்ற தலைப்பில் பேசும்போது அருணாசலம் பின்வருமாறு குறிப்பிட்டார்.

***'அரசியல் சீர்திருத்த இயக்கத்தை ஸ்தாபிப்பதற்கும், பொதுமக்களுக்கு அரசியல் அறிவினை ஊட்டுவதற்கும், மிதவாதிகள், பழமையைப் பேணுவோர், தீவிரவாதிகள் ஆகிய எல்லா சக்திகளையும் ஒன்று கூட்டுவதற்கும் எமது அரசியல் திட்டத்தில் ஒரு நியாயமான சீர்திருத்தத்திற்கான ஆகக் குறைந்த கோரிக்கையின் பேரில் ஒரு உடன்பாட்டை ஏற்படுத்துவதற்கும் என 1916ஆம் ஆண்டில் நான் மேற்கொண்ட கடமையை முடித்து விட்டு கடந்த ஒக்டோபர் மாதம் தான் அப்பதவியைத் துறந்தேன்' என்றார்.***

தேசிய இயக்கம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற சிந்தனை அவருக்கு 1915ஆம் ஆண்டு சிங்கள முஸ்லிம் கலவரத்தைத் தொடர்ந்தே ஏற்பட்டது. ஐக்கியப்பட்ட இயக்கம் இல்லாமல் அரசியல்யாப்பு சீர்திருத்த வழியில் கூட உரிமைகளைப் பெற முடியாத நிலை இருந்தது. சமூக சேவைச் சங்க வேலைகளில் ஈடுபட்டிருந்த அருணாசலம் இவ் வரலாற்றுத் தேவையை உணர்ந்தே தேசிய இயக்கச் செயற்பாட்டிற்கு வந்தார்.

இவர் இவ் அரசியலுக்கு வந்தபோது உரையில் குறிப்பிட்டது போல மூன்று பெரும் பணிகளைச் செய்ய வேண்டியிருந்தது.

1. பொதுமக்களுக்கு அரசியல் அறிவினை ஊட்ட வேண்டியிருந்தது. குறைந்தபட்சம் முன்னேறிய பிரிவினருக்காவது அரசியல் அறிவினை ஊட்டவேண்டிய கட்டாயம் இருந்தது.

2. மிதவாதிகள், தீவிரவாதிகள், பழைமை பேணுவோர், இனரீதியான பிரிவினர் என சகல பிரிவினரையும் ஐக்கியப்படுத்த வேண்டியிருந்தது. சுருக்கமாகக் கூறினால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பொது உடன்பாட்டின் கீழ் பரந்துபட்ட கூட்டணியினை உருவாக்க வேண்டியிருந்தது.

உண்மையில் இவ் இரண்டாவது பணியே அவரைப் பொறுத்தவரை மிகவும் கடினமாக இருந்தது. பல்வேறு முரண்பட்ட அபிலாசைகளுக்கிடையே பொதுவான அபிலாசைகளை அடையாளம் காண்பதும், அதற்குரியவர்களை இணைப்பதும் இலகுவான ஒன்றாக இருக்கவில்லை. வரலாற்றில் அனைத்து தேசிய இயக்கங்களும் இந்நெருக்கடியை எதிர் நோக்கியிருந்தன.

தேசிய ஒடுக்குமுறை என்பது புறத்தேயிருந்து வரும் ஒடுக்குமுறையாகும். இதற்கு முகம் கொடுப்பதற்கு ஒடுக்கப்படும் மக்களின் சகல பிரிவுகளையும், இணைப்பது அவசிய மானதாகும். வானவில் கூட்டணி ஒன்றை அமைப்பதே இதற்கு பொருத்தமனா அணுகு முறையாக இருக்கும். நடுநிலையான தலைவர்கள் வலிமையாக இல்லாமல் இக் கூட்டணியை உருவாக்கிவிட முடியாது.

காலனித்துவ காலம் தொடக்கம் தேசிய இயக்கங்கள் எதிர்நோக்குகின்ற பிரதான பிரச்சினை இதுதான். அருணாசலம் ஒரு நடுநிலையான தலைவராக இருந்தமையினால், சிரமப்பட்டாவது இந்த வரலாற்றுக் கடமையினை நிறைவேற்ற முடிந்தது. அருணாசலம் சுமார் மூன்று வருடங்கள் இதற்காகச் செலவிட்டார். ஏ.ஈ. குணசிங்க தலைமையிலான தீவிரவாதப் பிரிவினரையும், தமிழரையும் இணைப்பதில்தான் அருணாசலம் மிகவும் சிரமப்பட்டார்.

3. மேற்கூறிய இருபணிகளும் நிறைவேற்றப்பட்ட பின்னர் அதன் அடிப்படையில் ஒரு ஐக்கியப்பட்ட இயக்கத்தினை உருவாக்குதல்.

தேசிய இயக்கப் பணிகளில் அருணாசலத்தின் முக்கிய பாத்திரம் தேசிய இயக்க அரசியலை ஒரு பாதையில் கொண்டு வந்து நிறுத்தியமைதான்.

தேசிய இயக்கச் செயற்பாட்டில் முதலில் அவர் ஆற்றிய பணி அரசியல் அறிவை ஊட்டி விழிப்புணர்வை ஏற்படுத்தியமையாகும்.

இதற்காக அவர் பொதுக்கூட்டங்களில் பேசினார். பத்திரிகைகளில் கட்டுரைகளை எழுதினார்.

***1917ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி*** கொழும்பு விக்டோரியா மொசோனிக் மண்டபத்தில் இலங்கைத் தேசிய சங்கத்தின் வருடாந்த மாநாடு ஈ.நே. சமரவிக்கிரம தலைமையில் நடைபெற்றது. இம்மாநாட்டில் அதன் செயலாளர் டி.ஆர். விஜயவர்த்தனாவின் வேண்டுகோளுக்கிணங்க, ‘எங்கள் அரசியற் தேவைகள்’ என்ற தலைப்பில் அருணாசலம் பேசினார். சுயஆட்சி பெறவேண்டியதன் அவசியத்தையும், அதற்கான அரசியல் இயக்கம் ஒன்று உருவாகவேண்டியதன் அவசியத்தையும் அவர் தெளிவாக வலியுறுத்தினார்.

இவ் உரை பற்றிய கருத்து தெரிவித்த ஜேம்ஸ் பீரிஸ்,

‘*காலத்திற்கு காலம் அரசியல் சீர்திருத்தம் கோரி கிளர்ச்சி செய்தாராயினும் அருணாசலம் அவர்களின் இவ் உரையின் பின்னரே மக்கள் உறுதியாக விடாப்பிடியுடன் கிளர்ச்சி செய்வதன் அவசியத்தை உணர்ந்து கொண்டனர்*’ எனக் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1917ஆம் ஆண்டு மே மாதம் தேசிய இயக்கத்தின் முன்னோடி அமைப்பான 'அரசியல் சீர்திருத்தக் கழகம்' உருவாக்கப்பட்டது. இதன் தலைவராகவும் அருணாசலம் கடமை யாற்றினார். 1917 டிசம்பரிலும், 1918 டிசம்பரிலும் இரு அரசியல் மாநாடுகள் இவ் அமைப்பினால் கூட்டப்பட்டன.

இவ் அமைப்பு தனித்துச் செயற்படாமல் இலங்கை தேசிய சங்கத்துடனும் இணைந்து நடவடிக்கைகளை முன்னெடுத்தது. இதன் மூலம் ஐக்கியப்பட்ட இயக்கத்திற்கான முன்மாதிரி நடவடிக்கைகளை மேற்கொண்டது.

1919 ஓகஸ்ட் மாதம் 'இலங்கையில் அரசியல் சீர்திருத்தம் ஏற்பட வேண்டியதற்கான காரணங்கள்' என்ற தலைப்பில் அறிக்கை ஒன்றினை அருணாசலம் தயாரித்தார். அதனை இரு அமைப்பின் கூட்டுக் குழுவின் பெயரில் வெளியிட்டார்.

1919ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 20ஆம் திகதி அரசியல் சீர்திருத்தக் கழக மாநாட்டில் தேசிய இயக்கத்தின் தேவை பற்றி அருணாசலம் உரையாற்றினார். இம்மாநாட்டுத் தீர்மானமே தேசிய காங்கிரஸின் தோற்றத்திற்கு காரணமாகியது.

தொடர்ந்து ***1919ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 24ஆம் திகதி*** கொழும்பு டவர் மண்டபத்தில் 'தற்போதைய அரசியல் நிலைமை' என்ற பொருளில் பேசினார்.

இறுதியில் ***1919ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11ஆம் திகதி*** இலங்கை தேசிய காங்கிரஸ் தோற்றம் பெற்றது.

இலங்கை தேசிய காங்கிரஸினை அமைத்தலில் மிகவும் பிரச்சினையாக இருந்த விடயம் ஐக்கியப்பட்ட இயக்கத்தினை உருவாக்குவது என்பது தான். தீவிரவாதப் பிரிவினர் இளைஞர்களாக இருந்தமையினால் அவர்கள் பல கேள்விகளைக் கேட்டே இணைய வந்தனர். அவர்கள் ஏற்கனவே இளம் இலங்கையர் கழகம் என்ற பெயரில் ஏ.ஈ. குணசிங்கா தலைமையில் தம்மை ஒழுங்கமைத்திருந்தனர். அருணாசலத்தின் தொடர்ச்சியான அறிவு ரைகளே அவர்களை இலங்கை தேசிய காங்கிரசுடன் இணைய வைத்தன.

இலங்கைத் தேசிய காங்கிரஸ் பிரதேசவாரிப் பிரதிநிதித்துவத்தை சிபார்சு செய்ய இருந்ததினால் தமிழர்கள் தேசிய காங்கிரசில் சேருவதில் அச்சம் கொண்டிருந்தனர். இராமநாதன் தொடக்கம் பல தலைவர்கள் இது தொடர்பாக அச்சத்தினை வெளிப்படுத்தி யிருந்தனர். இதனால் தமிழர்களை இணைப்பதில் பல நெருக்கடிகள் ஏற்பட்டன. அருணா சலம் மிகவும் சாதுரியமாக சிங்கள தலைவர்களுடனும், யாழ்ப்பாணச் சங்கத்துடனும் பேசி அவர்களை ஒரு உடன்பாட்டிற்கு கொண்டு வந்தார். தமிழர்களுக்கு வட - கிழக்கில் போதிய பிரதிநிதித்துவமும், கொழும்பில் ஒரு பிரதிநிதித்துவமும் வழங்குவதற்கு சிங்கள தலைவர்கள் இணங்கிக் கொண்டனர். இது தொடர்பான எழுத்து மூல உத்தரவாதம் ஜேம்ஸ் பீரிசினாலும், ஈ.ஜே. சமரவிக்கிரமவினாலும் வழங்கப்பட்டது. அதன் பின்னரே யாழ்ப்பாணச் சங்கம் தமிழர்கள் சார்பில் இலங்கைத் தேசிய காங்கிரசுடன் இணைந்து கொண்டது.

இலங்கைத் தேசிய காங்கிரசின் உருவாக்கம் தொடர்பாக அருணாசலத்தின் இடை விடாத முயற்சிகள் பற்றி சீ.ஈ. கொரியா பின்வருமாறு வர்ணித்திருந்தார்.

***"கடந்த சில வருடங்களாக சகல முயற்சிகளுக்கும் மத்திய நிலைமையமாகிய கொழும்பில் ஒரு பெரியார் ஆங்காங்கு பரந்த தனிப்பட்ட ஆர்வப் பொறிகள் தனித்தனியாக கிடந்து பிரகாசமிழந்து, அணைந்து போகும் தறுவாயில் இருப்பதை கண்ணாறக் கண்டார்.***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பெருமகனார் எழுந்து விரைந்து சென்றார். கொழுந்து விட்டெரியும் தமது தேசாபிமான உணர்ச்சியால் அவற்றிற்கு சக்தி ஊட்டி தேசிய முயற்சியென்னும் பெருந்தீயாக மாற்றினார். இப்பெருந்தீயில் புடமிட்டு உருவாகியதே இலங்கை தேசிய காங்கிரஸ் ஆகும்" என்றார்.

தேசிய காங்கிரஸ் உருவானவுடனேயே அரசியல் சீர்திருத்தக் கோரிக்கையினை முன் வைத்தது. இதன் விளைவாகத்தான் 1921இல் மானிங் அரசியல் சீர்திருத்தம் அறிமுகமானது. இச்சீர்திருத்தம் இலங்கைத் தேசிய காங்கிரசின் அபிலாகைஷகளை போதியளவு பிரதி பலிக்காமையினால் அருணாசலம் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை. எனினும் ஏனையோர் பரீட்சார்த்தமாக இதனை ஏற்றுக்கொள்வோம் எனக் கூறியதனால் விருப்பமின்றி ஏற்றுக் கொண்டார்.

அருணாசலத்தின் மூன்றாவது பங்களிப்பு தமிழ் அடையாள அரசியலை ஆரம்பித்து வைத்தமையாகும். இலங்கையில் சமூக மாற்றத்திற்கான அரசியலை ஆரம்பித்து வைத்தவர். தேசிய இயக்கத்தை ஆரம்பித்து வைத்தவர். பிற்காலத்தில் தமிழ் அடையாள அரசியலையும் ஆரம்பித்து வைக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டார். இலங்கையில் அனைவரையும் தழுவிய ஒரு அரசியலை முன்னெடுக்க முடியாது என்பதையே இது அடையாளமிட்டுக் காட்டியது. அருணாசலத்தின் முடிவு இலங்கையின் மொத்த அரசியற்போக்கில் ஒரு முறிவைக் காட்டி நின்றது.

அதுவரை காலமும் தமிழர், பண்பாட்டுத் தளத்தில் தமிழர்கள் என்ற அடையாளத்தினை நிலைநிறுத்தினார்களே தவிர அரசியல் தளத்தில் இலங்கையர் என்ற அடையாளத்தையே நிலைநிறுத்தியிருந்தனர்.

அருணாசலம் தமிழ் அடையாள அரசியல் ஆரம்பித்த பின் இரண்டு ஆண்டுகள் மட்டுமே உயிர் வாழ்ந்ததினால் இவ் அரசியலில் அவரது செயற்பட்டு ஆளுமையினை அடையாளம் காணமுடியவில்லை.

1921ஆம் ஆண்டு மானிங் அரசியல் சீர்திருத்தத்தின் கீழான தேர்தலே அருணாசலம் தேசிய காங்கிரசிலிருந்து வெளியேறியமைக்கான உடனடிக் காரணமாக இருந்தது. மேல் மாகாணத்திற்கான மூன்று பிரதிநிதித்துவத்தில் ஒன்றில் அருணாசலத்தை ஏகமனதாக தெரிவு செய்வது என தேர்தலின் முன்னர் உடன்பாடு காணப்பட்டது. அப்போது கூட சில சிங்களத் தலைவர்கள் எதிர்த்துபோதும் ஏ.ஈ. குணசிங்க தலையிட்டு அதில் உடன் பாட்டைக் கொண்டு வந்தார். ஆனால் வேட்புமனுத் தாக்கல் செய்யச் சென்ற சமயம் அருணாசலத்திற்கு முன்னரே தேசிய காங்கிரஸ் சார்பில் இன்னொருவர் வேட்புமனு தாக்கல் செய்திருந்தார். இதனால் அருணாசலம் மிகவும் கோபமடைந்தார். பிரமாணம் பிரமாணமாக இருத்தல் வேண்டும். சிங்களத் தலைவர்கள் இதனை மீறிவிட்டனர். இவர்களுடன் இணைந்து இனிமேல் செயற்பட முடியாது நாம் தனித்து செல்ல வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

தமிழர் மகாஜன சபை தோற்றத்தின் பின்னணி இதுதான்.

தென் இலங்கை அரசியலுக்குள் தமிழ் மக்களின் நலன்களைத் தேடமுடியாது என்பதை முதன்முதலாக அறிவித்தவர் இவரேயாவார். இந்த வகையில் தமிழ் தேசிய அரசியலின் தோற்றத்திற்கு ஆரம்ப ஊற்றாக இவரே இருந்திருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருணாசலம் தமிழர் பிரச்சினையின் இன்றைய வடிவத்தை அன்றே அடையாளம் கண்டார். இந்த அடையாளக் காணுகை தமிழ் உயர்குழாமை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அவர்கள் தாங்களும் இந்நாட்டின் பெரும்பான்மை இனம் என்றே கருதியிருந்தனர். சிங்களவர்களும் தமிழர்களும் இந்நாட்டின் பெரும்பான்மை இனத்தவர்கள். ஏனைய வர்களை சிறுபான்மை இனத்தவர்கள் என்ற கருத்தே அவர்களிடம் மேலோங்கியிருந்தது. சிங்களவர்களும் தமிழர்களும் இந்நாட்டின் பூர்வ குடிகளாயிருந்தமையினாலும் தமிழ்த் தலைவர்களே ஒரு குறிப்பிட்ட காலம் முழு நாட்டிற்கும் தலைமை வகித்தமையாலும் அவர்களிடம் இந்த கருத்து மேலோங்கியிருந்திருக்கலாம். முதன் முதலில் தமிழர்கள் பெரும்பான்மையினர் அல்ல என்று அறைந்து கூறி வெளித்தள்ளப்பட்டபோது அந்த உண்மையை சகித்துக் கொள்வது தமிழ் உயர் குழாமினருக்கு கடினமாக இருந்தது.

அருணாசலம் தமிழ் அடையாள அரசியலை முன்னெடுத்த காலப்பகுதியும் கூட முழுமையாக ஆய்விற்குள்ளாக்கப்படவில்லை. இது மிகவும் கவலைக்குரியதாகும். கொழும்புத் தமிழ் உயர் குழாம் தேசிய அரசியலில் அவர் ஆற்றிய பங்களிப்புக்கு மாசு வந்து விடுமோ எனக் கருதியோ என்னவோ, அவரது தமிழ் அடையாள அரசியல் பற்றி அடக்கியே வாசித்திருக்கின்றனர். எனினும் புதிய தலைமுறைக்கு அதனை மீள்வித்து ஆய்வு செய்யும் சமூகப் பொறுப்பு இருக்கின்றது.

அருணாசலத்திற்குப் பின்னர் அவரது மகன் அருணாசலம் மகாதேவாவிற்கு அரசியலில் ஈடுபட சந்தர்ப்பம் கிடைத்தபோதும் தமிழ் அடையாள அரசியலை அந்த காலகட்டம் முழுவதும் நகர்த்திய பெருமை அவருக்கு இருக்கவில்லை. மாறாக 1927இல் தமிழர் அரசியலுக்கு வருகை தந்த ஜீ.ஜீ. பொன்னம்பலத்திற்கே அது இருந்தது. தமிழர்களின் அபிலாஷைகளை கவனத்தில் எடுக்காத சோல்பரி அரசியல் யாப்பினை அருணாசலம் மகாதேவா ஆதரித்ததினால் 1947ஆம் ஆண்டு தேர்தலில் ஜீ.ஜீ. பொன்னம்பலம் தனது சொந்த தொகுதியான பருத்தித்துறையை விட்டு விட்டு யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதியில் அருணாசலம் மகாதேவாவிற்கு எதிராகப் போட்டியிட்டு அவரைத் தோல்வியடையச் செய்தார்.

அருணாசலம் உருவாக்கிய தமிழர் அடையாள அரசியலை ஜீ. ஜீ. பொன்னம்பலம் சமவாய்ப்பிற்கான அரசியலாக வளர்த்தெடுத்தார். அவரது 50:50 கோரிக்கை அந்த வகையிலேயே எழுச்சியடைந்தது. சோல்பரி அரசியல் யாப்பின் அறிமுகத்துடன் அதற்கும் சந்தர்ப்பம் இல்லாது போக எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தமிழர் பிரதேசத்தை வடக்கு - கிழக்காக வரையறுத்து அதற்கு அதிகாரத்தைக் கோருகின்ற சமஷ்டி கோரிக்கையை முன்வைத்தார். இதுவும் நடைமுறையில் சரிவராது போக 1976இல் வட்டுக்கோட்டை மாநாட்டில் செல்வநாயகத்தினாலேயே தமிழீழக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அருணாசலத்தின் நான்காவது பங்களிப்பு கல்வித்துறையில் அவர் மேற்கொண்ட பணிகளாகும். இந்த வகையில் தாய்மொழிக் கல்வி இயக்கத்தின் தந்தையாகவும், பல்கலைக் கழக இயக்கத்தின் தந்தையாகவும் அருணாசலம் விளங்கினார்.

தாய்மொழிக் கல்வியில் அருணாசலம் அசைக்க முடியாத நம்பிக்கையினை வைத் திருந்தார். அதிலும் குறிப்பாக ஆரம்பக் கல்வி தாய்மொழியில் இருத்தல் வேண்டும் என்பதே இவரது வலுவான கருத்தாக இருந்தது. இவர் தாய்மொழிக் கல்வியின் அவசியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றி *1900ம் ஆண்டு ஜூலை மாதம் 8ஆம் திகதி* அப்போதைய கல்வி அதிகாரி பரோசிடம் அறிக்கை ஒன்றினை சமர்ப்பித்தார். அதில் இலங்கையில் பின்பற்றப்படுகின்ற ஆரம்பக் கல்வியின் அடிப்படை குறைப்பாடு ஆங்கில மொழிக் கல்வியே எனக் குறிப்பிட்டார்.

இதுபற்றி மேலும் குறிப்பிடுகையில், *இங்கிலாந்திலுள்ள ஆரம்ப பாடசாலையில் ஆங்கிலத்தை தள்ளிவிட்டு ஜேர்மானிய மொழியைப் போதனா மொழியாக்கினால் எவ்வாறு இருக்கும் என யோசித்துப் பாருங்கள் ஆங்கிலத்திற்கும் சிங்களத்திற்கும் அல்லது ஆங்கிலத்திற்கும் தமிழுக்கும் இருக்கும் ஒற்றுமையிலும் பார்க்க ஜேர்மானிய மொழிக்கும் ஆங்கிலத்திற்கும் அதிக ஒற்றுமை இருக்கின்றது. எனவே சிங்களச் சிறுவர்களும், தமிழ்ச் சிறுவர்களும் ஆங்கிலம் கற்பதை விட ஆங்கிலச் சிறுவர்கள் ஜேர் மானிய மொழியை இலகுவாக கற்க முடியும் எனக் குறிப்பிட்டார்.*

தாய்மொழிக் கல்வி இயக்கம் 1900ம் ஆண்டில் அருணாசலத்தினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட போதும் சுமார் 56 ஆண்டுக்குப் பின்னர் பண்டாநாயக்காவின் ஆட்சி காலத்திலேயே அதனை நடைமுறைப்படுத்த முடிந்தது. குறைந்த பட்சம் ஆரம்ப நிலைக் கல்வியாவது தாய்மொழியில் வழங்க வேண்டும் என்பதே கல்வியாளர்களின் உறுதியான கருத்தாகும். சூழலுடன் இணைந்து கற்பதற்கு அதுவே உதவியாக இருக்கும். இந்த உண்மையினை அருணாசலம் 1900ஆம் ஆண்டிலேயே வெளிப்படுத்தினார்.

தாய்மொழிக் கல்விக்கு அப்பால் பாடதிட்டங்களைப் பொறுத்தவரையிலும் கூட அதில் சுதேச தன்மைகளை அருணாசலம் வலியுறுத்தினார். அக்காலத்தில் பிரித்தானிய பாடத்திட்டங்களே இங்கும் நடைமுறையிலிருந்தன. அருணாசலம் இப்பாடத்திட்டத்திற்குப் பதிலாக சுதேச விடயங்கள் உள்ளடக்கப்பட வேண்டும். அதுவும் குறிப்பாக வரலாறு, புவியியல் பாடங்களைப் பொறுத்தவரை ஆங்கில நாட்டின் வரலாற்றினையும், ஆங்கில நாட்டின் புவியியலையும் கற்பிக்கக் கூடாது. அவை எம் நாட்டின் மாணவர்களுக்கு அந்நியமானவை. மாறாக இலங்கை, இந்திய நாடுகளின் வரலாறும் புவியியலும் கற்பிக்க வேண்டும் என வலியுறுத்தினார். மாணவர்களுக்கு இலங்கை வரலாற்றில் அக்கறையை உருவாக்குவதற்காக '*இலங்கை சரித்திர சுருக்கம்*' என்ற நூலையும் வெளியிட்டார்.

பல்கலைக்கழக இயக்கம் தொடர்பாகவும் 1900ம் ஆண்டிலிருந்தே அவர் பல முயற்சிகளை செய்தார். இலங்கையில் பல்கலைக்கழகம் ஒன்றை உருவாக்காமல் இலங்கை மாணவர்களின் ஆளுமையினை உச்சவகையில் வளர்க்க முடியாது என்பது அவரது கருத்தாக இருந்தது.

*1900ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 30ஆம் திகதி* பல்கலைக்கழகம் ஒன்றின் அவசியம் பற்றி தேசாதிபதிக்கு கடிதம் எழுதினார். அதில் '*பல்கலை கழகத்தினை நிறுவ வேண்டும். அது முடியாதவிடத்து கொழும்பு றோயல் கல்லூரியை பல்கலைக் கழக அந்தஸ்திற்கு உயர்த்த வேண்டும்*' எனக் கேட்டுக்கொண்டார்.

அருணாசலத்தின் இடைவிடாத முயற்சியினால் *1906ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19ஆம் திகதி 'இலங்கை பல்கலைக்கழகச் சங்கம்' ஆரம்பிக்கப்பட்டது.* இதன் முதலாவது கூட்டத்திற்கு அருணாசலமே தலைமை தாங்கினார்.

பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்ட போது அதற்கு தனது பத்மநாபா நூல்நிலையத்தையும் நன்கொடையாகக் கொடுத்தார். சேர். குமாரசாமி விஞ்ஞானப் பரிசிலையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்குவதற்கு ஏற்பாடு செய்தார். பல்கலைக்கழக யூனியன் மாணவர் விடுதிக்கும் நன்கொடை வழங்கினார்.

மேற்கூறிய பணிகளை விட கலை, இலக்கியம், ஆன்மீகம் என்பவற்றிலும் இவரது பங்களிப்பு இருந்தது. பண்டைய இலக்கிய சரித்திரம், புதைபொருள் ஆய்வு, மேல்நாட்டு, கீழ்நாட்டு தத்துவ ஞானம், கிரேக்க-இந்திய கலைகள், சிவவழிபாட்டு தத்துவங்கள் என்பவற்றிலும் அவர் அக்கறை செலுத்தினார். கொழும்பில் இலங்கை சைவ பரிபாலன சபையையும் உருவாக்கி அதன் முதலாவது தலைவராகவும் பணியாற்றியிருந்தார்.

இறுதியாக சேர் பொன்னம்பலம் அருணாசலம் பற்றிய ஒரு பன்முக பார்வையை என்னால் முடிந்தவரை இங்கு தந்திருக்கிறேன். நான் அரசியல் ஆய்வுத்துறையை சேர்ந்தவன். ஆதலால் அது பற்றியே என் கூடுதல் அக்கறையை வெளிப்படுத்தியிருந்தேன். ஆனால் அருணாசலம் பற்றிய ஓர் பன்முகப் பார்வையை ஓர் உயர் நிலைக்கு கொண்டு வருவதற்கு அவரது அரசியல் பங்களிப்பு பற்றிய ஆய்வு மட்டும் போதாது. ஏனைய துறைகள் பற்றியும் விரிவான ஆய்வுகள் தேவை. புதிய தலைமுறை அதை மேற்கொள்ளும் என நம்புகிறேன்.

எனது ஆய்வுகளையும் நான் முழுமையாகக் கருதவில்லை. அவற்றிலும் மேலும் பரந்த தேடல்கள் தேவை. குறிப்பாக அவருடைய அரச பணி பற்றி விரிவாக ஆராயப்படல் வேண்டும். அரச பணிகளில் புதிய சிந்தனைகளை அவர் எவ்வாறு உருவாக்கினார். எவ்வாறு நடைமுறைப்படுத்தினார் என்பவை பற்றிய ஆய்வுகள் அவசியமானவைகளாகும். இவற்றினைவிட சமூக மாற்றத்திற்கான அரசியல், தேசிய இயக்க அரசியல், தமிழ் அடையாள அரசியல் என்பவற்றிலும் அவரது பணிகளை மேலும் விரிவாக ஆராய்தல் வேண்டும். இவை தொடர்பாக அவரது உரைகள், எழுத்துக்கள், நடைமுறைச் செயற்பாடுகள் போன்றவற்றை முழுமையாகத் தேடித் தொகுக்கின்ற போதே விரிவான ஆய்வுகளை எம்மால் செய்ய முடியும். புதிய தலைமுறை இவற்றையெல்லாம் மேற்கொள்ளும் என்றே நம்புகிறேன்.

எமது ஆளுமைகளை மீள்விக்கும் பணியில் இச்சிறிய ஆய்வுரை சிறிதளவாவது பங்களிப்புச் செய்தால் அதுவே எனக்குப் பெரிய மகிழ்ச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டிளம் பருவத்தினரின் உளவியல் சிக்கல்கள்

அரசி விக்னேஸ்வரன், 1ம் வருடம் கொழும்பு பல்கலைக்கழகம்

கட்டிளம் பருவம் என்பது ஒவ்வொருவர் வாழ்விலும் மிக முக்கியமான காலப்பகுதியாகும். வாழ்வினைப் புரட்டிப் போடுகின்ற மாற்றங்கள் நிறைந்த ஒரு புயல் வீசும் காலப்பகுதி இது என்றால் மிகையாகாது. இக்காலப்பகுதியில் ஒருவர் எதிர்நோக்கும் உடலியல் மற்றும் சமூகவியல் மாற்றங்கள் காரணமாக உளவியலில் ஒரு தகுந்த வளர்ச்சி ஏற்படும்போதே பூரணமான ஆளுமை ஒன்று உருவாகிறது. இது ஒரு அறிந்தும் அறியாத, வளர்ந்தும் வளராத இரண்டும் கெட்டான் காலப்பகுதியாகும். முரண்பாடுகள் நிறைந்த இப்பருவத்தினர் ஒரு சில வேளைகளில் குழந்தை போலவும் வேறு சில வேளைகளில் மிகவும் முதிர்ச்சியானவர் போலவும் நடந்து கொள்வர்.

கட்டிளம் பருவம் என்றால் என்ன என்பதனை வயது அடிப்படையில் துல்லியமாக வரையறுத்துக் கூறிவிட முடியாது. காரணம் இப்பருவ மாறுதல்கள் கலாசாரத்திற்கு கலாசாரம், சமூகத்திற்கு சமூகம், குடும்பத்திற்கு குடும்பம், ஏன் ஆளுக்கு ஆள் கூட வேறுபடலாம். ஒரே வயதிலுள்ள சகல சிறுவர்களும் ஒரே உடலியல் வளர்ச்சியையோ, ஒரே மனவியல் முதிர்ச்சியையோ கொண்டிருப்பதில்லை என்பதுடன், சமூகம் அவர் களிடமிருந்து எதிர்பார்க்கும் விடயங்களும் ஒரே மாதிரியானவை அல்ல என்பது தெளிவு. சிறுவர்களுக்கு வளர்ந்தோருக்குரிய பல பொறுப்புக்களை ஒப்படைத்து அவர்களைப் பயிற்றுவிக்கும் சில கலாசாரங்களில் அவர்கள் குறைந்த வயதிலேயே கட்டிளம் பருவத்தைக் கடந்து விடுகின்றனர் என்று பழங்குடி மக்களிடையே நடாத்தப்பட்ட சில மானிடவியல் ஆய்வுகள் சுட்டுகின்றன. ஆயினும் உலக சுகாதார நிறுவனமானது பத்திலிருந்து இருபது வயது வரையான காலப்பகுதியை கட்டிளம் பருவம் என வரையறுக்கிறது. பொதுவில் கட்டிளம் பருவத்தின் ஆரம்பம் உடல் ரீதியான மாற்றங்களில் இருந்து அடையாளம் காணப்பட்டாலும், இப்பருவத்தின் நிறைவு பூரண உளவியல் முதிர்ச்சியினாலேயே அடையாளப்படுத்தப்படுகிறது.

ஆரம்ப காலங்களில் பிள்ளைப் பருவத்திற்கும் வளர்ந்தோர் என்கிற நிலைக்கும் இடையில் ஒரு மாறுநிலைப் பருவம் இருக்கின்றது என்பதே ஏற்றுக்கொள்ளப்படவில்லை. பூப்பு எய்தியதுமே சிறுவர் சிறுமியர் வளர்ந்தோர் குழாமில் சேர்க்கப்பட்டனர். இதிலும் பெண்கள் நிலை மிக மோசமானது. பூப்படைந்த உடனேயே சிறுமியர் திருமணத்திற்கும் தாய்மைக்கும் தகுதியானவர்களாகப் பார்க்கப்பட்டனர். இன்னும் சில கலாசாரங்களில் இது இன்றுவரை தொடரவே செய்கின்றது. மேலைத்தேய உயர் குழாமினரிடையே தான் முதன் முதலில் வயது வந்த ஆண் பிள்ளைகளை உடனடியாக பெரியவர்களின் பொறுப்புக்களுக்கு உட்படுத்தாது கல்விக்கும் உலக அனுபவத்துக்கும் வாய்ப்பளிக்கும் கலாசாரம் உருவானது. இன்று உலகம் பூராகவும், குமரப் பருவம் அல்லது கட்டிளம் பருவம் தனக்கேயுரிய அனுபவங்களையும் இயல்புகளையும் கொண்டிருப்பதால் இப் பருவத்தவரை ஒரு தனிக் குழுவாக ஆராய வேண்டியதன் அவசியம் உணரப் படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிளம் பருவத்து உளவியல் சிக்கல்கள் மிகத் தீவிரமாக மேலைத்தேய நாடுகளிடையே முதலில் உணரப்பட்டது. *மார்கரெட் மீட்* என்கிற சமூகவியலாளர் தனது ஆய்வுகளின் அடிப்படையில் கட்டிளம் பருவ உளவியல் பாதிப்புக்கள் சமூக கலாசார காரணிகளின் கட்டுருவாக்கமே என்று குறிப்பிடுகின்றார். அவரின் கருத்துப்படி, அமெரிக்க இளம் பிராயத்தினர் முகம் கொடுக்கும் பல விடயங்கள் வேறு கலாச்சாரங்களில் காணப்படுவதில்லை. ஆயினும், உளவியலுக்கு உயிரியல் பின்புலம் பெருமளவில் காரணமாவதனை இன்றைய உளவியலாளர்கள் நிரூபித்து வருகின்றனர். உதாரணமாக மனிதரின் ஒவ்வொரு நடத்தைக்கும் மூளையின் ஒவ்வொரு பாகங்களின் செயற்பாடே காரணம் எனவும், கட்டிளம் பருவத்தினர் அதிக ஆபத்தான செயல்களில் ஈடுபாடு காட்டுவதற்கும், அதிக உணர்ச்சி வசப்படுவதற்கும் மூளையின் பாகங்கள் சமமற்ற வளர்ச்சியைக் காட்டுவதே காரணம் எனவும் காட்டுகின்றனர். இக்கருத்துப்படி ஒரு சில உளவியல் குழப்பநிலைகள் சகல கட்டிளம் பருவத்தினர்க்கும் பொதுவானவையாகும்.

முன் கட்டிளம் பிராயத்தினர் தமது உடலில் பல்வேறு மாற்றங்களை உணர்கின்றனர். பிள்ளைப் பராயம் நீங்கி ஆண் அல்லது பெண் என்கிற பாலியல் அடையாளத்தை ஒருவர் பெறுகையில் அதனை சரியான மனநிலையில் ஏற்றுக்கொள்ளவும் புரிந்து கொள்ளவும் வேண்டியது மிக இன்றியமையாததாகும். இதற்கு உரிய அறிவுறுத்தல்கள் முதலில் குடும்பம் என்ற அலகினுள்ளும் பின்னர் பாடசாலை ஊடாகவும் வழங்கப்பட வேண்டும்.

கட்டிளம் பருவத்தில் தமது உடலில் ஏற்படக்கூடிய மாற்றங்கள் தொடர்பில் சிறுவர் சிறுமியர் சற்று முன்கூட்டியே அறிந்திருத்தல் அவசியமாகிறது. இல்லாத பட்சத்தில், இவர்கள் திகைப்புக்கும் அதிர்ச்சிக்கும் உள்ளாக நேரிடும். உடலியல் ரீதியாக படிப் படியான மாற்றங்களை எதிர்நோக்கும் ஒரு இளம் பராயத்தவருக்கு இது பற்றிய வெளிப் படையான கருத்துப் பரிமாற்றத்திற்கான ஊடகம் ஒன்று அவசியமாகிறது. இவ்வாய்ப்பு கிடைக்காத பட்சத்தில் பயமும் குழப்பமும் ஏற்படலாம். சில வேளைகளில் பெற்றோர் மற்றும் ஏனைய பெரியோர்கள் இளம் பிராயத்தினரை பயமுறுத்துவதில் திறமையுடன் செயற்படுகின்றமையை பொதுவில் எமது கலாச்சாரத்தில் கண்கூடாக காணலாம். இவ்வகை மாற்றங்கள் இயல்பானவை என்ற தெளிவு இன்றி, மறைப்பதற்கும் அவமானப்படுவதற்கும் உரியதாக உருவகப்படுத்தப்படுகிறது. இதன் காரணமாக பயம், கூச்சம், தயக்கம் ஏன், சுய வெறுப்பு கூட கட்டிளம் பருவத்தினருக்கு ஏற்படலாம். பல விடயங்களை வெளிப் படையாகப் பேசாமல் தவிர்ப்பது காரணமாக பதிலளிக்கப்படாத பல கேள்விகளுக்கு தமது சம வயதுக் குழுவினரிடமும் சுய பரிசோதனை மூலமும் பதில் தேட இளம் பிராயத்தினர் முற்படுவது ஆபத்தானதாக அமையலாம். மேலைத்தேய நாடுகளில் இவ் வாறான மாற்றங்கள் தொடர்பில் சரியான அறிவுறுத்தல் குடும்பம் மூலம் இல்லாவிடினும் பாடசாலை மூலம் இளவயதிலேயே கிடைக்கின்றது. இன்று எமது நாட்டுப் பாடசாலைப் பாடத்திட்டத்திலும் இது தொடர்பான விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும், சரியான கற்றலுக்கு ஆசிரியர், மாணவர்களின் மனத்தடைகள் தடங்கலாகக் காணப்படுவது கவலைக்குரிய விடயம்.

இப்பருவத்தில் சுரக்கப்படும் ஹோர்மோன்கள் மனவெழுச்சிகளையும் அவை வெளிப் படுத்தப்படும் விதத்தையும் பெருமளவில் பாதிக்கின்றன. எதிர்ப்பாலார் மீதான ஈர்ப்பும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலத்தில் இயல்பான ஒன்றேயாகும். இதனை சரியாகப் புரிந்து கொள்ளும் பட்சத்தில் தேவையற்ற மன அழுத்தத்திலிருந்து இளம் பருவத்தினர் தப்பித்துக்கொள்ள முடியும்.

கட்டிளம் பருவத்தினரிடையே திடீரென எதிர்ப்பாலாரிடம் சகஜமாகப் பழக முடியாமையும் கூச்சமும் முளைக்கிறது. இயல்பாக எழும் ஈர்ப்பினை சரியாக வெளிப்படுத்த முடியாமையே இதற்குக் காரணமாகிறது. இவ்வயதில், இரு பாலார் இணைந்து கல்வி, விளையாட்டு மற்றும் சமூக சேவைகளில் பங்கெடுத்தல் மிகவும் அவசியமாகும். இவ்வாறான சந்தர்ப்பங்கள் மூலமே கூச்சம் நீங்கி உணர்வுகளை சமூகப் பொருத்தப்பாட்டுடன் வெளிப்படுத்தும் ஆற்றலை ஒருவர் பெற முடியும். இக்காலத்தில், எதிர்ப்பாலாருடன் பழகுவதனைத் தடை செய்தலானது ஆளுமைக் குறைபாட்டுக்கு காரணமாகலாம். எனவே, கண்காணிப்புடன் கூடிய சுதந்திரத்தையும் வாய்ப்புக்களையும் இப்பருவத்தினருக்குப் பெற்றுக்கொடுப்பது மிகவும் அவசியம். மேலைத்தேய நாடுகளில் சம வயது நண்பர் குழாம்களில் இருபாலாரும் காணப்படுவதனால் இயல்பான சமூகமயமாக்கம் ஏற்படுகிறது. எனினும், எமது கலாச்சாரத்தில் இந்நிலை குறைவு என்பதால் பாலுணர்ச்சி மறைக்கப்பட்டு அதுவே பல உளவியல் நோய்களுக்குக் காரணமாகிறது. எதிர்ப்பாலாரை ஒட்டுமொத்தமாக வெறுத்தல் அல்லது நட்பு, காதல், உடலியல் இச்சை என்பவற்றை வேறுபடுத்த முடியாமல் தவறான முடிவுகளை எடுத்தல் என்பன எமது கலாசாரத்தில் பெரும் பிரச்சினைகளாக உள்ளன.

கட்டிளமைப் பருவம் என்பது உடலின் பல பாகங்களும் அதீத வளர்ச்சியைக் காட்டும் பருவமாகும். எலும்புக்கூடு, தசைகள், உள்ளுறுப்புக்கள், சுரப்பிகள், மூளை ஆகியன துரித கதியில் வளர்ச்சியடைகின்றன. உடலில் சில வேளைகளில் சமமற்ற வளர்ச்சி காணப்படலாம். இதனால் தோற்றம் மாறுபடுகின்றது. இப்பருவத்தில், அதிக பசி, அதிக வியர்வை மற்றும் பருத்தொல்லை என்பன ஏற்படுகின்றன. இக்காலத்தில் வளர்ச்சிக்கு உரிய ஊட்டம் நிறைந்த உணவு கிடைக்கச் செய்வது மிகவும் அவசியமாகும். மேலும் உடற்பயிற்சி மற்றும் உடற் சுகாதாரம் என்பவை தொடர்பில் விசேட கவனம் செலுத்தல் அவசியம்.

இப்பருவத்தினர் தமது உடல் மற்றும் தோற்றம் தொடர்பாக அதிக அக்கறை காட்டுவர். பிறரின் அபிப்பிராயங்களுக்கு அதீத முக்கியத்துவம் கொடுக்கவும் ஆரம்பிப்பர். இப்பருவத்தில் அழகுணர்ச்சி மற்றும் சமூக அந்தஸ்து தொடர்பான சிந்தனை வளர்ச்சி ஏற்படுவதால், தோற்றம் மற்றும் உடைகளில் நேரம் செலவழிப்பர். இக்காலப்பகுதியில் ஒருவர் தான் அசிங்கமாக இருப்பதாகவோ, மற்றவர்கள் தன்னைப் பார்த்து பழிக்கக் கூடும் என்றோ எண்ணி மனவேதனைப்படக்கூடும். இதனால், தன்னம்பிக்கையீனம், ஒதுங்கி வாழல் போன்ற இயல்புகளைக் காட்டவும் கூடும். இவ்வுணர்வுகளை மனம் விட்டுக் கதைப்பதன் மூலம் மாற்றி தன்னம்பிக்கையை ஊட்ட முடியும்.

பின் கட்டிளம் பருவத்தினர் உடல் ரீதியாக முதிர்ச்சியடைந்து விட்டாலும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் ஒரு வளர்ந்தவருக்குரிய மனவியல் முதிர்ச்சி இவர்களிடம் காணப்படுவதில்லை. குடும்பம், பாடசாலை என்ற வட்டத்தைத் தாண்டி பெரிய சமூகத்தினுள் தனியாளாக பிரவேசிக்கையில் எது சரி, எது பிழை என்பதில் தெளிவின்மையும் முடிவு எடுப்பதில் குழப்பமும் ஏற்படுகிறது. நான் யார்? என்ற கேள்வியும் இவர்கள் மனதில் தோன்றுகிறது. இதற்கான விடை தேடும் படலத்திலேயே ஆளுமை பூரணம் அடைகின்றது. இக்காலப் பகுதியில் ஒருவரின் ஆளுமை வெற்றுக் களிமண் போல இருக்கிறது. இதனை சரியான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையில் வார்த்தெடுப்பதில் சம வயதுக் குழுக்கள் ஊடகங்கள் பெற்றோர் மற்றும் சமூகத்தின் பங்கு மிக முக்கியமானது.

கட்டிளம் பருவத்தில் ஒருவரின் சிந்தனை பாரிய மாற்றங்களைப் பெறுகிறது. பல கருத்துப் பொருட்களை பற்றிச் சிந்திக்கவும், தமக்கென இலட்சியங்களையும் கனவுகளையும் உருவாக்கவும் இப்பருவத்தினர் முற்படுகின்றனர். வாழ்க்கை, தொழில், எதிர்காலம் போன்ற பல விடயங்களைத் தீவிரமாக சிந்திக்க ஆரம்பிக்கின்றனர். இதனால் தான், இப்பருவத்தில் தொழில் வழிகாட்டல் மற்றும் தொழிற் பயிற்சியைப் பெற்றுக்கொடுத்தல் வளர்ச்சியடைந்த நாடுகளில் முக்கியத்துவப்படுத்தப்படுகிறது. இத்துடன் இப்பருவத்தினர் தன்மானம், சுயமரியாதை, சுதந்திரம், சமூக அந்தஸ்து ஆகிய விடயங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றனர். இவர்களது சிந்தனை சில வேளைகளில் சீரானதாக இல்லாமலும், முரண்பாடுகள் நிறைந்ததாகவும் காணப்படும்.

கட்டிளம் பருவத்தினர் இத்துணை காலமும் சந்திக்காத புதிய பொறுப்புக்களையும் கடமைகளையும் இப்பருவத்தில் எதிர்கொள்கின்றனர். அன்பு, பாதுகாப்பு, வசதி, வாய்ப்பு எல்லாவற்றையும் குடும்பத்திலிருந்து பெற்றுக்கொண்டிருக்கும் குழந்தையாகவன்றி குடும்ப நலனுக்கு பங்களிக்க வேண்டிய கடப்பாடுடைய ஒருவராக பார்க்கப்படும் போது அந்த திடீர் மாறுதல் கூட மனக் குழப்பத்தினை விளைவிக்கலாம். படிக்கும் பிள்ளை என்று ஒரு வேலையும் சொல்லாமல் கவனித்துக்கொண்ட அம்மா திடீரென மகனை தண்டச்சோறு என்று கூறிவிடலாம். ஒரு சில வேளைகளில் குடும்பத்தின் கஷ்டங்கள் காரணமாக நிதி ரீதியாகவோ வேறு வழியிலோ குடும்பத்தைத் தாங்கும் பொறுப்பு இப்பருவத்தினருக்கு ஏற்படலாம்.

இவ்வாறான வளர்ந்தவருக்குரிய சில கடமைகளை ஏற்று நடக்கும் அதேவேளை ஒரு வளர்ந்தவருக்குரிய உரிமைகள் மறுக்கப்படும் பட்சத்திலே கட்டிளம் பருவத்தினர் எதிர்ப்புணர்விற்கு உள்ளாகின்றனர். தங்கி இருப்பதிலிருந்து விடுபட இவர்கள் முயற்சிக் கையில் 'இந்த உடை அணியாதே அங்கோ போகாதே' போன்ற தினமும் தொடரும் கட்டுப்பாடுகள் சுமையாய்ப் பரிணமிக்கின்றன. மேலைத்தேய நாடுகளில் இப்பருவத்தினர் முழு நேர மாணவர்களாக இருந்தாலும் கூட, பகுதி நேரத் தொழில்களைப் பார்க்கின்றனர். இதன் காரணமாக நிதி ரீதியான சுதந்திரம் அவர்களுக்கு எட்டி விடுகிறது. இதனாலேயே பெற்றோரின் கட்டுப்பாடுகளுக்கோ கட்டாயப்படுத்தல்களுக்கோ உட்படாமல் இயங்க முடிகிறது. 18 வயதில் சட்டப்படி வளர்ந்தவர் என்கிற உரிமையைப் பெற்றதும் வீட்டை விட்டு தனியாக வாடகை வீடு எடுத்துப் போய் விடுவது என்பது அங்கு சர்வசாதாரணம். சமூக உறவுகள் வலுவற்ற அந்தக் கலாசாரத்தில் தனிமை கட்டிளம் பருவத்தினரை வெகு வாகப் பாதிக்கிறது. நீண்டகால நோக்கற்ற உறவுகளும் பிரிவுகளும் மலிந்த சூழலில் விரக்தி என்பதும் மிக மலிந்து காணப்படுகின்றது.

எமது நாட்டைப் பொறுத்தவரை கல்வியும் பல சந்தர்ப்பங்களில் மாணவர்களின் மன அழுத்தத்திற்குக் காரணமாகியுள்ளது என்பது கவலைக்குரிய விடயம். வாழ்வினைத் தீர்மானிப்பதாகக் கருதப்படும் க.பொ.த. சாதாரண மற்றும் உயர்தரப் பரீட்சைகளைக் கடக்கும்போது இதில் தோல்வியுற்றவர்களுக்கான மாற்று வாய்ப்புக்கள் மிகக் குறைவாகக் காணப்படுவதாலேயே இந்நிலை ஏற்படுகின்றது. பரீட்சைப் பெறுபேறுகள் ஒரு மாணவரின் சமூக அந்தஸ்தினையும் தீர்மானிப்பதில் பெற்றோர், உறவினர், ஆசிரியர் போன்ற பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரப்பினரிடமிருந்தும் அழுத்தம் காணப்படுகின்றது. இதனால் மாணவர் மன அழுத்தத் திற்கு உள்ளாவதுடன் தன்னம்பிக்கையையும் இழக்கின்றனர்.

இலங்கையைப் பொறுத்தவரை, மிகக் குறைந்தளவு மாணவருக்கே அரசு உயர் கல்வி வாய்ப்பைப் பெற்றுத் தருகிறது. இதன் காரணமாக உயர்தரப் பரீட்சை மிகுந்த போட்டிக்குரியதாக காணப்படுகிறது. இப்போட்டியில் வெற்றி பெறுவதற்காகக் கட்டிளம் பருவத்தின் பெரும் பகுதியை மாணவர்கள் பரீட்சை நோக்கிலேயே செலவிட வேண்டிய கட்டாயம் உருவாகிறது. இரண்டு அல்லது மூன்று வருடங்கள் பரீட்சை நோக்கிலோ வாழ்க்கை முறையினைப் பின்பற்றும் மாணவருக்கு இவ்வயதில் உடல், உள வளர்ச்சிக்கு அத்தியாவசியமான புறப் பாட விதான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு கால அவகாசம் கிடைப்பதில்லை.

பரீட்சையில் தோல்வியுறுவதால் ஏற்படும் மனத்தாங்கல்கள் ஒருபுறமிருக்க, பரீட்சை யில் சாதித்த மாணவர்களுக்கு ஏற்படும் உளவியல் சிக்கல்கள் மிகவும் கவலைக்கிடமானவை. கல்வியை வாழ்வின் வெற்றிக்கு ஒரு ஊடகமாகவின்றி, கல்வியே மட்டும் வாழ்க்கை என்கிற நோக்கில் வாழ்கின்ற மாணவர்கள், பரீட்சை முடிந்ததும் திடீரென வாழ்க்கைக்கு ஒரு நோக்கம் இல்லாததை உணர்கிறார்கள். பல்கலைக்கழகம் ஆற அமர ஆரம்பிப்பதற்கு ஒரு வருடம் இருக்கும் நிலையில், வாழ்வு வெறுமையானதாய், சலிப்பூட்டுவதாய் தோன்றக்கூடும். இதன் தீவிரம் மனநிலை பாதிப்புக்கு கூட இட்டுச் சென்றுள்ளதற்கு சான்றுகள் பல உண்டு.

இவ்வாறான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் கட்டிளம் பருவத்தவரிடம் வளர்ந்தவருக்குரிய நிதானம், அமைதி போன்ற பண்புகள் குறைவாகவே காணப்படும். தான் ஒரு தனி நபர் என்ற அடையாளத்தை நிலை நிறுத்தும் நோக்கில் இவர்கள் மிகவும் ஆக்கிரமிப்பு மனப்பான்மையுடன் செயற்படக் கூடும். தமது எண்ணம், கருத்துக்கள் மட்டுமே சரியானவை என்ற நிலையில், பெரியோரது கருத்துக்களை கேட்டு நடக்க மறுக்கக் கூடும். சம வயதுக் குழுவினருடன் அதிக ஈடுபாடு காட்டுவதனால், நண்பர்களைக் குறை கூறினால் கோபப்படுவார்கள். இவ்வேளையில் இவர்களுடன் அன்பு மற்றும் கரி சனையுடன் பெற்றோரும் ஆசிரியரும் நடந்து கொள்ளல் மிக இன்றியமையாததாகும். இல்லாத பட்சத்தில், மேலும் அதிகமாக விலகிச் செல்லவும் போதைப் பொருட் பாவனை போன்ற வாழ்வினைச் சிதைக்கும் பழக்கங்களில் ஈடுபடவும் ஆரம்பிப்பர்.

இப்பருவத்தினரிடம் காணப்படும் அதீத சக்தி, மன எழுச்சி என்பவற்றை வெளிப் படுத்துவதற்கான வடிகால்களாக விளையாட்டுக்கள், கலை நிகழ்வுகள் மற்றும் ஏனைய பல சமூகம் சார் நிகழ்ச்சித் திட்டங்கள் காணப்படுகின்றன. முக்கியமாக எமது நாட்டில் கல்வியில் நீண்ட இடைவெளிகள் காணப்படுவது மாணவர் ஊக்கம் மற்றும் சக்தியின் வீணடிப்பு என்றால் தவறில்லை.

பெற்றோர் மற்றும் வளர்ந்தோர் மீதான எதிர்ப்புணர்வு, நண்பர், சம வயதுக் குழுவினரிடம் அதிகளவில் தங்கியிருத்தல் போலச் செய்ய முற்படுதல் ஆகிய குணவியல்புகள் பெரும்பாலும் சகல கட்டிளம் பருவத்தினரும் காட்டுகின்றனர். இப்பரு வத்தினர் மேல் கட்டுப்பாட்டைச் செலுத்தும் அதே வேளை, சரியானளவு சுதந்திரத்தையும் வழங்கி அவர்களின் வெற்றிகரமான விருத்தியை உறுதிப்படுத்துவதென்பது ஒவ்வொரு பெற்றோரும் எதிர்நோக்கும் மாபெரும் சவால் என்று கூறின் மிகையாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில் விபுலானந்த அடிகளாரின் பணிகள்

- தமிழினி ஜெகநாதன் -

ஈழநாடு பெற்றெடுத்த பேரறிஞர்கள் பலர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் சுவாமி விபுலானந்தர். தனது வாழ்நாள் முழுவதும் துறவறத்தில் நின்று தமிழ்மொழிக்கு ஆற்றிய தொண்டுகள் எண்ணிலடங்காது. அவருடைய வாழ்வும் தமிழ்ப் பணிகளும் விதந்து குறிப்பிட வேண்டியவை. இன்றைய சமுதாயத்திற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்பவவை.

சுவாமி விபுலானந்தரின் தமிழ்ப் பணிகள், தமிழ்ஆய்வு, தமிழிலக்கியம், மொழிபெயர்ப்பு, நாடகம், இசை, கவிதை எனப் பல்வேறு கோணங்களில் காணப்படுகின்றன.

'மீன் பாடும் தேன் நாடு' என சிறப்பாக அழைக்கப்படுகின்ற பழைய மட்டக்களப்பு மாவட்டத்தின் காரை தீவு என்னும் இடத்தில் சாமித்தம்பிக்கும் கண்ணம்மைக்கும் ***1892ஆம் ஆண்டு பங்குனி மாதம் 25ஆம் திகதி*** அருந்தவப் புதல்வராக வந்துதித்தார். இளமையிலேயே மயில்வாகனம் என்று அழைக்கப்பட்டு சுவாமி விபுலானந்தர் என்ற துறவுப் பெயரைப் பூண்டவர்.

சிறு வயது முதலே மொழிகளைக் கற்பதில் ஈடுபாடு கொண்டவர். இதனால் தமிழை விருப்பத்துடனும் ஆங்கிலம், வடமொழி என்பவற்றையும் கற்றுத் தேர்ச்சியடைந்தார். இவரது மொழியாற்றல் இவருடைய நூல்களில் வெளிப்பட்டு நிற்பதனைக் காணலாம். விஞ்ஞானக் கல்வியில் அதிக நாட்டம் கொண்டவராக விளங்கினார். இதன் பயனாக பௌதீக விஞ்ஞானக் கல்வியில் பி.எஸ்சி. பட்டம் பெற்றார்.

யாழ்ப்பாணம் புனித பத்திரியார் கல்லூரியில் ஆசிரியராகவும் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் அதிபராகவும் சேவை புரிந்து சிறந்த நற்பிரஜைகளை உருவாக்கினார். மயில் வாகனம் என்று இளமையில் அழைக்கப்பட்ட சுவாமி விபுலானந்தர் தனது ஆசிரியர் பணியை மேற்கொண்ட காலங்களில் அவரது உள்ளம் ஆன்மீகம், துறவறம் என்பவற்றில் ஈடுபாடு கொண்டது. இதனால் அவரது உள்ளம், துறவற வாழ்வினை விரும்பியது. இதனால் தனது முப்பதாவது வயதில் இராமகிருஷ்ண சங்க மடத்தில் இணைந்து கொண்டு பூரண துறவியானார்.

மயில்வாகனம் என்ற பெயரைத் துறந்து பிறபோதசைதன்யர் என்னும் பெயரைப் பெற்றார். பின்னர் தனது முப்பத்திரண்டாவது வயதில் குருப்பட்டம் பெற்று சுவாமி விபுலானந்தர் என்னும் திருநாமத்தைப் பூண்டார்.

விபுலானந்த அடிகளார் தனது துறவற வாழ்வையும் தமிழ்மொழிக்கான பணியையும் சமமான முக்கியத்துவத்தை கொடுத்து மேற்கொண்டார். இதனால் இவர் சிறந்த துறவியாகவும் சிறந்த தமிழ் அறிஞராகவும் இன்றும் போற்றப்படுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்மொழியில் புலமை வாய்ந்தவராக விளங்கிய இவர் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் பண்டிதர் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார். இவரின் ஆளுமை நாடு கடந்து தென்பட்டது. அதாவது இவரது தமிழறிவினையும் ஆய்வுத் திறமையையும் நன்குணர்ந்த சென்னைப் பழ்கலைக்கழகத்தினர் சிதம்பரத்தில் பல்கலைக்கழகம் அமைக்கவேண்டிய தேவை பற்றி விதந்துரைக்கும்படி வேண்டினர். விபுலானந்தரின் சிபாரிசின்படி சிதம்பரத்தில் புகழ் வாய்ந்த அண்ணாமலைப் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது அங்கு தமிழ்த்துறைப் பேரா சிரியராக சுவாமி விபுலானந்தரையே நியமித்தனர். இலங்கைப் பல்கலைக்கழகமும் முதல் தமிழ்ப் பேராசிரியராக அவரையே அமர்த்தியது.

ஈழத்தமிழரின் கல்வி வளர்ச்சியினை ஆர்வத்துடன் கண்ணோக்கிச் செயற்பட்டார். தன்னால் முடிந்த உதவிகளை ஈழத்தமிழருக்காக செய்து முடித்தார். இன்றும் நிமிர்ந்து நிற்கக் கூடிய இராமகிருஷ்ண கல்விக் கூடங்கள் அதனைப் பறைசாற்றுகின்றன. அதன் மூலம் பல ஈழத்தமிழ் அறிஞர்களையும் உருவாக்கினார்.

பண்டைத் தமிழரின் பண்பாடு, கலாசாரம், இசை எனப் பல்வேறு ஆய்வுகளை சுவாமி விபுலானந்தர் மேற்கொண்டார். அதன் விளைவாக 'யாழ்நூல்' என்னும் அரிய நூலினை ஆக்கினார். யாழ்நூல் சுவாமியின் ஆய்வுச் சிறப்பினை பிரதிபலிப்பதாக விளங்கியது. தமிழரின் பண்டைய இசைக்கருவியானது யாழ் படிப்படியான வழக்கொழிந்து வருவதனைக் கண்டு, இசைக்கருவியை மீட்டெடுக்கும் பணியில் ஈடுபட்டார். சிலப்பதிகாரத்திலும், பழைய இலக்கியங்களிலும் இசைத்தமிழ் நூல்களிலும் யாழ் பற்றிக் கூறப்பட்டதனை நுணுகி ஆராய்ந்து, விரிவான விளக்கங்களைப் பெற்றே யாழ்நூல் என்ற நூலினை வெளி யிட்டார்.

ஆன்மீகம், கல்வி, சமூகம், இலக்கியம் என்பவற்றை மையக் கருவாகக் கொண்டு கவிதைகளை எழுதி வெளியிட்டார். சுவாமி விபுலானந்தர் எழுதிய கவிதைகள் கவிமலர் என்னும் தொகுதியில் வெளிவந்துள்ளன. அவரது முதற் கவிதை 'ஈசனுக்கும் இன்மலர்கள்' என்பதாகும். அவர் எழுதிய கவிதைகள் பெருந்தொகையில் இருந்தாலும் 'கங்கை விடுத்த ஓலை' என்ற கவிதையே அவருடைய கவித்திறமைக்கு சான்றாகும்.

இலங்கையின் தமிழ் நாடக வளர்ச்சிக்கு அடிகளார் ஆற்றிய சேவைகள் அளப்பெரியன. ஆங்கிலம், ஆரியம் ஆகிய மொழிகளில் இருந்த ஒப்பற்ற புலமை 'மதங்க சூளாமணி' என்னும் தமிழ் நாடக நூலில் புலப்படுவதனை அவதானிக்கலாம். அந்நூலின் முதலாம் உறுப்பியலிலே தமிழ் இலக்கண இலக்கியங்கள் கூறும் நாடகத் தமிழ் பற்றிய கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. இரண்டாம் இயலில் சேக்ஸ்பியரின் பன்னிரண்டு நாடகங்களின் சிறப் பியல்புகள் விளக்கப்பட்டுள்ளன. மூன்றாம் இயலில் பலராலும் கூறப்பட்ட கருத்துக்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

சுவாமி விபுலானந்த அடிகளின் மொழி ஆளுமை அவரை மொழிபெயர்ப்புத் துறை யிலும் பிரபல்யமடைவதற்குத் துணையாக விளங்கியது. இவரது மொழிபெயர்ப்புக்கள் தழுவல் மொழியாக்க வகைகளைச் சார்ந்திருந்தன. இதில் மொழிபெயர்ப்பாளரின் திறமை மேலோங்கி காணப்படுவதனை அவதானிக்கலாம். இரு மொழிகளுக்கிடையிலே விளங்கும் பண்பாட்டு வேறுபாடுகளை இவ்வகை மொழிபெயர்ப்புக்கள் சமன் செய்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்திலே ஈழகேசரிப் பத்திரிகையில் மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் ஆக்கங்களை வெளியிட்ட காலத்தில் அடிகளாரும் எழுதி தனது ஆக்கங்களையும் வெளியிட்டார். சுவாமி அவர்கள் சிறந்த கவிஞராகவும் திகழ்ந்தார் என்பதை திருச்சி வானொலி கவி யரங்கத்தில் தனது கவிதை நடையிலே கண்ணப்ப நாயனார் புராணத்தைப் பாடிய சந்தர்ப்பம் என்றும் நினைவுபடுத்தும்.

இவர் ஆசிரியர்களுக்காகவும் கட்டுரைகளை எழுதி வெளியிட்டார். இலக்கியம் கற் பிக்கும் ஆசிரியர்களுக்குப் பயன்படும் வகையில் கட்டுரைகளை எழுதினார். ஐயமும், அழகும், நிலவும். பொழிலும், கவியும், சால்பும், வண்ணமும் வடிவும் ஆகிய கட்டுரைகளை எழுதினார். ஆங்கிலவாணி என்ற கட்டுரையினை ஆங்கிலப் புலவர்களின் இலக்கியங்களின் சிறப்புக்களை எடுத்துக்காட்டுவதற்காக எழுதியுள்ளார்.

இவ்வாறாக தமிழ், இலக்கியம், மொழிபெயர்ப்பு நாடகம், இசை, கவிதை எனப் பல்வேறு துறைகளுக்காகத் தொண்டாற்றிய ஒப்பற்ற அடிகளாரை முத்தமிழ் முனிவர் எனத் தமிழ் உலகு போற்றுகின்றது. உலகெங்கும் தமிழ்மொழியினதும் தமிழ் இலக்கியத் தினதும் தமிழ் கலையினதும் பெருமைகளை கொண்டு சேர்ந்த விபுலானந்தப் பெருந்தகை தமிழ் வரலாறு ஓர் உன்னத இடத்தைத் தேடித் தந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியே தனிமனிதனின் உயர்விற்கும் சமுதாய மேம்பாட்டிற்கும் ஆதாரம்

- சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் -

இளைப்பாறிய விரிவுரையாளர், பலாலி ஆசிரிய கலாசாலை

**கல்வியின் முக்கியத்துவம்**

உலகில் வாழும் ஒவ்வொரு மனிதனும் பெறவேண்டிய செல்வங்களில் கல்விச் செல்வமே மிக உயர்ந்த செல்வமாகும். கல்வியினால் ஒருவன் பெற்றுக்கொள்ளும் அறிவு அவனுக்கு மூன்றாவது கண்ணாக ஞானக் கண்ணாக மிளிர்கிறது. அழியா யாராலும் அழிக்க முடியாத, சீவிய பரியந்தம் ஒருவனுடன் தொடர்புபடுகின்ற செல்வமாகத் திகழ்வது கல்விச் செல்வமே ஆகும். ஒருவனுடைய பூதவுடல் அழிந்தாலும் புகழுடல் அழியாமல் இருப்பதற்கு கல்விச் செல்வமே என்றும் துணையாக உள்ளது. வாழ்க்கையில் என்றும் துணையாக இருப்பது கல்வியே என்பதை 'துணையாய் வருவது தூய நற்கல்வியே' எனத் தமிழ் மந்திரமாகிய திருமந்திரமும் குறிப்பிடுகிறது. அரசர்களுக்கு தனது தேசத்தில் மட்டும் தான் சிறப்பு இருக்கும். கல்வி கற்ற அறிஞர்களுக்கு அவர்கள் சென்ற இடமெல்லாம் சிறப்பு இருக்கும் என்பதை,

> *'மன்னறக்குத் தன் தேசமல்லாற் சிறப்பில்லை - கற்றோர்க்குச்*
> *சென்ற விடமெல்லாம் சிறப்பு'*

எனத் தமிழ் மூதாட்டியாகிய ஔவையாரும் தனது நல்வழிப் பாடலில் குறிப்பிடுகின்றார்.

மனிதர்கள் தமது வாழ்நாளில் தேடுகின்ற செல்வங்களில் பல காலவெள்ளத்தால் அழியும் தன்மை உடையனவாகக் காணப்படுகின்றன. சிலர் தமது வாழ்நாள் முழுவதும் பொருட்செல்வத்தைத் தேடுவதையே வாழ்வின் இலட்சியமாகக் கொண்டு செயற்படுவார்கள். பணம் வாழ்க்கைக்கு அவசியம். ஆனால் பணம் மட்டும் வாழ்க்கையன்று என்பதை நாம் அனைவரும் அனுபவரீதியாக அறிந்திருக்கின்றோம். பொருட் செல்வம் வெள்ளத்தால் அழியும், வெந்தணலால் வேகும், கள்வரால் கவரப்படும், மாறுபட்ட பங்காளிகளாலும் பகைவராலும் பற்றப்படும், கொடுங்கோல் அரசரால் கொள்ளப்படும், கொடுக்கக் கொடுக்கக் குறையும். ஆனால் கல்வியோ எவற்றாலும் அழியாது, எவராலும் கொள்ளப் படாது. கொடுக்கக் கொடுக்க வளர்ந்துகொண்டே போகும்.

கல்வி அறிவில்லாதவன் மிருகம் (வித்யா விஹீன பக), கல்வியே ஒருவர்க்குச் சிறந்த அணிகலன் (வித்யா ஸர்வஸ்ய பூஸணம்) என வடமொழிச் சுலோகங்கள் கூறுகின்றன. 'கல்வி அழகே அழகு' எனப் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாகிய நாலடியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடுகிறது. கற்றவர்களின் முகத்தில் இருப்பதுவே கண். மற்றவர்களின் முகத்தில் இருப்பது கண் அல்ல. புண் என்பதை

'கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்'

எனத் தெய்வத் தமிழாகிய திருவள்ளுவரின் திருக்குறளும் செப்புகிறது.

**இலங்கையில் கல்வி**

போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகிய அந்நியர்களால் ஏறக்குறைய ஐந்து நூற்றாண்டுகள் வரை ஈழமணித் திருநாடு ஆட்சி செய்யப்பட்டது. தமது மதத்தைப் பரப்புவதும், நாட்டின் பொருளாதார வளத்தைச் சுரண்டுவதுமே இவர்களின் முக்கிய குறிக்கோளாக அமைந்திருந்தது. கத்தோலிக்க மிக்ஷன், அங்கிளிக்கன் மிக்ஷன், மெதடிஸ்ற் மிக்ஷன், அமெரிக்க மிக்ஷன் ஆகிய கிறிஸ்தவ மத நிறுவனங்கள் நடாத்திய பாடசாலைகளின் ஊடாகவே நமது மாணவர் பலர் கல்வியைப் பெற்றனர். நமது மாணவர்களை மதம் மாற்றுவதற்கு ஆங்கிலக் கல்வி என்ற இனிப்புப் பண்டத்தை கிறிஸ்தவ மிக்ஷனரிகள் பயன்படுத்தினர். மதம் மாறாமல் கல்வி பயில வேண்டுமானால் பெருந்தொகைப் பணம் செலுத்த வேண்டிய நிலை இருந்தது. அநகாரிக தர்மபால, ஆறுமுகநாவலர், சித்தி லெப்பை போன்ற பெரியார்களின் முயற்சியினால் சுதேஷிய பாடசாலைகள் உருவாகியபோதும், அவற்றால் மிக்ஷனரி பாடசாலைகளின் தரத்திற்கு ஏற்ப செயற்பட முடியவில்லை. ஆங்கிலேய அரசின் உதவியும் மிஷனரிப் பாடசாலைகளுக்கே கூடுதலாக இருந்தன.

**இலவசக் கல்வியினால் ஏற்பட்ட பயன்கள்**

இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன்பு, டொனமூர் அரசியல் யாப்பின் கீழ் ஓரளவு பொறுப்பாட்சித் தன்மை இலங்கையரிடம் ஒப்படைக்கப்பட்டது. 1931ஆம் ஆண்டு சர்வஜன வாக்குரிமை அறிமுகப்படுத்தப்பட்டது. இலங்கை முழுவதும் ஐம்பது தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுத் தேர்தல் நடைபெற்றது. 21 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரும் வாக்களிக்கும் உரிமையைப் பெற்றிருந்தார்கள். மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் சட்டசபையில் இருந்ததால் சமூக நலத்திட்டங்கள் பலவற்றை உருவாக்க அவர்கள் முனைந்தார்கள். 1945ஆம் ஆண்டில் கல்வி அமைச்சராக இருந்த சி.டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா இலவசக் கல்வித் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். மேல்தட்டு மக்களின் ஏகபோக உரிமையாக இருந்த கல்வியினை சாதாரண மக்களும் பெறக்கூடிய வாய்ப்பு இலவசக் கல்வியினால் ஏற்பட்டது. கிராமங்களிலே பிறந்த ஏழை விவசாயியின் மகனும் கல்வியினைப் பெறும் வாய்ப்பு இதனால் ஏற்பட்டது. கன்னங்கராவினால் தொகுதிகள் தோறும் உருவாக்கப்பட்ட மத்திய மகா வித்தியாலயங்கள் வறுமையில் வாடும் ஏழைப் பெற்றோருக்குப் பிறந்த ஆற்றல் மிக்க பிள்ளைகளைத் தூக்கிவிடும் ஏணிகளாகச் செயற்பட்டன. விவேகம் நிறைந்த கல்வியிலே ஆர்வம் உடைய வறிய குடும்பத்து மாணவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு உணவு, உண்டி, உறையுள் என்பவற்றை வழங்கி கல்வியைப் பெறும் வாய்ப்பினை மத்திய மகா வித்தியாலயங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்திக் கொடுத்தன. தொழிற் கல்விக்கு இங்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. இப்பாடசாலைகள் அமைந்திருக்கும் சூழலிலே உள்ள மூலவளங்களைப் பயன்படுத்தக்கூடிய தொழிற்கல்விக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. இங்கு கல்வி கற்ற மாணவர்களில் பலர் இலங்கை அரசில் உயர் அதிகாரிகளாகச் சிறப்பாகப் பணியாற்றி இளைப்பாறியுள்ளார்கள். இன்றும் பலர் பல்வேறு துறைகளில் தமது பணியினைச் செய்து வருகிறார்கள்.

இலவசக் கல்வி வழங்கப்பட்டமையால் இலங்கையில் வாழும் மக்களின் எழுத்தறிவு வீதம் (90%) இற்கு மேல் சென்றுள்ளது. பெண்களும் கல்வி அறிவு உடையவர்களாக மாறியமையால் வீட்டிலும் சூழலிலும் சுத்தம், சுகாதாரம் என்பன சிறப்பாகப் பேணப்படுகிறது. இதனால் மனிதனின் மரணமடையும் வயதும் அதிகரித்துக் காணப்படுகின்றது. இலங்கை சுதந்திரம் அடைந்த பின்பும் கல்விக்காகத் தொடர்ந்து பெருந்தொகைப் பணத்தினை அரசாங்கம் செலவிட்டு வருகிறது. இலவசக் கல்வியுடன் புத்தகம், சீருடை, மதிய உணவு என்பவற்றையும் இலவசமாக வழங்கி மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு உதவி வருகிறது.

**கல்வியில் சம வாய்ப்பு**

இலங்கையின் சனத்தொகையில் 22 வீதமானவர்கள் பாடசாலை மாணவர்களாக உள்ளனர் எனப் புள்ளி விபரங்கள் குறிப்பிடுகின்றன. ஏறக்குறைய 10,000 பாடசாலைகளில் 40 இலட்சத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயில்கிறார்கள். இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் இவர்களுக்கு கல்வி பயற்றுவிப்பதற்காக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இலங்கை அரசாங்கத்தின் கீழ் பணிபுரியும் அரச சேவையாளர்களில் அதிக எண்ணிக்கையினை ஆசிரியர்களே கொண்டிருக்கிறார்கள். கல்விக்கான நடைமுறைச் செலவில் பெரும்பகுதி ஆசிரியர்களின் சம்பளத்திற்காகவே ஒதுக்கப்பட்டுள்ளது. கல்விக்காக ஒதுக்கப்பட்ட பணத்தில் நடைமுறைச் செலவுடன் ஒப்பிடும்பொழுது மூலதனச் செலவு மிகவும் குறைவாகவே காணப்படுகிறது.

கல்வியில் அனைவர்க்கும் சமவாய்ப்பு வழங்கப்படுகின்றது என்றே அரசு கூறுகிறது. ஆனால் நடைமுறையில் கிராமப்புறப் பாடசாலைகளுக்கும் நகர்ப்புறப் பாடசாலைகளுக்கும் இடையே பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. குடிநீர் வசதி, மலசலகூட வசதி, மாணவர்கள் படிப்பதற்கான வகுப்பறைகள், தளபாடங்கள் ஆகிய அடிப்படை வசதிகள் கூட இல்லாமல் பல கிராமப்புறப் பாடசாலைகள் இயங்குகின்றன. நீச்சல் தடாகம், நவீன முறையில் அமைக்கப்பட்ட கணனி வகுப்பறைகள் உட்பட மிதமிஞ்சிய வளங்களோடு இயங்குகின்ற பாடசாலைகள் நகர்ப்புறங்களில் உள்ளன. சமூகத்தில் செல்வாக்குள்ள பெற்றோர்களின் பிள்ளைகள் பெரும்பாலும் நகர்ப்புறப் பாடசாலைகளில் அனுமதியைப் பெற்று விடுவார்கள். திறமையான மாணவர்கள், செல்வாக்குள்ள பெற்றோர் இல்லாத பாடசாலைகளுக்கு கல்வித் திணைக்கள அதிகாரிகளின் அருட்பார்வையும் கிடைப்பது அரிதாகவே காணப்படுகின்றது.

விஞ்ஞானம், விவசாயம், மனையியல், கணனி, தொழில்நுட்ப பாடங்கள் ஆகியவற்றில் மாணவனின் கற்றல் பூரணமடைவதற்கு செயல்முறைப் பயிற்சி அவசியமாகும். இவற்றை வழங்குவதற்கான ஆய்வு கூடங்களோ, தொழிற் கூடங்களோ, பயிற்சிப் பட்டறைகளோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமப்புறப் பாடசாலைகளில் அரிதாகவே காணப்படுகிறது. இதற்கான சிறப்புத் தேர்ச்சி பெற்ற ஆசிரியர் ஆளணியும் கிராமப்புறப் பாடசாலைகளுக்கு கிடைப்பதில்லை. மாணவர்கள் கல்வி கற்கும் காலத்தில் பாடசாலையில் இடம்பெறும் பாடப்புறச் செயற்பாடுகளில் ஈடுபடுவதன் மூலமே தங்களது ஆளுமையை வளர்த்துக்கொள்கிறார்கள். விளையாட்டு, நடனம், நாடகம், சாரணீயம் போன்றவற்றில் ஈடுபாடு கொள்வதால் மாணவர்கள் வாழ்க்கைக்கான பரந்துபட்ட கல்வியைப் பாடசாலைகளில் பெற்றுக் கொள்கிறார்கள். இவற்றைப் பெறுவதற்கான வாய்ப்புக்களும் வழிகாட்டல்களும் நகர்ப்புறப் பாடசாலைகளிலேயே அதிகம் கிடைக்கின்றன. சர்வதேச மொழியாகிய ஆங்கில மொழியைக் கற்பதற்கான ஆசிரியர் ஆளணியோ, பாடத்தை மாணவர்கள் விரும்பிக் கற்பதற்கான சூழ்நிலைகளோ கிராமப்புறப் பாடசாலைகளில் இல்லை. க.பொ.த. (சாதாரணதரம்) தரப் பரீட்சைக்கு ஆங்கில இலக்கியம் என்ற ஒரு பாடமும் எடுக்கலாம் என்ற செய்தியே தெரியாமல் இங்கு கற்கும் மாணவர்களில் பலர் இருக்கிறார்கள்.

'கல்வி என்பது மனிதனின் அடிப்படை உரிமை' என்பது ஐக்கிய நாடுகள் சபையினால் பிரகடனப்படுத்தப்பட்ட வாசகம் ஆகும். 5-14 வயதிற்குட்பட்ட பிள்ளைகளுக்கு கட்டாயக் கல்வி வழங்கப்படல் வேண்டும் என்பது இலங்கை அரசின் கொள்கை ஆகும். பல வருடகாலமாக இச்சட்டம் நடைமுறையில் இருந்தபோதிலும் ஏறத்தாழ 14 வீதமான பிள்ளைகள் பாடசாலை செல்வதில்லை. நேரடி வறுமை, பெற்றோரின் அக்கறையின்மை, போர்க்காலச் சூழ்நிலையால் ஏற்பட்ட பாதிப்புகள் என்பன இதற்கான காரணங்கள் ஆகும். மலையகத் தோட்டப்புற மாணவர்களில் பாடசாலை செல்லாதோரின் விகிதம் மிக அதிகமாகக் காணப்படுகிறது.

### பரீட்சையை மையமாகக் கொண்ட அளவீட்டு முறைகள்

நமது நாட்டில் அரசால் நடாத்தப்படும் தேசிய மட்டப் பரீட்சைகள் மாணவனின் கல்வி அடைவைப் பரீட்சிப்பதற்கு உகந்த அளவுகோலா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. பதின்மூன்று வருடங்கள் மாணவன் பாடசாலையில் பெற்ற கல்வியின் தரத்தை 5 அல்லது 6 மணித்தியால எழுத்துப் பரீட்சைகளின் மூலம் அறவிடுவது நம்பகத் தன்மை உடையதா? என்ற கேள்வியும் எழுகிறது. மாணவர்கள் அனைவரும் பரீட்சையை மையமாகக் கொண்டே இயங்கிக் கொண்டு இருக்கிறார்கள். மாணவர்கள் சரியாக உணவின்றி, ஓய்வின்றி, பாடப்புறச் செயற்பாடுகளில் ஈடுபாடு இன்றி, சங்கீதக் கதிரை ஓட்டப்போட்டியில் பங்குபற்றுவது போலத் தேசிய மட்டப் பரீட்சைகளை நோக்கி ஓடுகின்றார்கள். பெற்றோரும் அப்போட்டிப் பரீட்சைகளில் பிள்ளைகளின் வெற்றியை எதிர்பார்த்தே செயற்படுகிறார்கள். தேசிய மட்டப் பரீட்சைகளில் ஐந்தாம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சையின் நிலை மிகவும் பரிதாபகரமனானது. 10-11 வயதுப் பருவத்தில் இருக்கும் மாணவர்கள் பாட சாலையால் வந்ததும் தனியார் கல்வி நிலையங்களை நோக்கி ஓடுகின்றார்கள். சில மாணவர்களுக்கு பாடசாலைக் கல்வி, தனியார் கல்வி நிலையம் வழங்கும் கல்வி என்பவற்றுடன் தனிப்பட்ட பிரத்தியேக வகுப்புகளும் பெற்றோரால் ஒழுங்குபடுத்தப் படுகின்றன. இப்பரீட்சையினால் மாணவர்களின் உடல்நிலை பாதிப்பு அடைவதோடு அவர்களின் சுய ஆற்றலும் மழுங்கடிக்கப்பட்டு கிளிப்பிள்ளையாக மாறிவிடுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைகளும் தேசிய மட்டப் பரீட்சைகளின் பெறுபேறுகளே தங்கள் பாட சாலைகளின் உயர்மதிப்பிற்கு அடிப்படைக் காரணம் என நினைக்கின்றன. தனியார் கல்வி நிலையங்களும் பரீட்சையை மையமாகக் கொண்டே கற்பித்தலை நடாத்துகின்றன. தேசிய மட்டப் பரீட்சைகளில் தோல்வி அடையும் மாணவர்கள் உளத்தாக்கங்களுக்கு உள்ளாகுவ துடன் வாழ்வில் விரக்தியும் அடைகிறார்கள். பாடசாலையை விட்டு வெளிவீசப்படும் மாணவர்களுக்கான கல்வி வாய்ப்புக்களோ தொழில் வாய்ப்புக்களோ அரசால் திட்டமிட்ட முறையில் சரியாக வழங்கப்படுவதில்லை. கற்ற கல்வியினால் எதுவித பயனையும் அடையமுடியாத மாணவர்கள் வீட்டிற்கும் நாட்டிற்கும் தொல்லை தருபவர்களாக மாறி விடுகிறார்கள். நமது நாட்டின் மூலவளங்களைப் பயன்படுத்தக்கூடிய தொழில்சார் கல்விகள், விவசாயம் சார் கல்விகள் மாணவர்களுக்கு வழங்கப்படல் வேண்டும். முறை சாராக் கல்வி அபிவிருத்தி அடைவதோடு பாடசாலையை விட்டு வெளி வீசப்படும் மாணவர்கள் அனைவரும் அதற்குள்ளே உள்வாங்கப்படல் வேண்டும்.

**நிறைவுரை**

இலங்கை சுதந்திரமடைந்து அறுபத்து மூன்று வருடங்கள் பூர்த்தியாகிவிட்டது. பிரித்தானியர் விட்டுச்சென்ற காலனித்துவ ஆட்சியாளர்களின் கல்வி முறையில் இருந்து பாரிய மாற்றங்களை நாம் இன்னும் அடையவில்லை. காலத்திற்கு காலம் கல்வியில் பல சீர்திருத்தங்கள் அரசால் கொண்டுவரப்பட்டன. அரசும் ஆட்சியாளர்களும் மாறியதும் நடைமுறைப்படுத்தப்பட்ட கல்விச் சீர்திருத்தங்களிலும் தடைகள் ஏற்பட்டன. உதாரணமாக தொழிற்கல்விக்கும், சூழல் சார்ந்த கல்விக்கும் முக்கியத்துவம் வழங்கப்படல் வேண்டும் என்று 1971ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட கல்விச் சீர்திருத்தம் காலப்போக்கில் கைவிடப்பட்டது. பின்பு ஐ.தே.க. அரசால் கொண்டுவரப்பட்ட கொத்தணிப் பாடசாலைகள் அமைப்பு முறையும் சில காலங்களில் செயலற்றுப் போய்விட்டது. வளர்ந்து வரும் அறிவியல் உலகோடு பொருந்தக் கூடியவாறும், நாட்டின் தேவைக்கேற்பவும் கல்விக் கொள்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்தி அவற்றைச் சீராக அமுல்படுத்த வேண்டிய பொறுப்பு நாட்டை ஆளும் ஆட்சியாளர்களின் கடமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமர் சிறீமாவோ பண்டாரநாயக்காவின் வெளிநாட்டுக் கொள்கை

- சங்கீத்தா அருள்ஞான சீலன் -

கொழும்பு பல்கலைக்கழகம், பொருளியல் துறை 3ம் வருடம்

### அறிமுகம்

இலங்கையினுடைய வெளிநாட்டுக் கொள்கையிலே சிறீமாவோ பண்டாரநாயக்காவின் காலத்தில் இடம்பெற்ற வெளிநாட்டுக் கொள்கையானது அதிமுக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது.

இங்கு வெளிநாட்டுக் கொள்கை என்றால் என்ன? இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை, சிறீமாவோ பண்டாரநாயக்காவிற்கு முன்னரான வெளிநாட்டுக் கொள்கை, சிறீமாவோ பண்டாரநாயக்காவினுடைய வரலாறு, இந்தியாவுடனான உறவு, கம்யூனிஸ நாடுகளினூடான உறவு, மேற்கத்தேய நாடுகளினூடான உறவு, அணிசேரா இயக்கத்தினை வலுவாக்குதல் சிறீமாவின் வெளிநாட்டுக் கொள்கை என்பன கவனத்தில் கொள்ளப்படுகின்றன.

### வெளிநாட்டுக் கொள்கை

வெளிநாட்டுக் கொள்கை என்பது உலகின் மற்றைய பகுதிகளோடு ஒரு அரசாங்கத்தின் தொடர்புகளை நடத்துவதற்கான திட்டவட்டமானதும் அறிவு, அனுபவம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டதுமான ஒரு விரிவான திட்டமாகும். அது நாட்டின் பாதுகாப்பு, தேசிய நலன் என்பதை இலக்காகக் கொண்டது.

ஒரு நாடு தனது வெளிநாட்டுக் கொள்கையினை தீர்மானிப்பதில் பல காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. அவை எல்லா நாடுகளுக்கும் பொதுவான ஒன்றாக அமைவதில்லை. குறிப்பிட்ட நாட்டின் சூழ்நிலைக்கு மட்டும் பொருந்துவதாக அமையலாம்.

### இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை

இலங்கையைப் பொறுத்தவரை சுதந்திரமடைந்த காலம் தொடக்கம் அது பின்பற்றிய வெளிநாட்டுக் கொள்கையில் எல்லா நாடுகளுக்கும் உள்ள பொதுவான காரணிகளும், இலங்கைக்கு மட்டுமேயான சில குறிப்பான காரணிகளும், செல்வாக்குச் செலுத்தியுள்ளன. அவற்றில் பின்வருவன முக்கியமானவையாகும்.

1. இலங்கையின் புவியியல் அமைவு
2. பொருளாதார நிர்ப்பந்தங்கள்
3. ஆட்சியிலிருந்த அரசாங்கங்களின் இயல்புகள்
4. பல்லின சமூகத்தின் இயல்புகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. அரசியல் தலைமைத்துவத்தின் இயல்புகள்
6. உள்நாட்டு அரசியல் சூழ்நிலை
7. சர்தேச அரசியல் சூழ்நிலை

**சிறீமாவோ பண்டாரநாயக்காவிற்கு முன்னரான வெளிநாட்டுக் கொள்கை**

1956ஆம் ஆண்டிற்கும் 1959ற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் 'அமைதிப் புரட்சி' என்று சொல்லத்தக்கவகையில் பல்வேறு மாற்றங்களை பண்டாரநாயக்கா அவர்கள் செய்திருந்தார். இவர் அணிசேராக் கொள்கையை வெளிப்படையாக ஆதரித்திருந்தார். 'நேருவின் சீடர்' என்னும் அளவிற்கு இந்தியாவுடன் நெருங்கிய தொடர்புகளை வைத்திருந்தார். கம்யூனிஸ நாடுகளுடன் உறவு வலுப்படுத்தப்பட்டது. மேற்கத்தேய நாடுகளுடன் முன்பு காணப்பட்ட உறவினை தனது செயற்பாட்டின் மூலம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தார். ஓர் அணிக்குள் செல்லாது இரு அணிகளையும் சமதூரத்தில் வைத்திருந்தார். சிறீமாவோ பண்டாரநாயக்காவின் வெளிநாட்டுக் கொள்கைகளுக்கு பண்டாரநாயக்கா அவர்களே அடித்தளத்தை வழங்கினார். சிறீமாவின் வெளிநாட்டுக் கொள்கை, பண்டாரநாயக்காவின் வெளிநாட்டுக் கொள்கையை அபிவிருத்தி செய்வதாக அமைந்தது.

**சிறீமாவோ பண்டாரநாயக்கா (1960 – 1964, 1970–1977)**

ஒரு குடும்பப் பெண்ணாக இருந்த திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்கா அவர்கள் தமது கணவரும், சிங்களத்தை ஒரே நாளில் அரியாசனம் ஏற்றுவேன் என்று வாக்குறுதியளித்து ஆட்சிக்கு வந்தவருமான எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்கா ஒரு புத்தபிக்குவால் சுட்டுக்கொல்லப்பட்ட பின், உலகின் முதலாவது பெண் பிரதமர் என்ற பெருமையுடனும் இலங்கையின் ஏழாவது பிரதமர் என்ற வகையிலும் வெளிப்படையாக 1960 ஜூலை 21ஆம் திகதி அரசியலில் அடியெடுத்து வைத்தார். இதன் அடிப்படையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்று, சிறீமா 1960-196 ஆண்டுகளிலும், 1970-1977 வரையான ஆண்டுகளிலும் நாடாளுமன்ற அதிகாரமுள்ள பிரதமராக பதவி வகித்தார். இவரது வெளிநாட்டுக் கொள்கை எஸ்.டபிள்யூ. ஆர்.டி பண்டாரநாயக்காவின் கொள்கையை ஒத்ததாகவும் அதனை வலுப்படுத்துவதாகவும் அமைந்திருந்தது. 1994 முதல் 2000ஆம் ஆண்டு வரை சந்திரிக்காவின் தலைமையின்கீழ் பிரதமராக விளங்கினார்.

**இந்தியாவுடனான உறவு**

இலங்கை - இந்திய உறவு என்பது புவியியல் ரீதியாக நோக்கப்பட வேண்டிய அம்சமாகும். சுதந்திரம் அடைந்த காலப்பகுதியில், அயல்நாடான இந்தியா, இலங்கையை கைப்பற்றிவிடும் என்ற அச்சம் காணப்பட்டது. அக்காலகட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சி நடைமுறையில் இருந்தமை குறிப்பிடத்தக்க ஓர் அம்சமாகும். இவ் அச்சமும் பிரித்தானியாவுடன் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட ஓர் காரணமாக அமைந்தது. எஸ்.டபிள்யூ. ஆர்.டி பண்டாரநாயக்கா அவர்கள் 1956ஆம் ஆண்டு முதல் இந்தியாவுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருங்கிய உறவுகளை மேற்கொண்டார். சிறீமா காலத்தில் இந்நிலை மேலும் வலுவடைந்தது.

சிறீமாவிற்கு இந்தியாவுடனான உறவு என்பது **'பேரம் பேசுகின்ற நடவடிக்கை'** என அரசியல் அறிஞர்களால் விமர்சிக்கப்பட்டது. இதன் அடிப்படையிலேயே 1964ஆம் ஆண்டு சிறீமா - சாஸ்திரி உடன்படிக்கை, 1974ஆம் ஆண்டு சிறிமா - இந்திரா உடன் படிக்கை என்பன மேற்கொள்ளப்பட்டன. இவ் உடன்படிக்கைகள் இந்திய வம்சாவழி மக்களை தமது தாய்நாட்டிற்கு திருப்பி அனுப்புவது தொடர்பாகக் மேற்கொள்ளப் பட்டது.

சிறீலங்கா சுதந்திரகட்சி காலப்பகுதியில் இலங்கை - இந்திய பிரச்சினைகள் மேலெழுவதை அவதானிக்க முடியும். இவரது காலப்பகுதியிலும் கச்சதீவு பிரச்சினை, கடல் எல்லைப் பிரச்சினை என்பன தீர்க்கப்பட்டன. கச்சதீவினை இலங்கை தனதாக்கிக் கொண்டமையும் இவரது காலப்பகுதியில் என்பது குறிப்பிடத்தக்க சிறப்பம்சம் ஆகும்.

**கம்யூனிஸ நாடுகளுடனான உறவு**

பண்டாரநாயக்கா காலம் தொடக்கம், கம்யூனிஸ நாடுகளைப் பொறுத்தவரை இலங்கை சீனாவுடனேயே நெருக்கமான உறவுகளை வளர்த்துக்கொண்டது. இவ்வுறவு சிறீமாவின் காலத்திலேயே உச்ச நிலையை அடைந்தது. 1962ஆம் ஆண்டு சீன - இந்திய யுத்தத் தின்போது இலங்கை நடுநிலைமை வகித்ததோடு, போரினை முடிவிற்குக் கொண்டுவரும் நோக்கில் ஒரு மாநாட்டினையும் நடாத்தியது. 1964ஆம் ஆண்டு சீனப்பிரதமர் சூ. என்லாய் இலங்கைக்கு வருகை தந்திருந்தார். சிறீமாவும் சீனாவிற்கு அடிக்கடி விஜயம் மேற்கொள்வதும் அவருக்கு சீனாவுடன் இருந்த நெருங்கிய உறவினையே எடுத்துக்காட்டியது.

கம்யூனிஸ நாடுகளுடன் உறவுகளை வலுவாக்கும் நோக்கில் சோவியத் யூனியன் ருமேனியா போன்ற நாடுகளுடனும் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தார்.

**மேற்கத்தேய நாடுகளுடனான உறவு**

சிறீமா அணிசேராக் கொள்கையை பின்பற்றியபோது கம்யூனிஸ நாடுகளைக் காட்டிலும், மேற்கத்தேய நாடுகளுடனான உறவு என்பது மந்தகதியிலேயே இடம்பெற்றது. இதற்கு கம்யூனிஸ நாடுகளுடனான உறவு என்பதும் ஒரு முக்கிய காரணமாகும். இதன் விளைவு அமெரிக்கா, பிரித்தானியா போன்ற மேலத்தேய நாடுகளுக்கு இலங்கை தொடர்பாக கசப்பான ஓர் உணர்வே மேலோங்கிக் காணப்பட்டது.

இந்நாடுகளுக்குச் சொந்தமான பல கம்பனிகளை சிறீமா தேசியமயமாக்கியமையும் இக்கசப்பான உறவிற்கு முக்கிய காரணமாகும். 1963ஆம் ஆண்டு இலங்கைக்கான பொருளாதார உதவிகளை வழங்குவதை அமெரிக்கா நிறுத்திக்கொண்டது. இதே ஆண்டு அமெரிக்காவின் 7ஆவது கடற்படைக் கப்பல் இலங்கைக் கடல் எல்லைக்குள் வருவதற்கு அனுமதி கேட்டபோது இலங்கை அதற்கு மறுப்புத் தெரிவித்தது.

பொதுநலவாய நாடுகளின் அமைப்பில் அங்கம் பெறுவதை சிறிலங்கா சுதந்திரக் கட்சி விரும்பாமையினால் இக்காலகட்டத்தில் அதனுடனான உறவும் பெரிதளவிற்கு விருத்தியடைந்ததாக இருக்கவில்லை. அதேவேளை அணிசேரா இயக்கத்துடனான உறவு மிகவும் விருத்தியடைந்ததாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அணிசேரா இயக்கத்தினை வலுவாக்குதல்**

திருமதி பண்டாரநாயக்கா அணிசேராக் கொள்கையை பின்பற்றுவதில் கூடுதலான அக்கறை காட்டினார். இலங்கை பின்பற்றிய அணிசேராக் கொள்கையின் இன்னோர் முக்கிய அம்சம் உலக அமைதிக்காக முன்னெடுத்த நடவடிக்கையாகும். சிறீமா பிரதமராக இருந்தபோது ஐக்கிய நாடுகள் சபையிலும், அணிசேர இயக்கத்திலும், இந்து சமுத்திரப் பிராந்தியத்தைச் சமாதான பிராந்தியமாக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார்.

சிறீமா பண்டாரநாயக்க அணிசேராமை என்ற வழியில் சென்றிருப்பினும்,

இலங்கையைப் பொறுத்தவரை சிறிலங்கா சுதந்திரக் கட்சி காலத்தில் கம்யூனிஸ நாடுகளுடன் ஒரு நெருக்கமான உறவும், மேலைத்தேய நாடுகளுடன் கசப்பான உறவும், அதேவேளையில் ஐக்கிய தேசியக் கட்சி காலத்தில் கம்யூனிஸ நாடுகளுடன் எதிர்ப்பு நிலையும், மேற்கத்தேய நாடுகளுடன் நெருக்கமாக உறவுகளை பேணி வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது.

அத்துடன் யுத்த நெருக்கடி காலங்களில் யுத்தத்திற்கு உதவுகின்றவகையில் உதவிசெய்ய முன்வரும் நாடுகளுடன் இலங்கை உறவுகளை மேற்கொள்வதையும் வரலாற்றில் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. பாகிஸ்தான், சீனாவுடனான உறவுகளை இதற்கு உதாரணமாக குறிப்பிடலாம். இந்தியா அயல்நாடாகக் காணப்படுவதாலும், ஆசியாவில் இந்தியா ஓர் வல்லரசு நிலையினை அடைந்திருப்பதாலும் இந்தியாவை மீறி செல்லமுடியாத நிலையும் காணப்படுகின்றது.

சிறீமா காலத்தில் சீனாவுடனேயே இலங்கை நெருங்கிய உறவினை பேணியிருந்தது. வெளிநாட்டு கொள்கையினைப் பொறுத்தவரை எந்தவொரு நாட்டினையும் பகைமையுணர்வுடன் நோக்காது, சம தூரத்தில் வைத்திருத்தல் என்ற கொள்கை விரும்பத்தக்க ஒன்றாகும். இவரது காலப்பகுதியில் ஓரளவு இதனை அவதானிக்க முடிந்தது.

1945க்கு பின்னர் வலுவடைந்த வல்லரசுகளுக்கிடையிலான குளிர்யுத்தம் 1980ற்கு பின்னர் தமது வலுவினை இழந்து 1991 பழைய சோவியத் உடைவுடன் முற்றாக ஒழிந்தது. எனினும் இரு அணிகளுக்கும் இடையிலான பனிப்போர் என்பது நாடுகள் தம்மிடையே உறவுகளைப் பேணுவதற்கு முக்கிய காரணியாக (சிறீமாவின் காலப்பகுதியிலும்) காணப் பட்டது.

1965-1970 காலப்பகுதியில் ஆட்சிக்கு வந்த டட்லி சேனநாயக்கா தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி வெளி நாட்டுக் கொள்கை தொடர்பாக சிறுசிறு மாற்றங்களையே ஏற்படுத்திய போதும், பண்டாரநாயக்கா உருவாக்கிய வெளிநாட்டுக் கொள்கையின் போக்கை பெரிதாக மாற்றவில்லை.

வெளிநாட்டுக் கொள்கையைப் பொறுத்தவரை முன்பிருந்த ஆட்சியாளர்களின் கொள்கையை முழுமையாக நிராகரிக்க முடியாது. இன்றைய காலகட்டதுடன் ஒப்பிடும் போதுசிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான மகிந்த ராஜபக்ஷ அவர்களும் சிறீமா, S.W.R.D பண்டார நாயக்கா, சந்திரிக்கா போன்றோரின் ஒத்த கொள்கையை பின்பற்றுகின்ற நிலை காணப் படுகின்றது. பண்டாரநாயக்காவின் முக்கிய பண்புகளை இவரும் பின் பற்றுகின்றார் எனவும் பலரால் விமர்சிக்கப்படுகின்றது. ஆயினும் தற்போது காணப்படுகின்ற சர்வதேச சூழல் வேறுபட்ட ஒன்றாகவே உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் பொதுத்துறை நிர்வாகம்

- பா. யூட் -

**கொழும்பு பல்கலைக்கழகம், அரசியல்துறை, 3ஆம் வருடம்**

பொதுத்துறை நிர்வாகம் என்பது பொதுக் கொள்கை உருவாக்கம், அமுலாக்கம் போன்றவற்றுக்குப் பொறுப்பான துறையாக இனம்காணப்படுகின்றது. குறிப்பாக ஒரு நாட்டில் வாழுகின்ற மக்களின் அன்றாட தேவைகளை நிறைவேற்றுவதற்கு உரித்துடையதாகக் காணப்படுகின்றது. சிவில் சமூகத்திற்கு சேவை செய்யும் சுயநலமற்ற அலகாக நோக்கப்படுகின்றது. மக்களை அரசின் பணியுடன் ஒன்றிணைக்கும் ஊடகமாக இந்த பொதுத்துறை நிாவாகம் காணப்படுகின்றது.

இப்பொதுத்துறை நிர்வாகமானது ஆரம்பகாலங்களில் ஏற்பட்ட ஆட்சிகளை மையமாகக் கொண்டு அல்லது ஆட்சியினை செலுத்துவதினை இலகுபடுத்துவதற்காக உருவாக்கப்பட்டது. பொது நிர்வாகம் தொடர்பான விடயங்களை சாணக்கியரால் எழுதப்பட்ட 'அர்த்த சாஸ்திரம்' என்ற நூலின் மூலம் காணக்கூடியதாகவுள்ளது. இதில் அவர் ஓர் அரசர். அவனுக்குக் கீழ் உள்ள மந்திரிகள், மக்கள், தூதுவர்கள், ஒற்றர்கள் போன்றோர் எத்தகைய பணிகளை ஆற்ற வேண்டும் என்று மிகத் தெளிவாக வரையறுத்துள்ளார். மேலும் இந்த நிர்வாகம் தொடர்பாக பல அறிஞர்கள் தமது கருத்துக்களை முன்வைத்துள்ளனர். அந்த வகையில் பொதுத்துறை நிாவாகத்தின் தந்தை என அழைக்கப்படும் முன்னாள் ஐக்கிய அமெரிக்காவின் ஜனாதிபதி வூட்ரோ வில்சன் கூறுகையில், 'பொதுக் கொள்கையின் விரிவானதும், ஒழுங்கானதும் அமுலாக்கமே பொதுத்துறை நிர்வாகம்' என்கின்றார். எல்.ஜி. வைற் கூறுகையில், 'பொதுக் கொள்கையை அடைந்து கொள்வதற்கான வலுவூட்டும் நடவடிக்கையாகும்' என்கின்றார்.

அதாவது ஒரு நாட்டில் உருவாக்கப்படுகின்ற பொதுக் கொள்கையினை நிறைவேற்றகின்ற அல்லது அதற்கு செயல் வடிவம் கொடுக்கின்ற ஒரு பாரிய இயந்திரமாக பொதுத்துறை நிர்வாகம் காணப்படுகின்றது. இதன் ஊடாகவே அரசு தனது பிரஜைகளுக்கு ஆற்ற வேண்டிய சிவில் சேவைகளை நிறைவேற்றுகின்றது. மேலும், இதன் அடிப்படை நோக்கம் என்று பார்க்கின்றபோது மக்கள் நலன் முதன்மை பெறுகின்றது. காரணம் அரசானது மக்களை (பிரஜை) மையப்படுத்திய ஸ்தாபனமாக இருப்பதினால் மக்கள் தொடர்ச்சியாக அரசுடன் இணைந்திருக்க வேண்டும். இதற்கு அரசு மக்களின் நலனை நிறைவேற்றிக்கொடுக்க வேண்டும்.

பொதுத்துறை நிர்வாகமானது நான்கு பெரும் தலைமுறையினர் ஊடாக வளர்ச்சியடைந்துள்ளது.

முதலாம் தலைமுறையினர் : பிளேட்டோ, அரிஸ்டோட்டில், மாக்கியவல்லி ஆகியோர் அடங்குவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் தலைமுறையினர் : லோரன்ஸ் வொன் ஸ்ரெயின், வூட்ரோ வில்சன் போன்றவர்கள்.

மூன்றாம் தலைமுறையினர்: லூதர் கலிக், லியண்டால் உர்விக் போன்றோரைக் குறிப்பிடலாம்.

நான்காம் தலைமுறையினர்: 1943 பின்னர் எழுச்சியடைந்த நவீன அரசியல் சிந்தனையாளர்கள்.

இவ்வாறு வளர்ச்சியடைந்த பொதுத்துறை நிர்வாகமானது இன்றைய நவீன அரசுகளின் மிகவும் பிரதான செயற்பாட்டாளராக காணப்படுகின்றது. இது எவ்வாறு இலங்கையின் உள்ளது என்று இனி நோக்குவோம்.

பிரித்தானியருடைய ஆட்சிக்காலத்தில் இலங்கையில் பொதுத்துறை நிர்வாகம் என்ற அலகு அறிமுகப்படுத்தப்பட்டது. அதற்கான ஆதாரங்களை டொனமூர் யாப்பு (1931), சோல்பரி யாப்பு (1947) போன்றவற்றில் உள்ள 'பொதுச் சேவை ஆணைக்குழு' என்ற அமைப்பினூடாக காணமுடிகின்றது.

சுதந்திரத்திற்குப் பின்னரான இலங்கை அரசியல் புதிய பரிணாமத்துடன் வளாச்சி பெறுவதற்கும், உள்நாட்டு ஆட்சியளருக்கு போதுமான பயிற்சியினை வழங்கவும் இது ஏதுவாக அமைந்திருந்தது. மாறி மாறி ஆட்சிக்கு வருகின்ற கட்சிகள் தமது அரசியல் கொள்கைகளை அமுல்படுத்த அல்லது மக்களிடம் கொண்டு செல்ல இந்த பொதுத்துறை நிர்வாக்த்தினை பயன்படுத்தி வருகின்றனர். குறிப்பாக பொதுத்துறை நிர்வாகமானது மக்க ளுடைய அன்றாட கருமங்களை ஒழுங்குசெய்து, நிறைவேற்றுகின்றது. அந்தவகையில் பிறப்பு முதல் இறப்பு வரையான ஒரு பிரஜை இந்த பொதுத்துறையினுள் இருக்க வேண்டியவனாக காணப்படுகின்றான். உதாரணத்துக்கு பிறப்பு சான்றிதழ், இறப்பு சான்றிதழ் திருமண சான்றிதழ், காணி உறுதி போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இவ்வாறு காணப்படும் இந்த பொதுத்துறையின் சேவையானது மக்களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றது. ஆனாலும் இது மறைமுகமாக மக்களின் வரிப்பணத்தினைக் கொண்டு இயக்கப்படுவதும் யாவரும் அறிந்ததே. அந்தவகையில் இங்கு பணியாற்றுகின்ற அரச ஊழியர்கள் தொடர்பாக மக்கள் மத்தியில் ஆரோக்கியமான கருத்து இல்லை. காரணம் அவர்கள் மக்களின் தேவைகளை அசட்டை செய்வதும் கவனயீனமாக இருப்பதும் என்ற காரணங்கள் கூறப்பட்டாலும், மேலும் ஆழமாக பார்த்தால் இத்துறையில் ஊழல், இலஞ்சம், பக்கசார்பு போன்ற விடயங்கள் காணப்படுவதுடன் ஒரு காரியத்தை உரிய நேரத்தில், உரிய முறையில் நிறைவேற்றிக் கொள்ள முடியாத வகையில் 'சிவப்பு நாடா முறைமை' (Red Type system) காணப்படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இக்காரணங்களால் மக்கள் இன்று பொதுத்துறை நிர்வாகத்தை வெறுப்புடன் பார்க்கின்றனர். மேலும் இங்கு பணிபுரியும் ஊழியர்களும் தம்மை உயர்வாக எண்ணிக்கொண்டு சேவை நாடுனரை அவமதிக்கின்ற நிலையும் இலங்கையில் காணப்படுகின்றது. குறிப்பாக வளர்முக நாடு களில் இந்த பொதுத்துறை நிர்வாகமானது வீழ்ச்சியடைந்து கொண்டு செல்கின்றது. இதனை தெளிவாக இலங்கையில் காணலாம். ஒரு நாட்டின் பொதுக் கொள்கையானது வெற்றிபெற வேண்டுமாயின் அந்நாட்டின் நிர்வாகத்துறை சிறப்பான வெற்றியைப் பெற வேண்டும என அரசியலாய்வாளர்கள் கூறுவார்கள். உண்மையில் இது மிகவும் சரியான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூற்று. வளர்முக நாடுகளின் அபிவிருத்திக்கும் சிறப்பான ஜனநாயக பண்புகளுக்கும் அங்குள்ள ஆரோக்கியமான பொதுத்துறை நிர்வாகத்தின் சேவைகள் தான் காரணம்.

இலங்கையைப் பொறுத்தவரையில் நிர்வாக சேவையினர் கட்சி சார்பினை உடையவர்களாகவும், ஆட்சியாளர்களின் நலன் விரும்பிகளாகவும் இருக்கின்றமைதான் இங்கு உள்ள பாரிய குறைபாடாக சுட்டிக்காட்டப்படுகின்றது. அவர்கள் தமக்கு வேண்டியவர்களுக்கு தேவையான அரச கருமங்களை நிறைவேற்றிக் கொடுப்பதுடன், சட்ட திட்டங்களை ஒரு பொருட்டாக மதிப்பதில்லை. இதனால் நேர தாமதம், பணவிரயம், முரண்பாடுகள் போன்றவை ஏற்படுகின்றதை நாம் இன்று எமது கச்சேரிகள், அரச திணைக்களங்களில் காணக்கூடியதாகவுள்ளது. இத்தகைய செயற்பாடுகள் அரச நிர்வாக செயன்முறையில் பாரிய பின்னடைவினைக் கொண்டுவருவதுடன் இதனுடைய தாக்கம் நேரடியாகவே தேசிய அபிவிருத்தி, தேசிய ஒருமைப்பாட்டிலும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியது. குறிப்பாக தமிழர்கள் பெரும்பாலான அரச கடமைகளை நிறைவேற்றவும், சேவையினைப் பெறுவதற்கும் தலைநகரை நோக்கி வரவேண்டியதாகவுள்ளது. இவ்வாறு வருபவர்கள் அனைவருக்கும் சிங்களமொழி, தெரியாத ஒன்றாக இருக்கின்றது. இதனால் அவர்கள் தள்ளாடுவதுடன் அவர்களின் தேவைகள் உரிய நேரத்தில் நிறைவேற்றப்படுவதில்லை. இதனால் அவர்கள் அதிக பணச்செலவினை எதிர்நோக்க வேண்டி ஏற்படுவதுடன் தேவையற்ற அலைச்சலையும் எதிர்நோக்குகின்றனர். இதனால் அவர்கள் மத்தியில் நல்ல ஒரு அபிப்பிராயம் பொதுத்துறை தொடர்பாக இல்லை என்று தான் கூறவேண்டும்.

பிரஜைகள் தமது நிர்வாக கடமைகளை தாய்மொழியில் நிறைவேற்றமுடியும் என்று அரசியலமைப்பில் குறிப்பிட்டு இருந்தாலும், நடைமுறையில் அது காணப்படுவதில்லை. ஆகவே இத்தகைய குறைபாடுகள் பொதுத்துறையிலிருந்து களையப்பட வேண்டும். பொதுத்துறையினர் பொறுப்புணர்ச்சியுடன், மக்களுக்கு உண்மையாக செயற்பட முன்வரவேண்டும். மேலும் பாரபட்சம் காட்டாது சகலரும் பிரஜைகள் என்ற நோக்கில் சேவையாற்ற வேண்டியது இவர்களின்கடமையாகும். மேலும் இந்த அதிகாரிகள் தொடர்பாக ஆட்சியாளர்கள் மேற்பார்வை செய்வதுடன் இவர்களை தமது விருப்பு, வெறுப்புகளுக்கு உட்படுத்தாது சுதந்திரமாக அவர்களது பணியினைப் புரிவதற்கு இடம்கொடுக்க வேண்டும். மேலும் பிரஜைகள் தமது சேவையினை இலகுவில் பெறும் பொருட்டு இலஞ்சம், ஊழல் கொடுப்பதனை தவிர்த்து அவர்களின் பணியினை செம்மையாக செய்ய இடமளிக்க வேண்டும். மேலும் அரசு இவர்களை காலத்திற்கு காலம் இடமாற்றம், பதவியுயர்வு, சலுகைகள், சம்பள உயர்வு போன்றவற்றை ஏற்படுத்தி திருப்திகரமான நிர்வாக சேவையினை மக்களுக்கு வழங்க முன்வர வேண்டும். இதன்மூலம் நாட்டின் தேசிய அபிவிருத்தியை இலகுவில் எட்டமுடிவதுடன் சிறந்த ஓர் ஆட்சியினையும் அடையமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் உள்ளூராட்சி அமைப்புக்கள்

- க. பிறேம்குமார் -

இலங்கையில் மக்களைப் பிரதிநிதிகளாகக் கொண்ட ஆட்சிக் கட்டமைப்புக்கள் மூன்று காணப்படுகின்றன. மத்திய அரசு (பாராளுமன்றம்), மாகாண சபை, உள்ளூராட்சி சபைகள் என்பனவே அம் மூன்றும் ஆகும். மத்திய அரசு முழு நாட்டையும் நிர்வகிக்கின்றது. இவ்வாறு முழு நாட்டையும் தனியே நிர்வகித்தல் கடினமாக இருந்தபடியினால் அதிகாரங்கள் சிலவற்றை உள்ளூராட்சி சபைகளிடம் ஒப்படைத்துள்ளன.

மக்களுக்கு மிகவும் அருகாமையில் நிர்வாகம் சென்றடைய வேண்டும் என்பதும், உள்ளூராட்சி சபைகளிடம் அதிகாரம் பகிரப்பட்டமைக்கு ஒரு காரணமாகும். மக்களுக்கு கிட்டவுள்ள பிரச்சினைகளை அந்தந்த பிரதேசங்களிலுள்ள நிர்வாக மட்டங்களிலேயே இலகுவாக தீர்த்துக்கொள்ள முடியும்.

மக்களுக்குத் தேவையான சட்டங்களை இயற்றும் அதிகாரம் உள்ளூராட்சி சபைகளிடம் உண்டு. மத்திய அரசாங்கமே உள்ளூராட்சி சபைகளுக்கு அதிகாரங்களை வழங்குகின்றது. இவ் அதிகாரங்களைக் கூட்டிக்கொள்ளவும், குறைத்துக்கொள்ளவும், நீக்கிக் கொள்ளவும் மத்திய அரசாங்கத்திற்கே அதிகாரமுண்டு.

உள்ளூராட்சி அமைப்புகளுக்குப் பொறுப்பான உள்ளூராட்சி அமைச்சர் மத்திய அரசாங்கத்தின் சார்பில் உள்ளூராட்சி சபைகள் சம்பந்தமான அலுவல்களைக் கண்காணிக்கிறார். மாகாண சபைகள் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் மாகாண சபை களுக்கூடாகவே உள்ளூராட்சி அமைச்சர் தனது பணிகளை மேற்கொள்கிறார். மாகாண சபைகள், உள்ளூராட்சி நிறுவனங்களின் நிர்வாகம், கண்காணிப்பு, முகாமைத்துவம் போன்றவற்றைப் பொறுப்பேற்று நடைமுறையில் அதனை மேற்கொள்கின்றது.

தற்போது மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள் என்கின்ற உள்ளூராட்சி அமைப்புக்கள் நடைமுறையில் செயற்படுகின்றன.

**உள்ளூராட்சி சபைகளின் வரலாறு**

இலங்கையில் மன்னராட்சி காலத்திலேயே உள்ளூராட்சி சபைகள் இருந்தன என்பது புதைபொருள் ஆராய்ச்சிகள் மூலம் தெரிய வந்துள்ளது. 1840ஆம் ஆண்டளவில் பழைய உள்ளூராட்சி அமைப்புக்களான 'கன்சபா' அல்லது 'இராஜ சபை', 'ரட்ட சபா' அல்லது பிரதேச சபை என்பன நடைமுறையில் இருந்துள்ளன.

தற்போது நடைமுறையில் இருக்கின்ற உள்ளூராட்சி நிறுவனங்களும், அதற்கான சட்டங்களும் ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்திலேயே அறிமுகப்படுத்தப்பட்டன.

1865ஆம் ஆண்டு மாநகர சபைச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இச்சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட மாநகரசபைகள் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர் களையும், நியமன உறுப்பினர்களையும் கொண்டிருந்தன. முதலில் கொழும்பிலும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டியிலும் உருவாக்கப்பட்ட மாநகரசபைகள் பின்னர் காலியிலும் அதனைத் தொடர்ந்து, ஏனைய மாவட்டங்களிலும் உருவாக்கப்பட்டன. 1898இல் கொண்டுவரப்பட்ட சட்டம் ஏனைய உள்ளூராட்சி சபைகள் உருவாகுவதற்கு வழிகளை ஏற்படுத்தியது.

எனினும் 1920ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சட்டமே ஜனநாயக முறையில் அமைந்த உள்ளூராட்சி அமைப்புகள் தோற்றம் பெறுவதற்கு வழிவகுத்திருந்தன. இலங்கை சுதந்திரம் அடைந்தபோது மாநகரசபைகள், நகர சபைகள், பட்டின சபைகள், கிராம சபைகள் என நான்கு வகையான உள்ளூராட்சி அமைப்புக்கள் நடைமுறையிலிருந்தன.

1981ஆம் ஆண்டு மாவட்ட அபிவிருத்தி சபைகள் உருவாக்கப்பட்டன. பின்னர் பட்டின சபைகள், கிராம சபைகள் என்பன நீக்கப்பட்டு அவை அனைத்தும் மாவட்ட அபிவிருத்தி சபைகளின் பொறுப்பில் விடப்பட்டன. பின்னர் 1987ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 13ஆம் இலக்கச் சட்டப்படி மாவட்ட அபிவிருத்திச் சபைகள் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பிரதேச சபைகள் உருவாக்கப்பட்டன. தற்போது மாநகரச பைகள், நகர சபைகள், பிரதேச சபைகள் என்பன நடைமுறையில் இயங்குகின்றன. இதன் உறுப்பினர்கள் அனைவரும் நான்கு வருட பதவிக் காலத்திற்கென விகிதாசார பிரதிநிதித்துவத்தின் கீழ் நடைபெறும் தேர்தல் ஒன்றின் மூலம் தெரிவு செய்யப்படுகின்றனர். உள்ளூராட்சி சபைத் தேர்தலில் விருப்பு வாக்குகள் மூன்றையும் ஒரு வேட்பாளருக்கு மட்டும் அளிக்கலாம் அல்லது வெவ்வேறு வேட்பாளருக்கும் அளிக்கலாம்.

**உள்ளூராட்சி சபைகளின் முக்கியத்துவம்**

1. பிரதேசங்களில் தோன்றும் பிரச்சினைகளை இனங்கண்டு தீர்வுகளைப் பெற்றுக்கொள்ளுதல்.
2. நிர்வாகப் பகிர்வு மூலம் மக்களுக்கு மிகவும் அருகாமையில் நிர்வாகத்தினைத் கொண்டுவருதல்.
3. பிரதேசத்தின் தேவைகளை மிகத் திறமையாக நிறைவேற்றிக்கொள்ள மத்திய அரசிற்கு உதவுதல்.
4. பிரதேச வளங்களை மனித முகாமைத்துவம் செய்வதன் மூலம் அதன் பயன்பாடுகளை மக்கள் பெறச் செய்தல்.
5. பிரதேசங்களுக்குப் பொருத்தமான திட்டங்களை இனம்கண்டு நிறைவேற்றுவதற்கு மத்திய அரசிற்கு உதவுதல்.
6. பிரதேச தலைவர்களை அறிமுகஞ் செய்து அவர்களை நாட்டின் தலைமைத்துவத்திற்கு அழைத்துச் செல்லல்.
7. பிரதேசத்தின் தேவைகளுக்கேற்ப மத்திய அரசாங்கம் கொள்கைகளைத் தயாரிக்க உதவுதல்.
8. நிர்வாக நடவடிக்கைகளில் மக்கள் பங்குபற்றுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உள்ளூராட்சி சபையின் கட்டமைப்பு**

| *பிரதேச சபை* | *நகரசபை* | *மாநரகசபை* |
|---|---|---|
| தலைவர் | தலைவர் | மேயர்-நகர முதல்வர் |
| உபதலைவர் | உதவி நகர தலைவர் | உப நகரமுதல்வர் |
| அங்கத்தவர்கள் | அங்கத்தவர்கள் | அங்கத்தவர்கள் |
| செயற்குழு | செயற்குழு | செயற்குழு |
| செயலாளர் | செயலாளர் | செயலாளர் |

***உள்ளூராட்சி சபைகள் நிதி வருவாய்களைப் பெறல்***

1. உள்ளூராட்சி அமைச்சினால் ஒதுக்கீடு

   அ. சாதாரண ஒதுக்கீடு

   ஆ. விஷேட ஒதுக்கீடு

2. வரிகள், வாடகைகள் அறவிடல்.
3. அனுமதிப் பத்திரங்களை வழங்குதல், முத்திரைகளை வழங்குதல்.
4. அசையா ஆதனங்களை (கட்டடங்கள்) வாடகைக்கு விடுதல், விற்றல்.
5. பாராளுமன்றத்தின் ஆலோசனைப்படி வழங்கும் நிதிகள்
6. அரசு சாரா அமைப்புக்கள் வழங்கும் நிதிகள்
7. வெளிநாடுகள் வழங்கும் நன்கொடைகள்

**உள்ளூராட்சி அமைப்புக்களின் அதிகாரங்கள்**

***1. அசையும் அசையாச் சொத்துக்கள் தொடர்பான அதிகாரங்கள்.***

அ. அதிகாரப் பிரதேசத்திற்குள் அசையும், அசையாச் சொத்துக்களை நிர்வகிப்பதற்கான அதிகாரம்.

ஆ. வீதி விளக்குகள், வீதிகள் பொதுச் சந்தைகள், மயானங்கள் தொடர்பான அதிகாரங்கள்.

இ. வீடுகளை ஒப்படைத்தல், அதற்கான ஆட்களை நியமித்தல்.

***2. வீதிகளும் போக்குவரத்துகளும்***

அ. போக்குவரத்திற்கு இடையூறாகவுள்ளவற்றை அப்புறப்படுத்தல்.

ஆ. புதிய பாதைகளை அமைத்தல், அபிவிருத்தி செய்தல்.

இ. தேவையற்றவற்றை அப்புறப்படுத்தல்

***3. மக்கள் சுகாதார சேவைகள்***

அ. மக்களுக்குத் தேவையான நீர் வசதிகளை செய்து கொடுத்தல்.

ஆ. பொது மலசலகூடங்களை அமைக்கும் அதிகாரம்

இ. சுற்றாடலைப் பாதிக்கும் நிர்மாணங்களைத் தடைசெய்தல்.

ஈ. சுகாதாரத்திற்குத் தீங்கு விளைவிக்கும் கட்டடங்களை அகற்றுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உள்ளூராட்சி சபையின் பணிகள்**

1. பிரதேசத்தில் அடிப்படை வசதிகளை கட்டியெழுப்புதல், நீர் வசதிகளை ஏற்படுத்துதல்.
2. வெள்ளப் பெருக்கு, புயல், காற்று போன்ற இயற்கை அனர்த்தங்களின் போது நிவாரண வசதிகளைச் செய்து கொடுத்தல்.
3. போக்குவரத்து வசதிகளைச் செய்து கொடுத்தல்.
4. மக்களின் வீடில்லாப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல்
5. வடிகால் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், நீர்ப்பாசனக் கால்வாய் வசதிகளை ஏற்படுத்தல், நகரத்திற்கு விளக்குகளை அமைத்தல்.
6. பொது இடங்களையும் சட்டங்களையும் பேணுதல்.
7. பொதுமக்களின் பாதுகாப்பை வழங்குதல்.
8. தேவையற்ற கட்டிடங்கள் அமைத்தலைத் தடுத்தல்
9. பொதுச் சந்தைகள், குளிக்கும் இடங்கள் என்பவற்றை அமைத்தல்.
10. மரணச் சடங்குகளுக்கான சேவைகளை வழிகாட்டல்.
11. பொதுப் பூங்காக்களை அமைத்தல்.
12. விளையாட்டு மைதானங்களை அமைத்தல்

**குறைபாடுகள்**

1.
    1. விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறையிலுள்ள குறைபாடுகள் இங்கும் காணப்படுகின்றன.
    2. தனிப்பட்ட சுயேட்சை வேட்பாளர்கள் போட்டியிட முடியாது.
       தேர்தல் முறை சாதாரண மக்களுக்கு விளங்கிக் கொள்ளக் கடினமாக இருக்கின்றது.
    3. விருப்பு வாக்குகளினால், ஒரு கட்சியில் போட்டியிடும் வேட்பாளர்கள் தங்களுக்கிடையே முரண்படக் கூடிய நிலையேற்படுகின்றது.
    4. பிரதிநிதிகளுக்கும் வாக்காளர்களுக்கும் இடையேயான தொடர்பு குறைவானதாகக் காணப்படுகின்றது.
2. உள்ளூராட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்கள் குறைவானதாக உள்ளது. இதனால் கூடியளவில் மக்களின் நலன்களை இவ்வமைப்புக்களில் பேணமுடியாது.
3. மூன்று உள்ளூராட்சி அமைப்புக்களுக்கிடையேயும், அந்தஸ்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. மாநகர சபைகள் கூடுதலானஅதிகாரங்களைக் கொண்டவையாகவும், பிரதேச சபைகள் குறைந்தளவு அதிகாரங்களைக் கொண்டவையாகவும் விளங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமகால சூழலில் இளம் தலைமுறையினரின் தீர்மானம் எடுத்தலும் அரசியலை விளங்கிக் கொள்வதும் எதிர்காலத்துக்கான நோக்கு

– கே.ரீ.கணேசலிங்கம் –

தலைவர், சமூகவியல் துறை, யாழ்.பல்கலைக்கழகம்

## அறிமுகம்

நெருக்கடிகள் என்பது தமிழ் சமூகத்திற்கு ஒன்றும் புதியதல்ல. அது மனித சமூகத்திற்கும் புதியதல்ல. காட்டில் வாழ்ந்த ஆதிகால மனித சமூகத்தின் போராட்டமே இன்றைய நவீனயுகமும் அவனது வெற்றிகளுமாகும். ஒவ்வொரு மனிதனுக்கும், ஒவ்வொரு சமூகத்திற்கும், நாட்டவருக்கும் ஒவ்வொரு போராட்டம் யதார்த்தமானது. அதனால் இவ்வகைச் சூழலைக்கண்டு அச்சமடைவதனைவிட அதனை எதிர்கொள்வதும் அதற்கூடாக தப்பிப்பிழைத்தலும் அவசியமான விடயமாகும். அதிலும் குறிப்பாக தமிழ் இளம் தலைமுறையினர் சொல்ல முடியாத நெருக்கடியையும் துயரத்தையும் அனுபவித்து வாழ்கின்றனர். இதிலிருந்து விடுபடுதல் எங்கள் இருப்பினை தக்கவைத்தல் அடுத்துவரும் சந்ததியை உருவாக்குதல் என்ற பாரிய பொறுப்புக்கள் குவிந்துள்ளது.

சூழல் வன்முறையை மட்டும் ஏற்படுத்தவில்லை. அதனையும் கடந்து வறுமை, வேலையின்மை, சமவாய்ப்பின்மை, ஆரோக்கியமான உடல், உள வளர்ச்சியின்மை, பொருளாதார பலமின்மை, அச்சம், பாதுகாப்பின்மை, உத்தரவாதமின்மை, ஏமாற்றுப் போலிகளுக்கு அடிமையாதல், பிறழ்வான நடத்தைகள், நம்பிக்கையற்ற வாழ்க்கை என நிறையவே இளம் சமூகத்தினருக்கு ஏற்பட்டுள்ளது. இதனை ஒரு குறிப்பிட்ட நேரத்திலோ காலத்திலோ தீர்மானிக்க முடியாது, அதற்காக தீர்வு இல்லை என்பதுமில்லை.

உலகில் வளர்ந்து நாம் பார்க்கவோ நெருங்கவோ அச்சமாக உள்ள அரசுகளின் சமூகங்களின் கடந்த காலம் மிக ஆபத்தானது தான், குறிப்பாக சில எடுத்துக்காட்டுக்களை கூறலாம்.

- பிரான்சும் - பிரிட்டனும் ஏறக்குறைய நூறுவருடங்களாக தமக்கிடையே போரிட்டுக் கொண்டிருந்தன.
- உலகத்தின் அமைதிப் பூங்காவெனக் கருதப்படும் ஸ்கண்டிநேவிய நாடுகள் பல தசாப் தங்களாக எல்லைத் தகராறுகளால் பெரும் போர்களை எதிர்கொண்டிருந்தன.
- பிரித்தானியா (ஐரோப்பியர்) ஆக்கிரமிக்கும் வரை இந்தியர்கள் பலநூறு இராட்சியங்களாகப் பிரிந்து நின்று போரிட்டுக்கொண்டிருந்தனர்.

கிரேக்க இளைஞர்களை ஆட்சியாளரின் பொய்யுக்கும், ஏமாற்றுக்கும், துணைபோகக் கூடாது என நல்லறிவு புகட்டினார் மாமேதை சோக்கிரட்டீஸ். சீனர்களை ஒரு மையப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தவும், ஐக்கியமாக்கவும் தனது பதவியையும், வாய்ப்புக்களையும் திறந்தார் டாக்டர் சென்-ஜான்-சென். ஜேர்மனியின் ஜக்கியத்துக்காக உழைத்த வரலாற்று ஆசிரியரும் இராஜ தந்திரியுமான பிஸ்மார்க் ஆட்சியைத் துறந்து வரலாற்றில் இடம்பிடித்தார்.

ஐரோப்பிய கண்டங்களைக் கண்டுபிடிக்கவும், சமுத்திரங்களைக் கடக்கவும் ஆயிரக் கணக்கானவர்கள் கொல்லப்பட்டனர். விமானத்தைக் கண்டறியும் தொழில்நுட்பத்தை தேடி கொல்லப்பட்ட ஐரோப்பியரின் பதிவுகளிலேயே ஐரோப்பா வீறுநடைபோடுகிறது. அண்டவெளிக்கும் பிற கோள்களுக்கும் மனிதன் பயணம் செய்யும் பலத்தைப் பெற்றதற்கு ஐரோப்பிய முன்னோடிகளின் இழப்புக்கள் தவிர்க்க முடியாத முதலீடுகளாகும். மகலன் உலகம் உருணடையா இல்லை என்பதை நிறுவ கடல் பயணத்தை மேற்கொண்டு இறுதிநிலையில் குளிரின் கொடுமையால் இறந்துபோன அவனுக்கு துணையாக பயணித்தவன் முடிவிடத்தை அடைந்து வரலாறாக்கியதை புரிதல் அவசியம்.

எனவே இவ்வகை நெருக்கடியும் துன்பமும், தவிர்க்கமுடியாததுதான், இந்த நெருக்கடி ஒவ்வொன்றையும் படிக்கற்களாக்குங்கள், வெற்றியும் மாற்றமும் எங்கள் கைகளில் சேரும். அதனை நோக்கிப் பயணிப்பதற்கான உரையாடலையும் ஆலோசனையும் பின்வருமாறு முன்வைக்கலாமென கருதுகிறேன்.

> இரண்டு பிரதான பகுதிகளையும் பல உபபகுதிகளையும் கொண்டிருக்கும் இவ்வலகு முதலில் அரசியலை புரிவதை நோக்குவதோடு இரண்டாவது பகுதியை விரிப்பது பொருத்தமென கருதுகிறது. காரணம் அரசியலைப் புரிதல் மிக அவசியமானது, அதில்தான் முடிவுகள் தீர்மானங்கள் அடங்கியுள்ளது. அரசியலுக்குள் சமூகத்தொகுதியில் அனைத்தும் அடக்கம் என்பது எமது சமூகத்திற்கு மிக உயர்வான நிலையாகும், உலகத்தில் ஒவ்வொரு மனித சமூகத்தின் மாற்றத்திற்கும் அரசியலே ஆணிவேராகும். அந்தவகையில் அரசியலைப் புரிதல் அவசியம்.

**அரசியலை விளங்கிக் கொள்ளுதல்**

அரசியலை விளங்கிக் கொள்ளுதல் என்பது தனித்துவமான முறையில் சாந்த கற்கையாகும். அரசியல் பற்றிய புரிதல் மிக நீண்டகால மாற்றங்களால் இன்றைய நிலையை எட்டியுள்ளது. அவ்வகை மாற்றங்களினால் ஏற்பட்ட புரட்சியானது அரசியலை விளங்கிக் கொள்வதற்கான முறையியலை அரசியல்விஞ்ஞானத்திடம் குவித்தது. அரசியல்விஞ்ஞானம் அரசியலை விளங்கிக் கொள்ள கிடைத்த முதல் சாதனமாகும். சமூகவிஞ்ஞானத்திடம் அவ்வகைப் புரிதலின் அளவீடு இரண்டாம் நிலையிலுள்ளதாகவே கொள்ளப்படுகிறது.

அரசியல்விஞ்ஞானம் 20ம் நூற்றாண்டின் உதயத்தோடு மேலேழுந்த முறையியலாகும். இதன் ஆரம்பம் கலைசார்ந்த நுட்பம் பொதிந்த ஒரு கற்கையாக அளவிடப்பட்டது. அது பொதுவாகவே அரசன், அவனதுசார்புநிலை நிறுவனங்கள் பற்றிய புரிதலாக நிகழ்ந்தது. அதன் போக்கும் தொழிற்பாடும் பிறசமூக அலகுகளால் நெருக்கடிக்குள்ளான போது 'அரசு' என்ற அமைப்பின் எல்லை விரிவடையத் தொடங்கியது. அரசு என்பது புவியியல் சார்ந்து, பொருள்சார்ந்து, தத்துவம்சார்ந்து, சமூகம் சார்ந்து தெறிப்படைய ஆரம்பித்ததும் அரசியலை விஞ்ஞானமாக்கியதுடன் அரசியலை ஆராய அரசியல்விஞ்ஞானம் பொருத்தப்பாடான துறையெனக் கருதினர். அதுவும் 20ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் அரசியல் விஞ்ஞானம் தனித்துதுறையாக இயங்குவதைவிடுத்து சமூகவியல், பொருளியல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்யியல், புவியியல் என்பவற்றுடனான பல்துறைப் புலமை அரசியலைப் புரிவதற்கான முறையியல் என 1960களுக்கும் பின்பு ஐரோப்பியர் முதன்மைப்படுத்தினர்.

கைத்தொழில் சமூகத்தின் வரவு பல்முனைச் சமூகத்தின் தோற்றம் படிப்படியாக ஜன நாயகம், தாராண்மைவாதம், பன்மைவாதம் என்பனவற்றின் வரவை தீவிரப்படுத்தியது. ஐரோப்பியர்கள் நெறிமுறையான ஆட்சிப்பரப்புக்குள் வேகமாக நுழைந்தார்கள். ஆனால் எப்போதும் ஐரோப்பியர் மேலைத்தேசம், கீழைத்தேசம் என்ற பிரிப்பினை கணக்கில் கொள்ள தவறவில்லை. இதனால் வெள்ளையர் கறுப்பர் என்ற பெறுமானம் மிக்க ஒழுங்கை நெறிப்படுத்த அரசியலை ஊக்கியாகக் கடைப்பிடிக்க ஆரம்பித்தனர். இதனால் அரசியல் விஞ்ஞானத்தின் வழி அரசியலை நோக்கும் பரப்புகை மேலும் அதிகரிக்க தொடங்கியது. இது ஒருவகை மூன்றாம் படிநிலை எனக்குறிப்பிடலாம். இது இருபதாம் நூற்றாண்டில் நிகழ்ந்த பிரதான மாறுதலாகும். இராணுவம், குடியேற்றம், உலகமயமாதல், நவீனமயமாதல், பின் நவீனமயமாதல் என்ற ஒரு பெரும்பகுதி அரசியலை ஆக்கிரமிக்கத் தொடங்கியது. இதற்குள்ளேயே சித்தாந்தம் ஒருகால உலகை தயார்ப்படுத்தியது. முதலாளித்துவம், சோஸலிஸம் என்ற வகைப்பிரிப்புக்குள் ஒரு அரைநூற்றாண்டு உலகத்தை மேலும் துரு வங்களாக்கியது.

இன்றைய உலகம் பழமைவாதத்தை, நவீனத்துவத்தை, பின்நவீனத்துவத்தை, சித் தாந்தத்தை, உலகமயவாதத்தை கொண்ட ஒரு சாம்பர் உலகம் எம்முன்னே உறவாடுகிறது. இதற்குள் ஏகப்பட்ட கருத்தியலத் தளங்கள், ஆதிக்கங்கள் போட்டிகள் இவற்றை உணர்தல் என்பது அரசியல் விஞ்ஞானத்தினாலே முடியும். அதன்படி

**1. புவிசார் அரசியல்**

அரசியலின் நிரந்தர பிறப்புரிமையின் மையம் புவியியலாகும். புவியியல் நிலத்தையும், சமுத்திரங்களையும், அண்டவெளியையும், காலநிலையையும் அதன் வகுதிகளாக கொண் டுள்ளது. இவை ஒவ்வொன்றும் தனித்தனி வல்லமையை கொண்டிருந்தாலும், ஒன்று சேர்ந்த வல்லமையும் இதன்பரப்பெல்லைக்குள் அடங்கியிருக்கும். தீவுகள், குடாக்கள், பெருநிலப்பரப்புக்கள் என்பன தனித்தனியான வேறுபட்ட அரசியல் சமூக, பொருளாதார இயல்புகளை வெளிப்படுத்தும் உதாரணங்களை நோக்குவோம்.

**2. அரசியல் பொருளாதாரம்**

ஒரு நாட்டின் பொருளாதாரப் பலமே அந்த நாட்டின் அரசியல் உறுதிப்பாட்டை தீர்மானிக்கக் கூடியது. நிரந்தரமான பொருளாதார வளர்ச்சி வல்லரசுக்கான அடிப்படையாகும். முதலீடுகள் குவிவதனால் ஒரு நாட்டின் ஆதிக்கம் விரிவடையும். வர்த்தகம், வரியற்ற வர்த்தகம், சந்தை ஆதிக்கப்போட்டியையும் வெளிப்படுத்தக் கூடியது. நிதிநிறுவனங்கள் பொருளாதார அமைப்புக்கள் உலக அரசியல் பொருளாதாரத்தின் விம்பங்களாகும்.

**3. சர்வதேச அரசியல்**

உலகம் கிராமமாகிவிட்டது. இதனால் ஒவ்வொரு நாட்டின் இருப்பையும் உலகில் அயல் நாடுகள் பலம் பொருந்திய சக்திகள், வல்லரசுகள் தீர்மானிக்கும் தன்மை பொருந்தியவையாக உள்ளன. சர்வதேச மட்டத்தில் நாடுகள் மட்டுமன்றி சர்வதேச நிறுவனங்கள் சர்வதேச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டவிதிமுறைகள், என்பனவற்றின் பங்களிப்பின்றிய அரசியல் மாறுதல்கள் சாத்தியப் பாடற்றவையாகும். அதுமட்டுமல்லது ஒருநாட்டில் ஏற்படக் கூடிய மாற்றத்தை பன்னாட்டு அரசியல் தீர்மானிக்கும் வல்லமை பொருந்தியது.

**4. அரசியல் சமூகவியல்**

அரசியல் சமூகம் என்ற தொகுதிக்கானது அதனை பிரிக்கமுடியாதது. இரண்டுமே ஒன்றுடன் ஒன்று சேர்ந்திருப்பது. மதம், மொழி,பண்பாட்டுவிடயங்கள், இனக்கூறுகள், விழுமியங்கள் இவை சமூகத்தின் முதன்மைக்கானவை அவற்றை வடிவமைப்பது, இயங்குவது அரசும், அதன் நிறுவனங்களுமாகும். பாதிக் குழுக்கள் அரசியல் கட்சிகள், அமுக்கக் குழுக்கள், உயர் குழாமினர் என பெருமளவான பிரிவினர் சமூகத் தொகுதியான அரசியலை உருவாக்குகின்றனர் இதுவே அரசியல் சமூகவியலாக கொள்ளப்படுகிறது இவை ஒவ்வொன்றின் நலனைப் பொறுத்தே மாற்றங்கள் சாத்தியப்படும். நடத்தைவாதம் முதன்மைக் கோட்பாடாக விளங்குகிறது. நடத்தையின் பங்கே ஜனநாயக விதிகளை சுதந்திரம், சமத்துவம் சகோதரத்துவம் என்ற கோஷங்களை நிறுவியுள்ளது நடத்தைப் போரையும் ஜனநாயத்தையும் ஒருங்குசேர உருவாக்கக் கூடியது.

**5. சித்தாந்தங்கள் சார்ந்த கோட்பாடுகள்**

உலக இயக்கத்திற்கு சில விதிகள் முதன்மையாக அமைந்திருக்கும் அவ்வகை விதிகளுக்குள் மனித சமூகத்தின் இயங்குதிறன் நிர்ணயிக்கப்புடும் குறிப்பாக முதலாளித்துவம் சோஸலிஸம் நீண்ட இருப்புவாதத்தை வெளிப்படுத்தியது அதன் தொடர்ச்சிகளாகவே இன்றைய உலகின் போக்கும் நியமமும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**6. அரசியல் கலாசாரம் (வரலாறு)**

நியமமான வரலாற்றின் பதிவுகள் மனித சமூகத்தின் அரசியல் நடத்தையினை வெளிப்படுத்தக் கூடியது. அவ்வகை வெளிப்படுத்துதல் தொடர்ச்சியான அரசியல் கலாசாரத்தை தரக்கூடியது. அது அரசியலை தெளிவுபடுத்தக் கூடியது அது சார்ந்த மாற்றங்கள் பெரியளவில் ஏற்படாது விட்டாலும் காலப்போக்கில் முதிர்வடையும்.

**7. இராஜதந்திரவியல்**

மானிடவியல், மெய்யியல், மொழியியல் என்பன தரக்கூடிய் இயங்கியல்விதிகள் தனித்துவமானவை இவை ஒவ்வொன்றும் ஏதோவொரு சந்தர்ப்பத்தில் தீர்மானத்தை எடுக்கும் சூழலை இயல்பாக உருவாக்கக் கூடியது சில எண்ணங்கள் மானிட சமூகத்தின் உண்மைக்கான விதியாக அமையும். அவ்வாறே மெய்யியலின் கோட்பாட்டுத் தன்மைகள் தந்திரங்கள் ஏமாற்றத்தனமாக இருந்தாலும் தர்க்க அடிப்படையில் உசிதமான விளைவைத் தரக்கூடியது எனவே அரசியலை புரிதல் என்பது மிக நீண்ட பரப்பெல்லையைக் கொண்டது. அதன் முறைமைக் கூடாக ஏற்படும் தாக்கமாகவும் தீர்வாகவும் காணப்படும். கோட்பாடுகளை மையப்படுத்தாது நடைமுறையிலிருந்து கோட்பாட்டை அணுகுவதே அரசியல் விஞ்ஞானத்தின் உயர்வான தெளிவாகும் அதனைக் கண்டறியத்தவறும் சந்தர்ப்பங்கள் முழுவதும் தீர்மானமான முடிவுகளையும் சரியான வழிமுறைகளையும் உருவாக்கிவிட முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளம் சமூகம் தனக்கென உருவாக்கியுள்ள அரசியலை புரிதல் மூலம் தெளிவான சமூகத்தை கட்டலாம். இன்று எம்மத்தியிலுள்ள போரும் அதன் விளைவுகளையும் இவ்வகை நோக்கில் அவதானித்தால் பின்வரும் தீர்மானங்களை ஆக்கலாம்.

**இளம்தலைமுறையினரின் தீர்மானம் எடுத்தல்**

அரசியல் விஞ்ஞானத்தின் கோட்பாடுகளில் ஒன்றான தீர்மானம் எடுத்தல் இதர விஞ்ஞானத்திற்கும் தனிமனிதர்கள் ஒவ்வொருவருக்கும் அவசியமானது. அதிலும் இளம் தலைமுறைக்கு மிக அவசியமானது. எமது நாட்டின் அரசியலில் காணப்படும் சூழலைக் கருத்தில் கொண்டு தீர்மானங்கள் மேற்கொள்ளுதல் வேண்டும் குறிப்பாக அவன் மேற்கொள்ளும் தீர்மானத்திற்கு ஏற்ப அவனை தயார் செய்தல் வேண்டும்.

**உளபலவீனங்களைத் தகர்த்தல்:**

- நெருக்கடிக்குள் வாழ்வது எப்படி என்ற உளவியலை கற்றுக் கொள்ளுதல் அவசியம். யூதர்கள் சிறந்த உதாரணமனிதர்கள்.
- இழப்பீடுகளை எதிர்கொண்டு வாழுதல் அதனால் புதிய உறவுகளை உருவாக்குதல் மீதமான சமூகத்தை திருப்திப்படுத்துதல்.
- பிறருடன் நெருக்கீடுகளை பகிர்தல் உறவுகள், நட்புகள் என்பனவற்றுடன் பகிர்வதன் மூலம் தீர்த்துக் கொள்ளுதல்.
- கற்றல் சமூகமாதல் எதனையும் செவிவழியாக கேட்டலுடன் நிறுத்தாது முடியாக அறிவை நம்புதல் அதற்கான தேடலை மேற்கொள்ளுதல்.
- புதியவற்றை கற்றல்
- பிறசமூகங்களுடனும், மனிதர்களுடன் ஒப்பீடு செய்ய முயலுதல்.
- கடமையை சரிவரச் செய்கிறேனா என்பதை அளவீடு செய்தல்.
- விட்டுக்கொடுத்தல், பிறரை மதித்தல், கருத்துக்களை ஏற்றல், நம்பிக்கையுடன் தொழிற்படல்
- முன்னேறுவதற்காக உழைத்தல் பிறரில் தங்கியிருப்பதை படிபடியாகக் குறைத்தல்.

**இட அமைவு சார்ந்த சூழல்**

வாழ்விடத்தை மாற்றுதல்- கிராமிய வாழ்வு நகரவாழ்வு

அயலவர், நண்பர், உறவினர், இயல்புகளை புரிதல் இசைவாக வாழுதல். அல்லது தவிர்த்தல்

பிறருக்கு உதவுதல்- ஆபத்தற்ற விதத்தில் நிலமையை கருத்தில் கொண்டு உதவுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிறழ்வு நடத்தைகளை கைவிடல்**

மதுபானம், புகைத்தல், மற்றும் சமூக ஒவ்வாமைகளை கைவிடுதல் - நல்ல பழக்கவழக்கங்களை கைக் கொள்ளுதல்

நீண்ட நேரம் தேவையற்ற விதத்தில் வீதியிலும், சந்தியிலும் நேரத்தை விரயம் செய்தலை தவிர்த்தல்

நேரமுகாமையை பின்பற்றுதல், அல்லது கடைப்பிடித்தல்.

யாராவது ஒருவரை அதிகம் தங்கியிருப்பதையோ, அல்லது அவர்மீது தலையீடு செய்வதையோ தவிர்த்தல்.

சுயமாக தீர்மானம் எடுக்க கற்றுக் கொள்ளுதல் அதனை சரிவர பின்பற்றுதல், நூறு தடவை சிந்தித்து பின் முடிவுகளை தெரிவு செய்தல்.

**இளம்தலைமுறையின் தீர்மானம் எடுக்கு செயல் முறை**

(18-28 வயதுக்கும் இடைப்பட்ட பிரிவினர்)

உயர்நிலை

I. கற்றலை மேற்கொள்ளல்
(18 - 22 வயது)
மேல்நிலை

பொருத்தமான வேலைவாய்ப்பு

II. வேலைவாய்ப்பை தேடுதல்
(22 - 28 வயது)

சுய தொழில் முயற்சிகள்

மரபுக்குட்பட்ட திருமணம்

III. திருமணம் புரிதல்
(28 வயதுக்கு மேல்)
நவீன திருமணம்

இன்றைய அரசியல் சூழலில் எந்த தனிமனிதனதும் வாழ்வும், உரிமையும் உத்தர வாதப்படுத்தப்படாது. அதனால்

1) கட்சிசார்பு நிலை தவிர்த்தல்
2) கொள்கை பற்றுக்களை தற்காலிகமாக கைவிடுதல்
3) தீவிர நடத்தைகளை வெளிக்காட்டுவதை தவிர்த்தல்
4) ஜனநாயக பூர்வான பங்குபற்றலையும் முடிபுகளையும் மேற்கொள்ளுதல்
5) சிந்தனைப் புரட்சி நோக்கி சமூகத்தை வழிநடத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அரசியல் யதார்த்தத்தை புரிதல்**

வெளிப்படையாக கருத்துக்களை கூற முடியாத சூழலில் யதார்த்தம் பேசப்படுவது முடியாத தென்று அவ்வகை எதிர்பார்க்கை மிக தவறான முடிபுகளுக்கு காரணமாகிவிடும். இருந்தாலும் புலமை மனிதர்களுக்கு உரித்தான கருத்தியலை வெளிக் கொண்டுவர வேண்டிய கடப்பாட்டுக்குள் வாழ்கின்றோம். அவை யாரையும் நோகடிப்பதற்கோ, ஆலோசனை வழங்குவதற்கோ, யாரையும் தூண்டுவதற்கோ இவை முன்வைக்கப்படவில்லை. யதார்த்தத்தை புரிந்து அதன் கீழ் வாழ்தல் மனித சமூகத்தின் உயிர்வாழ்வு அவனது யதார்த்தத்தை புரிதலில் தங்கியுள்ளது.

இலங்கையின் அரசியல் சூழல்
பிராந்திய அரசியல் தன்மை
பன்னாட்டு அரசியல் களநிலை
நிதி நெருக்கடியும் அரசியலும்
இலங்கையரின் எதிர்காலம்

ஆகிய உபதலைப்புக்களில் யதார்த்த அரசியலை புரிதல் அவசியமானது. அவ்வகைப்புரிதலை உரையாடல் சார்ந்து முதன்மைப்படுத்துவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்புப் பல்கலைக்கழக பொருளியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கோபாலபிள்ளை – அமிர்தலிங்கத்துடன் ஒரு நேர்காணல்

**நேர்கண்டவர்**
**அ. மேடோனா**

*கேள்வி: உங்களைப் பற்றி?*

நான் திருகோணமலை மாவட்டம் மூதூர் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சம்பூர் கிராமத்தில் 1969ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 22ஆம் திகதி பிறந்தேன். என்னுடைய தந்தையார் பெயர் கோபால பிள்ளை. தாயார் பெயர் நேசம்மா. என்னுடன் ஒரு சகோதரனும் மூன்று சகோதரிகளும் உடன் பிறந்தனர்.

நான் எனது பாடசாலைக் கல்வியை சம்பூர் மகாவித்தியாலயத்தில் மேற்கொண்டு, க.பொ.த உயர்தரப் பரீட்சையில் திருகோணமலை மாவட்டத்தில் முதலாவது மாணவனாக சித்தியடைந்து, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் உயர்கல்வியைத் தொடர்ந்தேன். அங்கு பொருளியல் சிறப்புப் பட்டத்தையும் பெற்றேன்.

பின்னர் 1998 தொடக்கம் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக இணைந்து, தற்போது அங்கேயே பணியாற்றி வருகின்றேன். கொழும்புப் பல்கலைக்கழகத்திலேயே முதுமாணிப் பட்டத்தையும் பெற்றேன். தொடர்ந்து முது தத்துவமாணிப் பட்டத்தையும் புதுடெல்லி ஜவர்கலால் நேரு பல்கலைக்கழகத்தில் பூர்த்தி செய்தேன். இப்பட்டப்படிப்பிற்கு *'தாரளமய்மாக்கம் இலங்கைப் பொருளாதாரத்தில் ஏற்படுத்திய தாக்கம்'* என்ற தலைப்பில் ஆய்வுக் கட்டுரையை சமர்ப்பித்திருந்தேன்.

கலாநிதிப் பட்டப்படிப்பை கொழும்பு பல்கலைக்கழகத்திலேயே மேற்கொண்டேன். அதற்காக *'இலங்கையின் நேரில் வரிகளின் முக்கியத்துவம், கடந்த கால மதிப்பீடும் எதிர்கால சீரதிருத்தங்களும்'* என்ற தலைப்பில் ஆய்வினை மேற்கொண்டு ஆய்வுக் கட்டுரையையும் சமர்ப்பித்திருக்கின்றேன்.

சர்வதேச ரீதியாக நடைபெற்ற பல்வேறு மாநாடுகளிலும் ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்திருக்கிறேன். இடப்பெயர்வினால் சம்பூர் மக்கள் எதிர்கொண்ட பொருளாதார ரீதியான தாக்கங்களை ஆய்வு செய்து அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளில் இடம்பெற்ற மாநாடுகளில் ஆய்வுக் கட்டுரையை சமர்த்திருக்கின்றேன். யுத்தத்தினால் பெண்கள் எதிர்கொண்ட தாக்கங்கள் பற்றி ஆய்வினைச் செய்து அவ் ஆய்வுக் கட்டுரையை ஆர்ஜென்ரீனாவில் இடம் பெற்ற மாநாட்டில் வஞ்சகக் கடத்தல் (பெண்கள் இளைஞர்கள் சம்பந்தமான ஆய்வு) பற்றியும் ஒரு ஆய்வுக் கட்டுரையை சமர்ப்பித்துள்ளேன்.

இவற்றினை விட தினக்குரல், வீரகேசரி, பொருளியல் நோக்கு, Sri Lanka Elonamic Journal என்பவற்றிலும் எனது ஆய்வுக் கட்டுரைரைகள் வெளிவந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலண்டனில் வெளிவந்த Disaters Journal of Refugee Studies சஞ்சிகைகளுக்கு கலாநிதி ரஜித் லக்ஷ்மனுடன் இணைந்து இரண்டு கட்டுரைகளை எழுதியிருக்கின்றேன். இவற்றிற்கு அப்பால் 'இலங்கைப் பொருளதாரம்' என்ற தலைப்பில் தமிழ் மாணவர்களுக்காக பொருளியல் நூல் ஒன்றையும் எழுதி வெளியிட்டுருக்கின்றேன்.

**கேள்வி:** *அண்மையில் முழு உலகத்தினையே அதிர்ச்சிக்குள்ளாகிய உலகப் பொருளாதார நெருக்கடி பற்றி நீங்கள் என்ன கருதுகின்றீர்கள்?*

பதில்: பொருளாதார நெருக்கடி என்பது உலக நாடுகளுக்குப் புதுமையானதல்ல. எப்பொழுது பொருளாதார நெருக்கடிகள் மேற்கு நாடுகளைத் தாக்குகின்றதோ அப்பொழுதுதான், உலகப் பொருளாதார நெருக்கடியாக மாற்றமடைகின்றது. ஏனெனில் கிழக்கு ஆசிய நாடுகளைத் தாக்கிய பொருளாதார நெருக்கடிகளும் இலத்தீன் அமெரிக்க நாடுகளில் ஏற்பட்ட நெருக்கடிகளும் உலகப் பொருளாதார நெருக்கடிகளுக்குள் வகைப்படுத்தப்படவில்லை.

ஆனால் 1930களில் இங்கிலாந்தில் ஆரம்பித்த நெருக்கடிகளும், அண்மையில் அமெரிக்காவில் ஆரம்பித்த நெருக்கடியும் உலகப் பொருளாதார நெருக்கடியாக வரைவிலக்கணப்படுத்தப்படுகிறது. இங்கு உணரப்பட வேண்டிய யதார்த்தம் யாதெனில் அமெரிக்கா தனித்து உலகில் 25 வீதம் அல்லது 15 றில்லியன் உற்பத்தியினை மேற்கொள்கிறது. அதேபோல் 25 வீதமான பெற்றோலியத்திற்கான கேள்வியும் அமெரிக்காவிலிருந்தே உருவாகின்றது. அடுத்ததாக அமெரிக்காவின் டொலர் உலகத்தின் ஒரு சொத்தாகப் பேணப்படுகின்றது.

ஆகவே இராட்சத பொருளாதாரமான அமெரிக்கா பாதிக்கப்படுவதனால் உலகமும் பாதிக்கப்படுவது இயற்கையானது.

**கேள்வி:** *இந்த உலகப்பொருளாதார நெருக்கடிக்கான காரணங்கள் யாவை?*

பதில்: நான் முன்பு குறிப்பிட்டது போல, உலகப் பொருளாதாரத்தில் அமெரிக்கா ஆதிக்கம் செலுத்துவதனால், அமெரிக்கப் பொருளாதாரத்தில் ஏற்படுகின்ற தாக்கம் உலகத்தினைப் பாதிக்கின்றது.

ஆகவே தற்போதைய நெருக்கடி எங்கே ஆரம்பிக்கின்றது என்றால்; (Housing Bubble) வீடமைப்பு குமிழி என்றுதான் கூறப்பட்டது. அதாவது குமிழி என்றால் விரைவாக வெடித்துவிடும் என்று பொருள். மேற்குலக நாடுகளில் மெய்ச் சொத்துக்களுக்கான (Real Estate) மிகவும் கேள்வி அதிகம். உதாரணமாக வீடு, காணி என்பவற்றைக் குறிப்பிடலாம். புதுப்புது தம்பதிகள் அதிகரித்துச் செல்லும்போது வேலைக்குச் சென்று வீடு வாங்குவர். வீட்டிற்கான கேள்வியும் ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்துச் செல்லும். அங்கு வீட்டினை தவணைக் கொடுப்பனவில்தான் வாங்கி அதனை மாதாந்தம் தங்களுடைய சம்பளத்திலிருந்து கழித்துக்கொண்டு வருவதுதான் அதன் ஒழுங்குமுறை.

இந்த ஒழுங்கு நீடிக்க வேண்டுமென்றால், வீடு வாங்கியவர்களின் சம்பளம் தொடர்ச்சியாக கிடைக்க வேண்டும். வீடு வழங்கும் இத்திட்டம் பெரும் இலாபம் ஈட்டும் தொழிலாக இருந்ததால் நிறுவனங்களின் தொகை அதிகரித்தது. பெருவாரியாக வீடுகள் வழங்கப்பட வேண்டும் என்ற நோக்குடன் வீடுகள் வழங்குவதற்குரிய கட்டுப்பாடுகளையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளர்த்தி கடனுக்கு வீடுகளைக் கொடுக்க ஆரம்பித்தன. அரசாங்க ஊழியர், தனியார் கம்பனி ஊழியர் என்ற பாகுபாடின்றி வீடுகள் கடனில் வழங்கப்பட்டன.

இவ்வாறு கடன் பெற்றவர்கள் தமது கடன்களை கொடுப்பதற்குப் பின்நிற்க ஒரு திகில் உருவாக ஆரம்பித்து விட்டது. இதனால் பங்குச் சந்தை உடனடிச் சரிவினை எதிர்நோக்கியது. பங்குச் சந்தைகள் நாடுகளுக்கிடையே ஒரு தொடர்பில் செயற்படுகின்றது. உதாரணமாக அமெரிக்கா பங்குச் சந்தை இலண்டனில் முதலீடு செய்திருக்கும், ஐரோப்பாவில் முதலீடு செய்திருக்கும். ஆகவே அமெரிக்கர் பங்குச் சந்தைதடுமாற ஐரோப்பா பங்குச் சந்தை தடுமாறியது. ஐரோப்பா பங்குச் சந்தை தடுமாற ஜப்பான் பங்குச் சந்தை தடுமாறியது. உலகப் பொருளாதாரத்தில் ஒவ்வொரு நாடுகளும் ஒரு தொடர்பினை கொண்டிருப்பதால் இந்நிலை ஏற்பட்டது.

உதாரணமாக அமெரிக்காவில் அமைந்திருக்கும் லீமன் பிரதர்ஸ் (Lehman brothers) என்ற நிதி ஸ்தாபனம் இரண்டு உலகப் போர்களுக்குமே தாக்குப் பிடித்திருந்தது. அண்மைய உலகப் பொருளாதார நெருக்கடியின் போது திவாலாகி விட்டது. இது இந் நெருக்கடி எவ்வளவு மோசமானதாக இருந்தது என்பதனைப் பிரதிபலிக்கின்றது.

***கேள்வி: உலகப் பொருளாதார நெருக்கடி நடைமுறையிலுள்ள உலக மயமாக்கல் பொருளாதாரத்தின் பலவீனம் எனக் கருதலாமா?***

பதில்: உண்மையில் உலகமயமாக்கல் பொருளாதாரத்திற்குப் பலமும் உண்டு. பலவீனமும் உண்டு. உலகம் மிகவும் வேகமாகி விட்டது. கல்வி, பொருளாதாரம், சமூகமயமாக்கம் என்பன தொடர்பாக உலக வழமைகளிலிருந்து பின்தள்ளி நிற்கமுடியாது. இன்றைய நிலையில் உலக மயமாக்கலை தள்ளிவிட்டு ஒதுங்கி நிற்க முடியாது. ஏனென்றால் உலகம் எல்லாவிதத்திலும் சுருங்கி விட்டது. அடுத்ததாக ஆங்கில மொழியும்கூட தவிர்க்க முடியாதவாறு பின்னிப்பிணைந்து விட்டது. ஆகவே, உலகமயமாக்கலிலிருந்து ஒதுங்கி விடுவது என்பது நடைபெறமுடியாத காரியமாகும்.

இதற்கு ஒரு வழி காணப்படுகிறது. பலவீனத்தைக் குறைத்து, பலத்தினை அதிகரிக்கலாம். இங்கு உலகமயமாக்கல் பொருளாதாரம் தான் உலகப் பொருளாதார நெருக்கடியைக் கொண்டு வந்ததா என்பது ஏற்றுக்கொள்ள முடியாது. அதிகப்படியான வீடமைப்புக் கடன்களை வழங்குவதற்கு உலகமயமாக்கல் மீது அனைத்து பழிகளையும் சுமத்திவிட முடியாது. உதாரணமாக சீனா, இந்தியா என்பன பல நெருக்கடிகளை சந்தித்த நாடுகள். இன்று உலகமயமாக்கல் அறிமுகப்படுத்தப்பட்ட பிற்குதான் சீனா, இந்தியாவில் வேலையின்மை பிரச்சினை தீர்க்கப்படுகிறது. சீனா உலகில் மிக முக்கியமான தவிர்க்கமுடியாத நாடாக உருவாகியுள்ளது. இதற்கு முக்கிய காரணம் இவை உலகப் பொருளாதாரத்தில் தம்மை இணைத்துக்கொண்டமையே.

இதனால் உலக மயமாக்கல் பொருளாதாரத்தை முனனெச்சரிக்கையுடன் நடைமுறைப்படுத்துவதே சிறந்ததே தவிர நெருக்கடிகளுக்கெல்லாம் அதன்மீது பழியை சுமத்தி உலக மயமாக்கலிலிருந்து பின்வாங்குவது உலகத்திற்கும் நல்லதல்ல. மக்களுக்கும் நல்லதல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***கேள்வி: தற்போதைய பொருளாதாரத்தில் பொதுவாக அரசின் தலையீடுகள் தவிர்க்கப்பட்டே வருகின்றது. அண்மையில் ஏற்பட்ட உலகப் பொருளாதார நெருக்கடி அரசின் தலையீட்டை மீண்டும் வலியுறுத்துகின்றதா?***

பதில்: இதுவொரு முக்கியமான, சுவாரஸியமான கேள்வி. மேற்குலக நாடுகள் அரசாங்கத்தின் தலையீடுகள் குறைக்கப்பட வேண்டும். தனியார் மயமாக்கம் செய்யப் படுதல் வேண்டும் என்று ஆரம்பத்திலிருந்தே வலியுறுத்திக் கொண்டிருந்தன. கிழக்காசிய நாடுகள் நெருக்கடியை எதிர்நோக்கியபோதும் இலத்தீன் அமெரிக்க நாடுகள் நெருக்கடி எதிர்நோக்கிய போதும் இந்த உபதேசமே வழங்கப்பட்டது.

ஆனால் மேற்கு நாடுகளை நெருக்கடிகள் தாக்கியபோது, அரசாங்கங்கள் மிகப் பலமாகவே பொருளாதாரத்தில் தலையிட்டன. திவாலாகிய நிறுவனங்களுக்கு உதவி செய்தன. நெருக்கடி காலத்தின்போது அரசாங்கத்தின் பங்களிப்பை அதிகரித்தன. இது இன்று அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளால் மேற்குலக நாடுகள் மீது பரவலாக முன்வைக்கப்படும் ஒரு குற்றச்சாட்டாகும். இதில் ஏற்றுக்கொள்ளக்கூடிய உண்மையும் இருக்கின்றது.

***கேள்வி: உலகப் பொருளாதார நெருக்கடியிலிருந்து வளர்ச்சியடைந்த நாடுகள் மீளும் சாத்தியங்கள் இருக்கிறதா?***

பதில்: வளர்ச்சியடைந்த நாடுகள் இந்த நெருக்கடியிலிருந்து மீளக் கூடிய சாத்தியங்கள் இருக்கின்றதா? என்பதற்கு ஒரேயடியாக ஆம் அல்லது இல்லை என்று கூற விரும்பவில்லை. இதற்கு ஆம் அல்லது இல்லை என்ற பதில் பொருந்தாது.

பெற்றோலிய விலைகள் தொடர்ச்சியாக அதிகரிக்குமுகமாக இருந்தால், இந்தப் பிரச்சினை நீண்ட காலத்திற்கு நீடிக்கக் கூடிய வாய்ப்பு இருக்கின்றது. ஆனால் தற்போதைய உலக ஒழுங்கில் பொருளாதாரத்தில் அதி தீவிரமாக வளர்ச்சியடையும் நாடுகளாக சீனா, இந்தியா, பிரேசில் போன்ற நாடுகள் அடையாளங் காணப்படுகின்றன. நெருக்கடிக்கு மத்தியிலும் இந்த நாடுகளின் பொருளாதார வளர்ச்சி மிக மோசமாகப் பாதிக்கப்படவில்லை. இந்த நாடுகளின் உள்நாட்டு உற்பத்தியின் மொத்தக் கேள்வி தற்போதும் ஓரளவிற்கு உறுதியாகவே இருக்கின்றது. ஆனால் இந்த நாடுகளில் பணவீக்கம் ஒரு கரிசனைக்குரிய விடயமாகவே தொடர்ந்தும் காணப்படுகிறது. அதே நேரம் காலநிலையில் ஏற்படுகின்ற மாற்றங்களும் உலக நாடுகளின் பொருளாதாரத்தை அல்லது விவசாயத் துறையை மிக மோசமாகப் பாதித்துக் கொண்டிருக்கிறது.

ஆகவே பெற்றோலிய விலையின் சீரடைவும் காலநிலையில் ஏற்படுகின்ற முன்னேற்றமும்தான் இந்த நெருக்கடி நீண்ட காலம் நீடிக்கப் போகின்றதா அல்லது மிக விரைவாக முடிந்து விடுமா என்பதைத் தீர்மானிக்கும் சக்திகளாக இருக்கப் போகின்றன.

***கேள்வி: உலகப் பொருளாதார நெருக்கடியினால் இலங்கையில் ஏற்பட்ட தாக்கங்கள் என்ன?***

பதில்: இலங்கையினது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக பார்க்கையில் கிட்டத்தட்ட 70 வீதம் வர்த்தகத்தில் தங்கியுள்ள ஒரு நாடு. இலங்கையில் பங்குச் சந்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வளவு பெரிதாக வளர்ச்சியடையவில்லை. ஆகவே பங்குச் சந்தையில் ஏற்பட்ட தளம்பல் இலங்கைப் பொருளாதாரத்தில் பாதிப்பை ஏற்படுத்தவில்லை.

பெற்றோலியத்தில் இலங்கை நூறுவீதம் தங்கியுள்ளது. பெற்றோலிய விலை அதிகரிப்பு இலங்கைப் பொருளதாரத்தைப் பாதிக்கின்றது. அடுத்ததாக இலங்கையின் விவசாயத்துறை ஓரளவு ஆரோக்கியமானது. இலங்கை தமது மக்களுக்கு உணவினைக் கொடுக்கக் கூடிய நிலையில்தான் இருக்கிறது. இலங்கை பாரியளவு கைத்தொழில் ஏற்றுமதிகளிலும் இலத்திரனியல்/மின்னியல் பொருட்களை ஏற்றுமதி செய்யக்கூடிய நிலையிலும் இல்லை.

ஆகவே இலங்கைப் பொருளாதாரம் ஒரு கலப்பாக இருக்கிறது. விவசாயத்துறை உறுதியாக இருக்கிறது பங்குச் சந்தையும் பெரியளவு உறுதியாகவில்லை. ஆனால் பெற்றோலியமும் பிரச்சினையாக உள்ளது. எனவே கலந்த ஒரு தன்மையை இலங்கை கொண்டிருக்கிறது.

உலகப் பொருளாதார நெருக்கடியால் இலங்கை பொருளாதாரத்தில் தாக்கம் ஏற்படும் என்பதைவிட, இலங்கை யுத்தத்தினால் 30 வருடம் பாதிக்கப்பட்ட நாடு. யுத்த காலத்தில் பாதுகாப்புச் செலவிற்காக ஒதுக்கப்பட்ட சேவைத் துறைக்காக செலவிடப்பட்டதனால் பொருளாதாரம் வளர்ந்து கொண்டிருந்தது போலத்தான் தோற்றமளித்தது. சுனாமி தாக்கத்தினால் பெரியளவில் அழிவினை இலங்கை எதிர்கொண்டிருந்தாலும், அப்போது கிடைத்த வெளிநாட்டு நிதியினால் பலமடைந்தது. டொலர், வெளிநாட்டு முதலீடுகள் என்பன இலங்கைக்குள் வந்தபடியினாலும் இலங்கைப் பொருளாதாரம் உறுதியாக இருந்தது.

தற்போது யுத்தத்திற்குப் பின்னர் கட்டுமானத் துறைக்கு இலங்கை பாரியளவு முதலீடுகளைச் செய்கிறது. ஆகவே பொருளாதாரம் வளர்ச்சியடைவது போலத்தான் இருக்கிறது. தற்போது 8 வீத பொருளாதார வளர்ச்சியாக காணப்படுகிறது. ஆனால் இது எவ்வளவு காலத்திற்கு நீடிக்கும் என்பதைக் கூறமுடியாது. எவ்வளவு காலத்திற்கு இவ்வாறு செலவுகளைச் செய்யலாம். நிதி மூலங்களைத் திரட்டலாம் என்பது கேள்விக்குறியாகவுள்ளது.

ஏனென்றால் வெளிநாட்டு அந்நிய முதலீடுகள் இலங்கைக்குப் பெரிதாக வருவது குறைவு. Manufacturing Company, Car, Mobile Companies என இந்தியாவிற்குள் முதலீடுகள் வருவது போல இலங்கைக்கு முதலிடப்படுவதில்லை. அவை நீண்டகாலம் நிலைத்திருக்கக் கூடியவை. ஆனால் கட்டுமானத்துறையின் தாக்கம் பொருளாதாரத் துறையில் நீண்ட காலம் தொடர்வதில்லை. இதனால் இலங்கைப் பொருளாதாரத்தில் ஒரு குழப்ப நிலை நீடிக்கிறது. தெளிவான பார்வையில்லை. வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு இலங்கையில் சென்று முதலீடு செய்யலாம் என்ற செய்தி சென்று சேரவில்லை. பொருளாதாரம் எவ்வாறு இருக்கும் என எங்களுக்கெல்லாம் ஒரு குழப்பமாகவுள்ளது.

பெற்றோலியத்தில் இலங்கை 100 வீதம் தங்கியிருக்கிறது. எனவே உலகப் பொருளாதார நெருக்கடியினால் பெற்றோலிய அதிகளவு அதிகரிக்குமானால் இலங்கை பெரிதும் பாதிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்ததாக இலங்கைப் பொருளாதாரத்தில் தாக்கம் செலுத்தும் அடுத்த காரணி வெளிநாட்டிலிருந்து இலங்கையர்கள் அனுப்பும் அந்நியச் செலாவணி. இது ஒரு முக்கிய கருவியாக இலங்கைப் பொருளாதாரத்தில் இருக்கிறது. அதற்கு ஏதாவது உலகப் பொருளாதாரத்தினூடாக பாதிப்பு ஏற்பட்டாலும் இலங்கை பெரிதும் பிரச்சினையைச் சந்திக்கலாம். ஜோர்தான் போன்று மத்திய கிழக்கு நாடுகளிலிருந்தும், ஏனைய நாடுகளிலிருந்தும் இலங்கையர்கள் மீளத் திருப்பப்பட்டால் சிக்கல் ஏற்படும்.

பெற்றோலிய அதிகரிப்பு, வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு மீண்டும் அனுப்பப்படல் மற்றும் உல்லாசப் பிரயாணிகளின் வருகை குறைதல் போன்றன இலங்கையில் ஏற்பட்டால் பொருளாதார விளைவு பாதகமாக அமையும். மற்றும்படி உணவுக்கு இலங்கை கஷ்டப்படாது. விவசாயத்துறை பாதிப்புக்குள்ளாவது இலங்கையில் குறைவாக காணப்படுகிறது. நதி, ஆறு, குளம், மழை வீழ்ச்சி என்பன சுமுகமாக காணப்படுவதால் அந்நிலை ஏற்படும் வாய்ப்புக்கள் குறைவு. உலகப் பொருளாதார நெருக்கடியினால் பாரிய நெருக்கடியை சந்தித்தாலும் விவசாயத்துறை பாதுகாப்பாக இருப்பதினால் பட்டினியை இலங்கை எதிர்நோக்கமாட்டாது.

***கேள்வி: இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலைக்கு என்ன காரணம் என நீங்கள் நினைக்கிறீர்கள்?***

பதில்: ஒரு குழப்பமாக இருக்கிறது. பொருளாதாரம் சம்பந்தமாக பொருளியலாளர்கள் ஆலோசனை செய்து சுயாதீனமாக செயற்பட்டால் இந்தப் பிரச்சினைகள் வரும் வாய்ப்புக்கள் குறைவு. தலையீடுகள் அதிகரிக்கின்றமை பெரிய காரணியாக விளங்குகிறது. ஒருவராலும் சுதந்திரமாக முன்னோக்கி நகர முடியவில்லை.

***கேள்வி: இலங்கை தற்போது சந்தித்துள்ள பொருளாதார நிலையிலிருந்து மீளக்கூடிய நிலை உள்ளதா?***

பதில்: அதில் இரண்டு விடயங்கள் முக்கியமாகவுள்ளன. உள்நாட்டில் இருக்கக்கூடிய காரணிகளை சீர்திருத்துததல் மற்றது இன நல்லிணக்கத்தினை ஏற்படுத்தி நிரந்தர தீர்வினை ஏற்படுத்துதல் என்பனவாகும். உள்நாட்டினைப் பொறுத்தவரையில், பொருளாதாரத்தைப் பலப்படுத்துதல், வருமானத்தை அதிகரிக்கும் வழிகளை மேற்கொள்ளல், செலவினை வினைத்திறனுடன் செய்தல், நட்டமான கம்பெனிகளை மூடுதல் அல்லது வினைத்திறனுடன் செயற்படுத்தல், வரவு- செலவுப் பற்றாக்குறையைக் குறைத்தல் என்பன கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

சட்டம்தான் உன்னதமானது என உள்நாட்டிற்கும் வெளிநாட்டிற்கும் பறைசாற்றுதல், வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிக்க நடவடிக்கை எடுத்தல் என்பனவும் இலங்கைப் பொருளாதாரம் எழுச்சி பெற உதவும். வெளிநாட்டுக் காரணிகள் எமது கட்டுப்பாட்டிற்குள் இல்லாதபடியால், இக் கேள்விக்குரிய பதிலை தெளிவாக கூறமுடியாது. லிபியாவில் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் ஏற்படுகின்ற புரட்சியினால் இலங்கைப் பொருளாதாரத்திற்கு பாதிப்பு ஏற்படலாம். இவை எமது கைகளுக்கு அப்பாற்பட்டவை. அவை எப்படி நகரும் என்பதனை கூறுவது கடினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கேள்வி: *தமிழ் மக்களின் பொருளாதாரத்தை வளர்ப்பதற்கு என்ன செய்ய வேண்டும்?***

பதில்: இந்த முப்பது வருட யுத்தத்தினால் சிங்கள மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். முஸ்லிம் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் தமிழ் மக்களுக்குள்ளேதான் யுத்தம் நடைபெற்றது. தமிழ் மக்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய பொருளாதாரம் பாதிக்கப்பட்டிருக்கிறது. கல்வி பாதிக்கப்பட்டிருக்கிறது. வீடுகள் எல்லாம் உடைக்கப்பட்டு தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. உயிரிழப்புக்கள், அங்கவீனம் ஆக்கப் பட்டமை என்பன தமிழ் மக்களுக்கு அதிகமாக இடம்பெற்றுள்ளது.

தற்போது தமிழ் மக்களுக்குப் பாரிய உதவி தேவைப்படுகிறது. உயிரிழப்புகளுக்கு நஷ்டஈடுகள், அங்கவீனர்களுக்குரிய தொழில் வாய்ப்புக்கள், வீடில்லாதவர்களுக்கு வீடுகள், தொழில் இழந்தவர்களுக்கு தொழில்களைப் பெற்றுக்கொடுத்தல், இவற்றை தாங்களாகவே செய்யப் பணிக்க முடியாது. இவை தமிழ்மக்களுக்கு வெளியில் இருந்து வரவேண்டிய உதவிகள். இதற்கு அரசாங்கத்தின் பங்களிப்புக்கள் அதிகம் அவசியம். அதற்கு இன நல்லிணக்கம் என்பது முக்கியமானது. அனைவரும் ஒன்றிணைந்து தான் அடுத்த கட்டத்திற்கு செல்ல வேண்டும். ஆனால் அவை உரிய தளத்தில் செல்வதாக எனக்குத் தெரியவில்லை.

அரசாங்கத்தின் மீது குற்றம்சாட்டுவதைவிட தமிழ் மக்கள் என்ன நிலையில் இருக்கிறார்கள் என்பது முக்கியம். இன்னுமொரு முரண்பாடான சூழ்நிலைக்கு செல்லப் போக்கிறார்களா? அல்லது அரசியல் தீர்வினைப் பெற்றுக்கொண்டு அதனை எவ்வாறு பயன்டுத்தப் போகிறோம்? பாதிக்கப்பட்ட மக்கள், முடிவெடுக்கும் குழு, வெளிநாடு என மூன்று சாரார் எவ்வாறு மக்களின் யதார்த்த நிலையைப் புரிந்துகொண்டு தீர்வுகாணப் போகிறார்கள் என்பது ஒரு குழப்ப நிலையைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

அரசியல் தீர்வு ஒரு பக்கம் அணுகப்பட, பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினை தனியாக அணுகப்பட வேண்டும். இந்த நிலையில் புலம்பெயர்ந்த தமிழர்கள் பலமாக இருந்தாலும் அவர்கள் இலங்கை அரசாங்கத்துடன் முரண்பட்ட நிலையைக் கடைப்பிடிப்பதால் அர சாங்கத்தினூடாக சில விஷயங்களை செய்ய முடியாமல் இருக்கிறது. இதற்காக புலம்பெயர் தமிழர்களை அரசாங்கத்தின் பக்கம் போகும்படி நான் கூறவில்லை. முரண்பாடு தொடர்ந்தால் பாதிக்கப்பட்டு, களத்தில் நிற்கின்ற மக்களுக்கு இழந்ததை கட்டியெழுப்புவதற்கு தொடர்ந்தும் சிக்கல் நிலை நீடிக்கும். இவை பற்றி அரசாங்கமும் தமிழ்த் தரப்பும் கலந்து பேசி முற்றுப்புள்ளி வைக்காவிட்டால், தமிழ் மக்களுடைய நிலைமை இன்னும் நீண்ட காலத்திற்கு சிக்கலுக்குரியதாகவும் வேதனைக்குரியதாகவும் தான் இருக்கப் போகிறது.

குறிப்பாக வீடுகளை இழந்தும், விவசாய வயல் நிலங்களை இழந்திருக்கிறார்கள். மீன் பிடிக்க கடல் தொழிலாளர் கடலுக்கு செல்ல முடியாமல் துன்பப்படுகிறார்கள். கணவன்மார்களை இழந்து நிர்க்கதியாக்கப்பட்டிருக்கிறார்கள். அங்கவீனமாக்கப் பட்டிருக்கிறார்கள் என ஆயிரக்கணக்கான மக்கள் அடிப்படையே இல்லாமல் இருக்கும் நிலை தொடர்ந்து வருகிறது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நஷ்ட ஈடுகளை வழங்கி அடுத்த கட்டத்திற்கு அவர்களின் வாழ்வாதார நடவடிக்கையை நகர்த்திச் செல்ல வேண்டும். இவ்வாறு பொருளாதாரமே இல்லாத பட்சத்தில் அதனைப் பற்றி பேச முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***கேள்வி: முதலாளித்துவ பொருளாதாரத்தின் பிரதான குறைபாடாக சுட்டிக்காட்டப்படுவது, அடிநிலை மக்களின் நலன்களை அது கவனிப்பதில்லை என்பதாகும். இதுபற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?***

பதில்: இதில் எனக்கும் உடன்பாடு இருக்கின்றது. முதலாளித்துவம், பொருளாதாரம் கவனிப்பதில்லை என்பதைவிட, முதலாளித்துவப் பொருளாதாரத்தை அமுல்படுத்து பவர்களிடம் தான் இந்தப் பிழை காணப்படுகிறது. பணக்காரர்களை ஏழைகளாக மாற்றாமல், ஏழைகளைப் பணக்காரர்களாக மாற்றுவது என்பது தான் என்னுடைய சித்தாந்தம். இதற்கு முதலாளித்துவ பொருளாதாரத்தில் நிறைய வழிகள் இருக்கின்றன.

குறிப்பாக சீனாவை எடுத்துக்கொண்டால் சீனா உலகமயமாக்கல் பொருளாதாரத்தில் இணைந்த பிறகு, 50 வீதமான கிராமிய வறுமை குறைக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்தியா வால் அது முடியவில்லை. இந்தியாவில் வறுமை குறைக்கப்படவில்லை. ஆகவே பொருளாதார வளர்ச்சியை அடிமட்ட மக்களுக்கு கொண்டு செல்ல வேண்டிய கடமை அரசாங்கத்துக்கு இருக்கிறது. அதை சில நாடுகள் செய்கின்றன. சில நாடுகள் செய்யவில்லை.

ஆகவே ஒட்டுமொத்தமாக முதலாளித்துவ பொருளாதார முறையில் குறை சொல்லி விட முடியாது. நான் முதலாளித்துவ பொருளாதார முறையை என்று கூற விரும்ப வில்லை. ஏனென்றால் இங்கு கலப்பு பொருளாதாரம் என்றோ சோசலிஸ பொருளாதாரம் என்றோ முதலாளித்துவ பொருளாதாரம் என்றோ உலகில் ஒன்றுமில்லை. அவர்கள் அவர்களுக்கு ஏற்றபடி பொருளாதாரக் கொள்கைகளை வகுத்துக் கொண்டு போகிறார்கள். தனித்தனியாக வரைவிலக்கணப்படுத்த முடியாமல் இருக்கிறது. ஆகவே பிழைகளுக்கு பொருளாதார முறைமைகளை குற்றம் சாட்டுவது முறையல்ல.

ஏன் நான் இப்படி கூறுகின்றேன் என்றால் முதலாளித்துவ பொருளாதாரம் சீராக கடைப்பிடிக்கப்படுவதாக இருந்தால், அங்கு அரசாங்கம் நடைமுறையில் இருக்காது. ஏனென்றால் அனைத்தும் தனியுடைமை ஆக்கப்படும். ஆனால் அமெரிக்காவில் அர சாங்கம் கடுமையாக பொருளாதாரத்தில் தலையிடுகிறது. ஆகவே முதலாளித்துவ பொருளாதாரம், சோசலிஸ பொருளாதாரம் என்று கதைப்பதற்கு எனக்கு உடன்பாடில்லை. சந்திரிகா அம்மையார் வாக்குறுதி கொடுத்தாகள் சோசலிஸ பொருளாதாரத்திற்கு திரும்ப மாட்டேன் என்று. ஆனால் S.L.F.P கட்சியானது ஐக்கிய தேசியக் கட்சியின் முதலாளித்துவ கொள்கைக்கு எதிரானது என்றுதான் கூறப்பட்டது. ஆனால் இன்று இரண்டு கட்சிக்கும் எந்தவித வித்தியாசமும் எனக்குத் தெரியவில்லை. தங்களுக்கு தங்களுக்கு விரும்பிய மாதிரி பொருளாதாரக் கொள்கையை வகுத்துக்கொண்டு போகிறார்கள். S.L.F.P சோசலி சத்துக்கு சார்பான கட்சி. U.N.P முதலாளித்துவத்திற்கு சார்பான கட்சி என்றோ ஒன்றும் கிடையாது. சகலதும் மாறிவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாசம்

**- ப. கபிலன் -**

கமலா.....கமலா.......

என்று கூப்பிட்டவாறே உள்ளே நுழைந்தார் முருகையா.

'என்னங்க இண்டைக்கு வேலை நேரத்திற்கே முடிஞ்சிட்டுதா' என்றவாறு கணவனை எதிர்கொண்டாள் கமலம்.

'ஓம் கமலம் இண்டைக்கு வேலை ஒண்டும் பெரிசா வரேல்ல. உவன் கதிர் எங்க போய்ரான்'

'அவன் உங்கால பொடியளோடை விளையாடப் போனவன். வரேல்ல. நாளைக்கு பள்ளிக்கூடத்துக்கு ஏதோ காசு கட்டோணுமாம். நீங்க வந்தா சொல்லச் சொன்னவன்'

என்று இழுத்தாள் கமலம்.

'காசு.. காசு.. என்றா எங்க கமலம் போறது .. சரி .. சரி.. நாளைக்குப் பாப்பம்'

என்றவாறு கொடியில் கிடந்த துண்டை எடுத்து தோளில் போட்டுக்கொண்டு கிணற்றடியை நோக்கி நடந்தார் முருகேசு. காசு கேட்டவனாமே என்ன செய்வது என்று யோசித்துக்கொண்டே கிணற்றில் வாளியைப் போட்டார்.

முருகையாவுக்கு இப்போது ஐம்பத்தி மூன்று வயது. டவனிலே கூலிக்கு மூட்டை சுமப்பதுதான் அவர் தொழில். முருகையா, கமலம், கதிர் இதுதான் முருகையாவின் குடும்பம். மகன் கதிர் டவுனிலே பிரபல்யமான பாடசாலை ஒன்றில் தரம் பதின்மூன்றில் கல்வி கற்று வருகின்றான். எப்படியாவது தனது மகனை ஒரு வைத்தியராக்க வேண்டும் என்பதே முருகையாவின் இலட்சியம். அதற்காகத் தான் தன் நலத்தைக் கூட பொருட்படுத்தாது, வயது முதிர்ந்த காலத்தில் கூட கஷ்டப்பட்டு உழைக்கின்றார். ஆனால் முருகையாவுக்கும் கதிருக்கும் ஒரு கோட்டில் போகாது. தினம் தினம் சண்டைதான். இதனால் இருவரும் பெரிதாக பேசிக்கொள்வதில்லை. அதனால் தான் காசைக் கூட தந்தையிடம் நேரடியாகக் கேட்காது தாய் மூலம் கேட்டிருக்கின்றான்.

வீட்டுப் படலை திறக்கப்பட்டது. சைக்கிள் ஒன்று உள்ளே எட்டிப் பார்த்தது. அது வேறுயாரும் இல்லை கதிர்தான். விளையாடிக் களைத்து வந்திருந்தான்.

'டேய் இவ்வளவு நேரமும் எங்க போனனி. அப்பர் கத்திக் கொண்டிருக்கிறார் போய் வேண்டு'

பதறிப் போனான் கதிர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வந்துட்டாரா..? எத்தின மணிக்கு வந்தவர்..? இண்டைக்கு வேல இல்லயாமா..?

கேள்விகளை அடுக்கினான் கதிர்.

'அவர் நாலு மணிக்கே வந்திட்டார். நீ போய் புத்தகத்த எடுத்துப் படி'

என்று மகனுக்கு ஐடியா கொடுத்துவிட்டு சமையலறையை நோக்கி விரைந்தாள் கமலம். கதிர் நினைத்தது போலவோ அல்லது கமலம் நினைத்தது போலவோ முருகையா எதுவும் பேசவில்லை. இரவுச்சாப்பாடும் முடிந்தது. முருகதாசர் அப்பொழுதான் பேசத் தொடங்கினார். 'படிக்கிற வயசில உனக்கென்னடா விளையாட்டு வேண்டிக் கிடக்கு. படிக்கிற திறத்தில விளையாட்டா வேணும் உனக்கு'

'இதுதான் விளையாடுற வயது. இதவிட்டா பிறகு எப்ப விளையாடுறது'

தந்தையின் கருத்தை எதிர்த்தான் கதிர்.

'ரெண்டு வருசம் விளையாடாம இருந்தா குறைஞ்சா போடுவ. எப்பப் பார்த்தாலும் விளையாட்டு விளையாட்டு. இந்தத் திறத்தில காசு வேற. உனக்காகவே தனிய உழைக்க வேண்டி இருக்கு' ஆத்திரத்தில் கொட்டித் தீர்த்தார் முருகையா.

'ஏன் என்ன வச்சு சமைச்சுப் போடுறது உங்களுக்கு கஸ்ரமா இருக்கா?'

என்று கேட்டான் கதிர். முருகையா எதுவும் பேசவில்லை. ஆனால் கதிர் இப்படி ஒரு சம்பவத்தைத்தான் எதிாபார்த்துக்கொண்டிருந்தான். காரணம் அவனுடன் படிக்கும் ஏனைய நண்பர்களைப் போல தானும் தனி வீட்டில் தங்கி சுதந்திரமாக உல்லாசமாக படிக்க வேண்டும் என்பதே அவன் எண்ணம். ஆனால் அப்படிப் படிக்கும் அவன் நண்பர்கள் படிப்பதே இல்லை. உல்லாச வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தார்கள். அப்படி ஒரு வாழ்க்கையைத்தான் கதிர் விரும்பினான்.

நாளை பணத்தையும் வாங்கிக்கொண்டு சொல்லிவிட்டுச் செல்வோம் என்றுதான் எண்ணி இருந்தான். ஆனால் இப்படி ஒரு சம்பவம் அவன் தன்னில் பிழை காட்டிக் கொள்ளாது வீட்டை விட்டு வெளியே செல்ல ஏற்றதாக அமைந்தது. அதனால் நிறுத்திய பேச்சை மீண்டும் தொடங்கினான்.

'சொல்லுங்கோ நான் இங்க இருக்கிறது கஸ்ரமா இருக்கா'

மீண்டும் மீண்டும் கேட்டான் கதிர். முருகையா எதுவும் பேசவில்லை. நின்றால் வேலைக்காகாது என்று எண்ணிய கதிர் தன்னுடைய பையையும் தூக்கிக்கொண்டு வெளியே புறப்படும்போது தான் தாய் கமலம் ஓடி வந்தாள்.

'என்ன தம்பி எங்கடா போற? அப்பா ஏதோ கோவத்தில பேசிட்டார்டா'

என்றவாறு கதிரின் கையைப் பிடித்து தடுத்து நிறுத்தினாள். தாயின் கையையும் உதறித் தள்ளிவிட்டு வீட்டை விட்டு வெளியேறினான். கமலம் கதறி அழுது கூப்பிட்டும் அவன் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. அழுதுகொண்டே அந்த இராப்பொழுதைக் கழித்தாள் கமலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுது புலர்ந்தது. வேயப்பட்ட கிடுகுகளின் இடுக்குகளின் ஊடாக பாய்ந்த சூரியனின் பொற்கதிர் முருகையாவின் உறக்கத்தைக் கலைத்தது. காலைக் கடன்களை முடித்து விட்டு கமலத்தையும் அழைத்துக்கொண்டு மகனைக் காணச் சென்றார். அங்கு இருவருக்கும் நல்ல மரியாதை. அவமானப்பட்டு வீடு திரும்பினார்கள்.

நாட்கள் உருண்டோடின. உயர்தரப் பரீட்சையும் முடிந்துபரீட்சைப் பெறுபேறுகளும் வெளியானது. கதிரின் முடிவு திருப்தியானதாக இருக்கவில்லை. ஆனால் அவன் நண்பர்கள் எப்படியோ உயர் கல்வி கற்க பல்கலைக்கழகம் சென்றுவிட்டார்கள். ஆனால் கதிரினால் எதுவும் செய்யமுடியவில்லை. கையில் காசு கூட இருக்கவில்லை. ஒருநாள் பட்டினி, இரண்டு நாள் பட்டினி. அவனால் முடியவில்லை. சனநெரிசல் மிக்க பேரூந்து ஒன்றில் ஏறி குழந்தையின் கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலியை அறுத்தான். தொழில்செய்து பழக்கம் இருந்தால் தானே பிடிபடாமல் இருக்க. யாரோ ஒரு பிரயாணி பார்த்து விட்டான்.

கதிர் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு நீதிமன்றத்திற்கு கொண்டு வரப்பட்டு கூண்டிலே கூனிக் குறுகி நின்றான். அந்தக் கொடுமையைக் காண முருகையாவும் கமலமும் கூட வந்திருந்தார்கள். குற்றவாளி கதிருக்கு ஐந்து ஆண்டு சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. கையிலே விலங்கு மாட்டி பொலிஸ் பாதுகாப்பில் சிறைக்கு அழைத்துச் செல்லப் பட்டான்.

முருகையாவின் கனவுகள், கற்பனைக் கோட்டைகள் எல்லாம் சிதைந்தபோக நெஞ்சைப் பிடித்துக்கொண்டு நிலத்தில் சரிந்தார் முருகையா. மகனுக்காகவே வாழ்ந்த அவர் ஆன்மா உடலை விட்டுப் பிரிந்தது. கணவனின் உடலை மடியில் வைத்துக்கொண்டு யாரை நினைத்து அழுவது என்று விரக்தியாக நீதிமன்ற வாயிலிலே அமர்ந்திருந்தாள் கமலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயச்சுமை

வட்டூர் மருதுவேல் சிவா

என்.............
இதயச் சுமையை
இறக்கி வைத்து
இளைப்பாறுகின்றேன்............

இளைய தலைமுறைகளின்
இன்றைய நாகரீகம்
இதயக் குமுறலாய்
இருப்பது நிஜமே.............

மாணவ மணிகளின்
மானமற்ற சேஷ்டைகள்
மனித நேயமற்ற ஒழுக்கக் கேடுகள்
புனிதமற்ற கல்வி கற்றல்...............

பகிடி வதைகள்
பாலியல் சிதைவுகள்
பண்பில்லா பழக்கவழக்கங்கள்
போலிக் கௌரவங்கள்
பொய்யான எதிர்காலங்கள்.........

சீருடை வெண்மை தான்
சீர்தூக்கிப் பார்த்தால்
சிதைந்து போவது
கல்வி மட்டுமல்ல
கலாச்சாரமுமே .........
சிந்திக்க வேண்டியவை .........

கணனி கல்விக்கோர்
கலங்கரை விளக்கம்
கண்ணியமாய் கற்றால்.............
இளம் பருவக் கல்வி
இனிய மென் பறவை போன்றது
இதமாக தடவிக் கொடுத்தால்
சரணடைந்து சாந்தி பெறும்........
அழுத்திப் பிடித்தால்
மூச்சு முட்டி இறந்து விடும்..........
தளர்த்திப் பிடித்தால்
தப்பித்து ஓடி விடும்...........

பள்ளிப் பருவம்
பசுமையானவை
இனிய தேனூறும்
நினைவுகள்
அலைபாயும்........
வரம்பெனும் கடிவாளமிட்டு
அடக்குங்கள்..........

ஆழமாக கல்வியில்
கவனம் செலுத்துங்கள்
நீங்கள் உயர்வடைவதை
யாராலும் தடுக்க முடியாது

மாணவ சமுதாயமே...........
எதிர்காலத்தில்
இந் நாட்டை செதுக்கப்போகும்
சிற்பிகளே...........

உலகுக்கு
கோடி நன்மை தருகின்ற
சூரியனைப் போன்ற
பிரகாசமுடைய
உங்கள் கண்களில்
இருந்து.............

தீயனவெல்லாம் சுட்டு பொசுங்கட்டும்
நன்மைகள் நன்றே பிறக்கட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு அடிமையின் கனவு

**ஆங்கில மொழிமூலம்:** H.W. Longfellow **தமிழில்: தமிழினி - யோதிலிங்கம்**

அவன் திரட்டிப் போடாத அந்த நெற்கதிர்களின் அருகில்,
கைகளில் அவனது அரிவாளோடு
கூடவே அவன் திறந்த மார்பும் சிதழுறும் தலைமயிரும்
மண்ணுள் புதைக்கப்பட்டன
உறக்கத்தின் நிழலுள்ளிருந்தும், மூடுபனியுள்ளிருந்தும்
மறுபடியும், அவன் தன் பூர்வீக நிலத்தைப் பார்த்தான்

அவன் கனவுகளின் வனப்புமிகு நிலப்பரப்பின் ஊடாக,
செருக்கு மிகு கம்பீரத்துடன் நைஜர் (Niger) அருவி பாய்ந்தோடியது
தாழ்நிலைச் சமவெளியின் மேலிருந்த பாம் (Palm) மரங்களின் அடியில்
மீண்டும் ஒருமுறை ஒரு அரசனின் அகல வைத்த நீண்ட நடையுடன் நடந்தவன்,
இறங்கிச் செல்லும் மலைவீதி வழியே ஏறிவரும்
கூண்டு வண்டிகளின் சிறு மணியோசையைக் கேட்டான்

தன் குழந்தைகள் சூழ நின்று கொண்டிருக்கையில்,
அவன் மீண்டும் ஒருமுறை, கருநிறக் கண்களையுடைய தன் தேவியைக் கண்டான்
அவர்கள் அவன் கழுத்தை இறுகத் தழுவி கன்னங்களில் முத்தமிட்டனர்
கூடவே தங்கள் கைகளுடன் அவனைப் பிணைத்துக் கொண்டனர்.
உறக்கத்தில் ஆழ்ந்திருந்தவனின் கூடிய கண் மடலினூடே கண்ணீர்த் துளியொன்று
வெடித்துச் சிதறி மண்ணுள் வீழ்ந்தது.

அதன் பின்னர் மூர்க்கமான வேகத்துடன்,
நைஜர் (Niger) அருவியின்
அணைக்கட்டு நெடுகிலும் அவன் சவாரி செய்தான்.
நேர்த்திமிகு பொற் சங்கிலிகளும், போருக்கேயுரித்தான உரத்த சத்தமும் கொண்டு
உருவாக்கப்பட்டிருந்தன. அவன் கடிவாள வார்கள்.
ஒவ்வொரு தாவலிலும் தன் ஆண்குதிரையின்
விலாவின் பக்கவாட்டில் மோதிக்கொண்டிருந்த
தன் உருக்கு வாளுறையின் உராய்வை அவனால்
உணரமுடிந்தது.

அவன் முன்னே இரத்தச் சிவப்புக் கொடிபோல்
ஒளி பொருந்திய பிரகாசத்துடன் நீர் நாரைகள் பறந்தன.
காலை தொடங்கி இரவுவரை அவற்றின் பறத்தலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் தொடர்ந்தான் அவன்
புளிய மரங்கள் செழித்து வளரும் சமவெளிகளின் மேலாக.
கபீர்களின் (Kaffir) குடில்களின் கூரைகளை அவன் காணும் வரை.......
கூடவே பெருங்கடலும் நோக்கும் பொருட்டு முனைந்தெழுந்தது.

அன்றிரவில் சிங்கத்தின் பெருங்கர்ச்சனையையும்
கழுதைப் புலியின் அலறலின் அதிர் குரலையும் அவன் கேட்டான்.
நாணற் புதிர் வழியே அவன் நெரிந்து வருகையில்,
மறைவான நீரோடையொன்றின் பக்கத்திலிருந்து
முரசொன்றின் சிறப்பு மிகு சந்த இயங்குதல் போல்
நீர்யானையொன்று கடந்து சென்றது
அவன் கனவின் வெற்றியின் ஆரவாரத்தினூடே...............

அடவிகள் நமது எண்ணிலடங்கா நாக்குகளினால்,
சுதந்திர உரிமையுடன் ஆர்ப்பரித்தன..........
உணர்ச்சி வழியும். வரம்பற்ற ஒருகுரலில்
பாலைவனத்து அனல்காற்றும் உரத்த சப்தத்துடன் கதறி அழுதது

அவற்றின் கடுங்கொந்தளிப்புமிகு மகிழ்ச்சி ஆரவாரத்தைப் பார்த்து
அவன் உறக்கத்தில் சிரிக்க ஆரம்பித்தான்.

வண்டியோட்டியின் சாட்டையின் சொடுக்கையும்
அவன் உணர்ந்து கொள்ளவில்லை,
அந்நாளின் சுட்டெரிக்கும் வெப்பத்தையும் உணரவில்லை
மரணம். துயிலின் தரையை ஒளிர்வித்தது.
அவன் உயிரற்ற உடல் மண்ணில் வீழ்ந்து கிடந்தது
ஒரு தேய்ந்துபோன பிளந்த கால்விலங்காக அந்த ஆத்மா
தடயமின்றித் தகர்க்கப்பட்டு எட்டாத் தொலைவிற்குத் தூக்கி எறியப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்தன் பெயராலே.............

ஆங்கில மொழிமூலம்: Grace Nicholas*
தமிழில்: தமிழினி – யோதிலிங்கம்

அடிவயிற்றில் அழுத்தும் சுமையுடன் குழந்தை
கருப்பை
இருள் தோய்ந்த நிலவின்
ஓர் ஒளிவளைவு.
கால் அகட்டி நான் குந்தியிருந்தேன்
வாடிய வாழையிலைகளின் மேலாக.
பூமிக்கும் கட்டளையிட்டேன்
உன்னை ஏற்றுக்கொள்ளும்படி.
எந்தன் பெயராலே
எந்தன் உதிரத்தாலே
உன்னை ஏற்றுக்கொள்ளும்படி.
என் சுருள்வுறு அவரைக் கொடி
என் கறைபட்டுப் பழிசேர்ந்த முழுமைநிறை குழந்தை
என் முறைகேட்டுச் செயல்விளைவு
என் இளம்பயிர்
என் ஊசியிலைக் குத்துச்செடி
என் விசித்திரக் கலப்பினத் தோன்றல் ·
என் சின்ன உதிர உறவு
அடர்ந்த புற்களுள் வழுக்கிச் செல்லும் பாம்பு
உன் கண்முன் வந்து விழும்படி செய்
தன் தடம் வழியே '(மட்டத்) தேள்'
வளைந்து நெளியவும், மடிப்புற்றுச் சுருங்கவும் விடு.
'கெடுதி' தன் பார்வையை உன்மீது பரப்பு முன்னரே
அது தன் குரல்வளையைத் தானே
நெரித்துத் திணறும் படி விடு.
என் உதிரத்தால்
நான் உன்னைக் கழுவி தூய்மையாக்கினேன்
என் கண்ணீர்த் துளிகளால்
நைஜர் நதியினை நிரப்பினேன்
என் இனிமையானவளே
இப்பொழுது
இது உனக்குத்தான்
நீராடுவதற்கும்
நீந்தி விளையாடுவதற்குமாக..........

Grace Nicholas: இவர் கயானாவில் (Guyana) பிறந்து வளர்ந்தவர். 1977ஆம் ஆண்டில் பிரித்தானியாவில் குடியேறியதிலிருந்து Lewes நகரில் வசித்து வருகிறார். 1983ஆம் ஆண்டு பொதுநலவாய அமைப்பின் கவிதைக்கான பரிசு 'I is a long - memoried woman' என்ற இவரது தொகுப்புக்கு வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, 'The fat black woman's Poems', 'Lazy thoughts of a lazy woman' ஆகிய தொகுப்புக்களும் வெளிவந்தன. சிறுவர் இலக்கியத்திலும் அதிக ஈடுபாடுடைய இவர் 'Come on into my tropical garden', 'Give Yourself a hug' என்ற இரு சிறுவர் பாடல் தொகுப்புக்களையும் எழுதியுள்ளார். இவரது முதலாவது நாவல் 'Whole of a morning sky, 1986ஆம் ஆண்டு வெளிந்தது. இவை தவிர பல பாடல் திரட்டுக்களையும் இவர் பதிப்பித்துள்ளார். அவற்றுள் 'Poetry jump up', 'Can I buy a Slice of sky?', 'A Caribbeaqn dozen' ஆகியன முக்கியமானவையாகும். இவரின் அண்மைக்காலத் தொகுப்பான Sunris, Virago வினால் வெளியிடப்பட்டது. - தமிழினி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ழுயபு தமிழச் சங்கம்
நூலகம்

# ACA ACADEMY OF COMPUTING & ACCOUNTING

PROFESSIONALISM IN EDUCATION

## Grade 01-A/L வரையான

Tamil
English
and
Sinhala Medium

வகுப்புகள் அனைத்தும் ஒரே தளத்தில் நடைபெறுகின்றன.

மேலும்,

கணக்கீட்டு தொழில்சார் கற்கை நெறியான AAT (All Stages) and CMA (All Stages) நடைபெறுகின்றன.


**IT Classes**
ACA and IDM நிறுவனங்கள் இணைந்து நடாத்துகின்றன.

அனைத்து வயதினருக்குமான ***English*** வகுப்புகள்

## ACA Grafix

Revolution of Designing

55, St.Lucias Street,Colombo- 13 .
Tel: 0112335287



*We Undertake*
*All Kind Of Designing & Printing Works*

Printed by Kumaran Press (Pvt) Ltd. kumbhlk@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org